
# TNPSC THERVUPETTAGAM CURRENT AFFAIRS – JULY, 2017

www.tnpscthervupettagam.com







SHANKAR IAS ACADEMY™
Plot No.1742, Ist Floor, 18th Main Road, Anna Nagar, Chennai – 600 040.
Phone : 044-26216435, 64597222, 4353 3445, Mobile : 94441 66435
www.shankariasacademy.com

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

TNPSC Thervu Pettagam
Information is a Blessing
A Shankar IAS Academy Initiative

# பொருளடக்கம்


1. TNPSC துளிகள் .................... 3

2. தமிழ்நாடு செய்திகள் .................... 5

3. தேசியச் செய்திகள் .................... 7

4. சர்வதேசச் செய்திகள் .................... 23

5. பொருளாதாரச் செய்திகள் .................... 31

6. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் .................... 34

7. சுற்றுப்புறச்சூழல் .................... 43

8. மாநிலம் .................... 46

9. விளையாட்டுச்செய்திகள் .................... 57

10. இதரச் செய்திகள் .................... 61

# TNPSC துளிகள்

## டோக்லம் பீடபூமி

- டோக்லம், (டோங்லாங் என்றும் அழைக்கப்படுகிறது) பூடான், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் சந்திக்கும் முச்சந்தி (Tri Junction) பகுதி.
- இந்தப் பகுதி பூடான் மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் உரிமைகோரும் ஒரு சர்ச்சைக்குரிய பிரதேசமாகும்.
- இந்தியா மற்றும் சீனாவை பிரிக்கும் நாது லா கணவாயில் (Nathu La Pass) இருந்து சுமார் 15 கிமீ தொலைவில் அமைந்துள்ளது.




- டோக்லம் பீடபூமி ஆனது சும்பி பள்ளத்தாக்கின் (Chumbi Valley) ஒரு பகுதியாகும். சும்பி பள்ளத்தாக்கின் பெரும்பகுதி திபெத்தில் அமைந்துள்ளது.
- 1988 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் சீனாவும் பூடானும் இப்பிராந்தியத்தில் சமாதானத்தையும் நிலைப்பாட்டையும் தக்க வைத்துக் கொள்வதாக ஒப்புக் கொண்டன.
- 2017ஆம் ஆண்டு, டோக்லமின் ஒரு பகுதியில் சீனா சாலை கட்ட முயன்றது. இந்தச் செயல் இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையே உரசல்களை உண்டாக்கியது. இரு தரப்பும் அச்சுறுத்தல்களை விடுத்ததோடு பேச்சுவார்த்தைக்கும் அழைப்பு விடுத்தன.

## பிராந்தியப் பொருளாதாரக் கூட்டு உடன்பாடு (Regional Comprehensive Economic Partnership, RCEP)


- பிராந்தியப் பொருளாதாரக் கூட்டு உடன்பாடு என்பது ஆசியா - பசிபிக் பிராந்திய நாடுகளை

உள்ளடக்கிய பெரும் தடையற்ற வணிக ஒப்பந்தம் ஆகும்.

- இதன் உறுப்பினர்களாவன: இந்தியா, சீனா, ஜப்பான், தென் கொரியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் மட்டுமல்லாது மேலும் 10 ஆசியான் நாடுகளும் அடங்கும். (ஆசியானின் 10 உறுப்பினர்கள் - புருனே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம்).




- அறிவுசார்ந்த சொத்துகள் , முதலீடுகள் , சரக்கு மற்றும் சேவை , தொலைத்தொடர்பு மற்றும் இணைய வர்த்தகம் ஆகியவை ஆர்.சி.ஈ.பி உடன்பாட்டில் அடங்கும்.
- TPP வர்த்தக ஒப்பந்தத்திற்கு மாற்றாக RCEP கருதப்படுகிறது. டி.பி.பி எனப்படும் பசிபிக் பிராந்திய வர்த்தக உடன்படிக்கையில் அமெரிக்கா இடம்பெற்றுள்ளது, ஆனால் சீனா இல்லை.




- TPP இல்லாத நிலையில், RCEP உலகின் மிகப்பெரிய பிராந்திய வர்த்தக அமைப்பாகத் திகழும். பிராந்திய அமைப்பில், உலகின் 45 சதவீத மக்கள் தொகை உள்ளது, மேலும் 21.3 டிரில்லியன் டாலர் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் நிகழ்கிறது.

## இணையதளத்தில் அதிகம் ஸ்ட்ரீம் (Stream) செய்யப்பட்ட பாடல் -'டெஸ்பாசிடோ

- லூயிஸ் போன்சி (Luis Fonsi) மற்றும் டாடி யான்கீ (Daddy Yankee) இணைந்து உருவாக்கிய

'டெஸ்பாசிடோ (Despacito) என்ற பாடல் உலகில் இணையதளத்தில் அதிகம் ஸ்ட்ரீமிங் செய்யப்பட்ட பாடல் என்ற பெருமையை பெற்றுள்ளது.

- இது முந்தைய 'ஜஸ்டின் பிபர் (Justin Bieber) இன் சாதனையை முறியடித்துள்ளது.
- பூவேர்தோ ரீகோ (Puerto Rico) நாட்டைச் சேர்ந்த பாடகர் லூயிஸ் போன்சியின் இந்த ரேகேட்டன் (Reggaeton) வகை இசை, பெரும் பிரபலம் அடைந்துள்ளது .
- 'டெஸ்பாசிடோ அதன் அசல் மற்றும் ரீமிக்ஸ்ட் (Remixed) பதிப்புகளுடன் சேர்ந்து 4.6 பில்லியன் ஸ்ட்ரீம்களை எட்டியுள்ளது.
- ஜஸ்டின் பிபரின் 2015 ஆம் ஆண்டின் வெற்றி பாடல் சாரி (Sorry), 4.38 பில்லியன் முறை ஸ்ட்ரீமிங் செய்யப்பட்டது .

### பிரெண்டா ஹலே

- பிரெண்டா ஹலே (Brenda Hale) : பிரிட்டன் உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார் .

### ஜனாதிபதியின் புதிய செயலாளர்

- தற்போதைய பொதுத்துறை நிறுவனங்களின்தேர்வு (Public Enterprises Selection Board, PESB) தலைவராக உள்ள ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணியாளரான சஞ்சய்கோத்தாரி, ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.
- இதற்கான ஒப்புதலை அமைச்சரவையின் நியமனங்கள்குழு(Appointment Committee of Cabinet) வழங்கியுள்ளது.

*அமைச்சரவையின் நியமனங்கள் குழு (ACC)*

- அமைச்சரவையின் நியமனங்கள் குழுவானது (ACC) இந்திய அரசாங்கத்தின் பல உயர் அரசாங்கப் பதவிகளுக்கு அதிகாரிகளை நியமிக்கிறது.

## தமிழ்நாடு செய்திகள்

### மதுரை: தமிழ் நாட்டின் முதல் மாற்றுத் திறன் குழந்தைகளுக்கான பூங்கா

- தமிழகத்தில் முதன்முறையாக சிறப்பு மற்றும் மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கான பிரத்யேக பூங்காவானது மதுரை மாநகராட்சியில் உருவாக்கப்பட்டுள்ளது. அடல் நகர்ப்புற மாற்றம் மற்றும் புதுப்பித்தல் இயக்கத்தின் (Atal Mission for Rejuvenation and Urban Transformation - AMRUT) ஒரு பகுதியாக மதுரையின் அழகர் கோவில் சாலையில்,பசுமையை அதிகரிக்க இந்தப் பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகளின் நண்பனாக (Disable Friendly Park) இந்தப் பூங்கா விளங்குகிறது. பிற குழந்தைகளுடனான தொடர்பின் போது சிறப்புக் குழந்தைகளுக்கு உண்டாகும் ஏக்கத்தினை போக்குவதற்கு உதவும் வகையில் இந்தப் பூங்கா வடிவமைக்கப் பெற்றுள்ளது.
- மேலும் இந்தப் பூங்காவில் பெரியளவிலான மீன் தொட்டியும், சக்கர நாற்காலியினைப் பயன்படுத்தக் கூடிய விதமான கழிப்பறைகளும் அமையவுள்ளது.
- குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் சமூக ஆர்வலர்களை ஈடுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## அரசு பொதுத் தேர்வில் சிறப்பிடம் பெறும் மாணவர்களுக்கு காமராஜர் விருது

- தமிழகத்தில் நிகழாண்டு அரசு பொதுத் தேர்வில் தமிழ் வழிக் கல்வியில் சிறப்பிடம் பெறும் 960 மாணவ மாணவிகளுக்கு ரூ.1.45 கோடியில் பரிசு மற்றும் காமராஜர் விருது வழங்கப்படும் என பள்ளிக் கல்வித்துறை அறிவித்துள்ளது.
- தமிழகத்தில் காமராஜரின் பிறந்த நாளான ஜூலை 15ஆம் தேதியை தமிழக அரசு, கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடி வருவது குறிப்பிடத்தக்கது.

## தேசிய வாழைப்பழத் திருவிழா

- தேசிய வாழைப்பழத் திருவிழா 2017 மதுரையில் உள்ள தேசிய வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஜூலை 21 முதல் ஜூலை 23 வரை நடைபெறவுள்ளது.
- விவசாயிகள், வணிகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்காகவும்; அறுவடை மற்றும் அறுவடைக்கு முந்தைய தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும்; உள்கட்டமைப்புகளை உருவாக்க முதலீடுகளை ஈர்க்கும் வகையிலும் இத்திருவிழா ஏற்பாடு செய்யப்படுகிறது.

## ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனத்தின் புதிய இயக்குனர்: மதன் மோகன் கோயல்

- திருப்பெரும்புதூரில் இயங்கி வரும் ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனத்தின் புதிய இயக்குனராக ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த பேராசிரியர் மதன் மோகன் கோயல் புதிய இயக்குனராக பொறுப்பேற்றுள்ளார்.
- இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு (Rajiv Gandhi National Institute of Youth Development, RGNIYD) , திருப்பெரும்புதூர், 1993 இல் நிறுவப்பட்ட பொதுத்துறை கல்வி நிறுவனமாகும்.
- இது இந்திய அரசின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரவையின் கீழ் இது செயல்படுகின்றது.
- இந்த நிறுவனத்தில் இளைஞர் மேம்பாட்டிற்கான பட்ட மேற்படிப்புத் திட்டங்களையும் ஆய்வுத் திட்டங்களையும் நல்குகின்றது. மாநில முகமைகளுக்கும் இளைஞர் அமைப்புகளுக்கும் பயிற்சித் திட்டங்களையும் ஒருங்கிணைக்கின்றது. நாடு முழுவதும் விரிவாக்கப் பணிகளிலும் பரப்புரை முயற்சிகளிலும் பங்கேற்கின்றது.
- நாட்டின் இளைஞர் தொடர்பான நடவடிக்கைகளுக்கான முதன்மை நிறுவனமாக விளங்குகின்றது. நாட்டு நலப்பணித் திட்டம், நேரு யுவ கேந்திர சங்காதன் மற்றும் பிற இளைஞர் அமைப்புகளுடன் பயிற்சித் திட்டங்களை வகுப்பதில் பங்கேற்கின்றது. ஊரக, நகரிய மற்றும் பழங்குடி பகுதிகளில் இளைஞர் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைப்பாளராகவும் பயிற்சிகளுக்கு மைய முகமையாகவும் உள்ளது.

## எழுத்தாளர்களுக்கு சிங்காரவேலர் விருது: தமிழக அரசு அறிவிப்பு

- தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக சிறந்த எழுத்தாளருக்கு ஆண்டு தோறும் சிங்காரவேலர் விருது வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.
- தமிழில் அறிவியல் கருத்துக்களை நூலாக எழுதுவோருக்கும், சமுதாய முன்னேற்றத்திற்காவும், சமத்துவக் கொள்கைகளுக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும் போராடுவோர்களில் சிறந்த ஒருவருக்கு தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் இவ்விருது வழங்கப்படும். விருதுத் தொகையாக ஒரு லட்சமும், ஒரு பவுன் தங்கப்பதக்கமும் பரிசாக வழங்கப்படும்.

*சிங்காரவேலர் குறிப்பு*

- ம. சிங்காரவேலர் (பிப்ரவரி 18, 1860 - பிப்ரவரி 11, 1946) தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு பொதுவுடைமைவாதியும் தொழிற்சங்கவாதியும் விடுதலைப் போராட்ட வீரரும் ஆவார்.
- மலையபுரம் சிங்காரவேலு என்ற முழுப்பெயர் கொண்ட இவர், பொதுவுடைமைச் சிந்தனைகளை தமிழ்நாட்டில் பரப்ப ஆற்றிய பணிகளுக்காக "சிந்தனைச் சிற்பி" எனப் போற்றப்படுகிறார்.

### மதுரையில் தமிழ் கலாச்சார மரபு அருங்காட்சியகம்

- மதுரையில் 50 ,கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ் கலாச்சார மரபு அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் தெரிவித்துள்ளார் .
- இந்தத் தமிழ் கலாச்சார மரபு அருங்காட்சியகம், மதுரையில் உள்ள உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் அமையவுள்ளது . இதன் முதல் கட்டமாக 2017 ஆம் ஆண்டில் 15 கோடி ஒதுக்கப்பட உள்ளது.

### தமிழகத்தில் எம்.எல்.ஏ.க்களின் ஊதியம் ரூ.1.05 லட்சமாக உயர்வு

- சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஊதியத்தை ரூ.55 ஆயிரத்திலிருந்து ரூ.1.05 லட்சமாக உயர்த்தி தமிழக முதல்வர் அறிவித்தார்.
- சட்டப்பேரவை உறுப்பினர்களின் மாதாந்திர ஊதியம் ரூ. 8 ஆயிரத்திலிருந்து ரூ.30 ஆயிரமாகவும் அவர்களின் இதர படிகளும் உயர்த்தி வழங்கப்படும்.
- ஈட்டுப்படி மாதம் ஒன்றுக்கு ரூ.7 ஆயிரத்திலிருந்து ரூ.10 ஆயிரமாகவும், தொலைபேசி படி மாதம் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரத்திலிருந்து ரூ.7500-ஆகவும், தொகுதிப்படி மாதம் ஒன்றுக்கு ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.25 ஆயிரமாகவும், தொகுப்புப்படி மாதம் ஒன்றுக்கு ரூ.2,500-லிருந்து ரூ.5 ஆயிரமாகவும், வாகனப்படி மாதம் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரத்திலிருந்து ரூ.25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படும். தற்போது வழங்கப்படும் அஞ்சல்படி ரூ. 2,500-ஆகத் தொடர்ந்து வழங்கப்படும்.
- இதன் முலம், தற்போது சட்டப்பேரவை உறுப்பினர்கள் மாதந்தோறும் பெறும் சம்பளம் மற்றும் இதர படிகள் சேர்த்து ரூ.55 ஆயிரம் என்பது மேலும் ரூ.50 ஆயிரம் உயர்ந்து, ஒரு லட்சத்து 5 ஆயிரம் மாதந்தோறும் பெறுவர்.

## தேசியச் செய்திகள்

### 14-ஆவது குடியரசுத் தலைவர் தேர்தல்

- நாட்டின் 14-ஆவது குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஜூலை 17 அன்று நடைபெறவுள்ளது.
- தற்போதைய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் பதவிக்காலம் வரும் ஜூலை 24-ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. இதையடுத்து அடுத்த குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.
- குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான அறிவிக்கையை ஜூன் மாதம் 7-ஆம் தேதி அப்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர் நஜீம் ஜைதி வெளியிட்டார்.
- இந்தத் தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பில் ராம்நாத் கோவிந்த் போட்டியிடுகிறார்.
- காங்கிரஸ் உள்ளிட்ட 18 எதிர்க்கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளராக மக்களவை முன்னாள்

தலைவர் மீரா குமார் போட்டியிடுகிறார்.

- குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்தல் களத்தில் இவர்கள் இருவர் மட்டுமே உள்ளனர். இவர்களில் அதிக வாக்குகள் பெறுபவர் அடுத்த குடியரசுத் தலைவராகப் பதவியேற்பார்.
- இந்தத் தேர்தலில் நாடு முழுவதும் உள்ள எம்.எல்.ஏக்களும், எம்.பி.க்களும் நேரடியாக வாக்களித்து புதிய குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கவுள்ளனர்.

*தேர்ந்தெடுக்கப்படும் முறை*

- குடியரசுத் தலைவர் தேர்தலில் மக்களவை உறுப்பினர்கள் 543 பேர், மாநிலங்களவை உறுப்பினர்கள் 233 பேர் , மொத்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் 4,120 என மொத்தம் 4,896 பேர் வாக்களிக்கவுள்ளனர்.
- சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் (எம்.பி மற்றும் எம்.எல்.ஏ) வாக்குகள் ஒரு குறிப்பிட்ட மதிப்பினை உடையது. இந்த வாக்குகளின் மதிப்பு அவர்கள் சார்ந்த மாநிலத்தின் அளவு மற்றும் மக்கள் தொகையினை பொறுத்தது.

*எம்.எல்.ஏவின் வாக்கு மதிப்பு*

- ஒரு எம்.எல்.வின் வாக்கு மதிப்பு என்பது, அவர் சார்ந்த மாநிலத்தின் மக்கள் தொகையை மொத்தத் தொகுதிகளின் எண்ணிக்கையால் வகுத்து ஆயிரத்தால் பெருக்கிக் கிடைக்கும் மதிப்பாகும். பிறகு அந்த மதிப்புடன் அந்த மாநிலத்தின் மொத்தத் தொகுதிகளின் எண்ணிக்கையைப் பெருக்கும்போது அந்த மாநிலத்தின் அனைத்து எம்.எல்.ஏக்களின் மொத்த வாக்கு மதிப்பும் கிடைத்து விடும்.
- கடந்த 1971-ஆம் ஆண்டின் மக்கள் தொகையின்படி அனைத்து மாநிலங்களின் எம்எல்ஏக்களின் மொத்த வாக்கு மதிப்பு 5,49,495 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

*எம்.பி யின் வாக்கு மதிப்பு*

- ஒரு எம்.பி யின் வாக்கு மதிப்பு என்பது அனைத்து மாநில எம்.எல்.ஏக்களின் மொத்த வாக்கு மதிப்புடன் (5,49,495) மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையால் (776) வகுத்துக் கிடைக்கும் மதிப்பாகும்.
- அதன்படி ஒரு எம்.பி.யின் வாக்கு மதிப்பு 708 என்றும் மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு 5,49,408 என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

*மொத்த வாக்கு மதிப்புகள்*

- அனைத்து மாநில எம்எல்ஏக்களின் மொத்த வாக்கு மதிப்பையும் (5,49,495) அனைத்து எம்.பி.க்களின் மொத்த வாக்கு மதிப்பையும் (5,49,408) கூட்டிக் கிடைக்கும் மதிப்பாகும்.

## குடியரசு துணைத் தலைவர் தேர்தல்

- குடியரசு துணைத் தலைவராக இருக்கும் ஹமீது அன்சாரி, அப்பதவியை கடந்த 2007-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 10 ஆண்டுகளாக வகித்து வருகிறார். அவரது பதவிக்காலம் வரும் ஆகஸ்ட் மாதத்துடன் நிறைவடையவுள்ளது. இதையடுத்து அந்தப் பதவிக்கு வரும் ஆகஸ்ட் 5-ஆம் தேதி தேர்தல் நடக்கவுள்ளது.
- இந்தத் தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளராக வெங்கய்யநாயுடுவும், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் சார்பில் மகாத்மா காந்தியின் பேரனும், மேற்கு வங்க முன்னாள் ஆளுநருமான கோபால கிருஷ்ண காந்தி வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

*குடியரசு துணைத் தலைவர் எவ்வாறு தேர்வு செய்யப்படுகிறார்?*

- குடியரசு துணைத்தலைவர் தேர்தல் சம்பந்தப்பட்ட நடைமுறைகள் குடியரசுத் தலைவர் தேர்தலை மிகவும் ஒத்திருக்கிறது. குடியரசுத் தலைவர் தேர்தலில் டெல்லி மற்றும் புதுச்சேரி உட்பட அனைத்து மாநிலங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களும் வாக்களிப்பில் பங்கேற்கின்றனர்.
- ஆனால் குடியரசு துணைத் தலைவர் தேர்தலின் இரகசிய வாக்கெடுப்பில் நாடாளுமன்றத்தின்

மக்களவை (Lok Sabha) மற்றும் மாநிலங்களவை (Rajya Sabha) உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிக்கின்றனர்.

- பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் விருப்பத்தை குறிக்க அதற்காக பிரத்யேகமான முறையில் வடிவமைக்கப்பட்ட பேனாக்களை பயன்படுத்துகின்றனர் (வேறு வகை பேனாக்களைக் கொண்டு குறிக்கப்பட்ட வாக்குகள் நிராகரிக்கப்படும்).
- குடியரசு துணைத்தலைவர் பதவிக்கு போட்டியிடுபவர் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.
    - ✓ இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
    - ✓ குறைந்தது 35 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
    - ✓ மாநிலங்களவை உறுப்பினராக தகுதி பெற்றிருக்க வேண்டும்.
- ஒரு வேட்பாளரின் வேட்பு மனுவை குறைந்தபட்சம் 20 வாக்காளர்கள் முன்மொழிய வேண்டும் மற்றும் குறைந்தபட்சம் 20 வாக்காளர்கள் வழிமொழிய வேண்டும்.
- மேலும் ஒவ்வொரு வேட்பாளரிடமும் 15,000 ரூபாய் வைப்புத் தொகையாகப் பெறப்படும்.

### சர்வதேச டிஜிட்டல் மயக் குறியீடு: நார்வே முதலிடம்

- உலகம் முழுவதும் டிஜிட்டலின் பயன்பாடு அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதிலும் குறிப்பாக நிதித்துறையில் டிஜிட்டலின் பயன்பாடு நாள்தோறும் அதிகரித்து வருகிறது. டிஜிட்டல் மயக் குறியீடு (Digital Evolution Index , DEI) அண்மையில் வெளியிடப்பட்டது.
- இதில் நார்வே முதலிடத்தில் உள்ளது. 17-வது இடத்தில் இந்தியா உள்ளது.
- DEI 2017 தரவரிசையில் முதல் ஐந்து இடங்களை பிடித்துள்ள நாடுகள் - நார்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து, டென்மார்க், மற்றும் பின்லாந்து.




**தேசிய கல்விக் கருவூலம் (NAD - National Academic Depository)**

- தேசிய கல்விக் கருவூலம் (NAD) என்பது மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் இந்திய அரசாங்கத்தின் கூட்டு முயற்சி ஆகும். இது "கணினிமய இந்தியா" (Digital India) திட்டத்தின் கீழ் (கல்விப் பதிவுகளை / ஆவணங்களை கணினிமயம் ஆக்க) மேற்கொள்ளப்பட்ட புதுமையான முற்போக்கான முயற்சி.
- "கணினிமய கல்விச் சான்றிதழ்கள் (Digital Academic Certificates) என்பதை ஒவ்வொரு இந்தியருக்கும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது என்.ஏ.டி யின் நாட்டம் ஆகும்.
- கணினி மயமான, நம்பகமான, சரிபார்த்துக் கொள்ளக் கூடிய இணையவழிச் சான்றிதழ்கள், காகித சான்றிதழ்களை அச்சடிப்பதிலும் பராமரிப்பதிலும் உண்டாகும் சிக்கல்களை குறைக்க / அகற்ற உதவும்.
- என்.டி.எம்.எல் (National Database Management Limited - NDML) ஆனது கல்வி நிறுவனங்கள், மாணவர்களின் என்.ஏ.டி (NAD) கணக்குகளுக்கு நேரடியாக கல்விச் சான்றிதழ்களை வழங்க ஏற்பாடுகளை செய்யவுள்ளது.
- இந்த சான்றிதழ்களை மாணவர்கள் எந்நேரத்திலும் காண முடியும். மேலும் வங்கிகள் / வேலை வழங்கும் நிறுவனர்கள் காண அனுமதிக்கவும் முடியும்.
- அச்சடித்த சான்றிதழ்களையும், பிற ஆவணங்களையும் கையில் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. நகல்களை சமர்ப்பிக்கும் தேவைகளும் குறையும்.




### பள்ளி ஆவணங்களை கணினிமயமாக்கல்

- தேசிய கல்விக் கருவூலம் (National Academic Depository - NAD) என்பது பல்வேறு கல்வி நிறுவனங்கள் / பள்ளி குழுமங்கள் / தகுதி மதிப்பீட்டு அமைப்புகளால் பதிவு செய்யப்பட்ட கல்வி சார்ந்த சான்றிதழ்களின் இணைய சேமிப்புத் தளம் ஆகும். இந்த சேவையானது 24 மணி நேரமும் இயங்கும்.
- பட்டதாரி மற்றும் பட்டய சான்றிதழ்கள், மதிப்பெண் திறன் சான்றிதழ்கள், போன்றவற்றை இக்கருவூலத்தில் சேமித்து வைக்கலாம்.
- தேசிய கல்விக் கருவூலத்தை செயல்படுத்தும் பொறுப்பும் அங்கீகாரமும் பல்கலைக் கழக மானியக் குழுவை (University Grants Commission) சேரும்.
- தேசிய கல்விக் கருவூலம் இணைத்துப் பயன்படுத்தக்கூடிய இரண்டு கருவூலங்களைக் கொண்டது.
  - ✓ NSDL தரவுத்தள மேலாண்மை நிறுவனம் (NSDL Database Management Limited - NDML)
  - ✓ CDSL வென்சர்ஸ் லிமிடெட் (CVL)
- இதுபோல் கல்வித் தகுதி ஆவணங்களை இணைய வழி சேமிப்புத் தளங்களில் சேமித்து வைப்பது எளிய முறையில் வேகமாக ஆவணங்களை சரிபார்த்துக் கொள்ள உதவுவது மட்டுமின்றி போலி ஆவணங்களை தடுக்கவும் உதவும்.
- இணைய வழி பதிவிற்கும், பயன்பாட்டிற்கும் ஆதார் தரவுதளம் உபயோகிக்கப்படும். ஆதார் எண் இல்லாதபட்சத்தில் NAD அடையாள எண் ஒன்று உருவாக்கப்பட்டு அதன் மூலம் டிஜிட்டல் சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும்.

## புதிய சர்வதேச விமான நிலையங்கள்

- நாட்டில் 18 புதிய விமான நிலையங்களை (Greenfield Airports) அமைப்பதற்கு உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 7 புதிய விமான நிலையங்களுக்கு (Greenfield Airports) தள அனுமதியும் (site clearance) வழங்கியுள்ளது .
- கோவாவில் உள்ள மோபா விமான நிலையம், நவி மும்பை மற்றும் மகாராஷ்டிராவில் உள்ள ஷீர்டி விமான நிலையம், கேரளத்தின் கண்ணூர் விமான நிலையம், உ.பி யின் குஷிநகர் விமானநிலையம், மற்றும் ஜோவார் விமான நிலையம், ஆந்திராவின் போகபுரம் விமான நிலையம், ஹுதியானாவின் மாச்சிவாரா விமான நிலையம், ராஜஸ்தானின் ஆல்வர் விமான நிலையம் மற்றும் குஜராத்தில் உள்ள ராஜ்கோட் விமான நிலையம் ஆகியவை புதிய சர்வதேச விமான நிலையங்களாக கட்டமைக்கப்பட உள்ளன.
- கண்ணூர் நகரிலுள்ள விமான நிலையத்தின் கட்டுமானப் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளது.

## கிசான் சம்படா திட்டம் (KISAN SAMPADA YOJANA , Scheme for Agro-Marine Processing and Development of Agro-Processing Clusters)

- இந்திய அரசாங்கம் கிசான் சம்படா என்ற புதிய மத்திய துறைத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. 14 வது இந்திய நிதி ஆணையம் 2016 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நாட்டில் உணவுப் பதப்படுத்தும் திட்டங்களை மேம்படுத்துவதற்காக முனையும் அதே நேரத்தில், கிசான் சம்படா திட்டத்திற்கு 6000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
- கிசான் சம்படா திட்டம் என்ற குடையின் கீழ் பின்வரும் திட்டங்கள் அடங்கும்:
    - ✓ மாபெரும் உணவுப் பூங்காக்கள்.
    - ✓ ஒருங்கிணைந்த குளிர்பதன வசதிகள் மற்றும் மதிப்புக் கூட்டு உள்கட்டமைப்பு
    - ✓ உணவுப் பதப்படுத்துதல் மற்றும் பதனிட வசதிகளை உருவாக்குதல் மற்றும் விரிவாக்கல்.
    - ✓ வேளாண் உள்கட்டமைப்பு.
    - ✓ உணவுப் பாதுகாப்பு மற்றும் தர உத்தரவாத உள்கட்டமைப்பு.
    - ✓ மனித வளம் மற்றும் அது தொடர்பான நிறுவனங்கள்.
- கிசான் சம்படா திட்டத்தின் கீழ் நடைமுறைபடுத்தப்படும் அனைத்துத் திட்டங்களும் மாநில பாகுபாடு இல்லாமல் , நாடு முழுவதற்கும் பொருந்தும் .
- இந்தத் திட்டங்கள் தனியார் துறையுடன் இயங்குகின்றன, மேலும் தொழில் நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு, திட்டத்தின் நம்பகத்தன்மை, மற்றும் மூலப்பொருட்கள் கிடைப்பதன் அடிப்படையில் திட்ட இடம் தேர்வு செய்ய தொழில்முனைவோர்களுக்கு சுதந்திரம் அளிக்கிறது.
- கிசான் சம்படா எனும் இந்த உணவுப் பதப்படுத்தும் துறைக்கான திட்டத்தை மத்திய உணவுப் பதப்படுத்துதல் தொழிற்துறை அமைச்சகம் (Ministry of Food Processing Industries of India) அறிமுகம் செய்துள்ளது.

## பாரத்நெட் (BharatNet) திருத்தப்பட்ட செயலாக்க உத்திகளுக்கு அமைச்சரவை ஒப்புதல்

- திருத்தப்பட்ட செயலாக்க உத்தியின் நோக்கம் மார்ச், 2019 ஆம் ஆண்டுக்குள் அனைத்து கிராம பஞ்சாயத்துகளுக்கும் அகலக்கற்றை இணைப்பு (Broadband Connection) அளிப்பதாகும் .
- இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தில் நிலத்தடி ஒளியிழைகள் (OFC) பயன்படுத்தி இணையதள இணைப்பு அளிக்கப்பட்டது .

- தற்போது இரண்டாம் கட்டத்தில் நிலத்தடி ஒளியிழைகள், கம்பங்கள் வழி ஒளியிழைகள், ரேடியோ அலைகள், மற்றும் செயற்கைக்கோள் வழியாக மீதமுள்ள கிராமங்களுக்கு இணையதள இணைப்பு வழங்கப்படவுள்ளது.

*பாரத்நெட்*

- பாரத்நெட் என்பது கிராமங்களுக்கு இணைய இணைப்பு (Internet Connectivity) வழங்கும் மத்திய அரசின் திட்டம் ஆகும் . இதனை பாரத அகலக்கற்றை வலையமைப்பு நிறுவனம் (Bharat Broadband Network Limited - BBNL) செயல்படுத்தி வருகிறது.
- ஒளியிழைக் கொண்டு செயல்படுத்தப்படும் உலகின் மிகப்பெரிய கிராமப்புற இணைய இணைப்புத் திட்டம் இதுவாகும்.
- இந்தியாவில் உள்ள அனைத்து இல்லங்களுக்கும் , குறிப்பாக கிராமப்புற இல்லங்களுக்கு, 2 Mbps முதல் 20 Mbps வேகம் வரையிலான அகலக்கற்றை
- இணைய இணைப்புகளை தேவைக்கேற்ப வழங்குவது பாரத்நெட்டின் நோக்கம் ஆகும்.
- பாரத்நெட்டின் மூன்று கட்ட செயலாக்க திட்டம் பின்வருமாறு :
    - ✓ முதல் கட்டமாக 2017 மார்ச் மாதத்துக்குள் ஒரு லட்சம் கிராம பஞ்சாயத்துகளுக்கு நிலத்தடி ஒளியிழைகள் மூலம் இணைய இணைப்பு வழங்கப்படுதல்.
    - ✓ இரண்டாம் கட்டமாக 2017 மார்ச் மாதத்துக்குள் இந்தியாவில் உள்ள அனைத்து 2,50,500 கிராம பஞ்சாயத்துகளுக்கும் இணையதள இணைப்பு வழங்கப்படுதல்.
    - ✓ மூன்றாம் கட்டமாக, 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையில் அனைத்து மாவட்டங்களையும் , தொகுதிகளையும் ஒளியிழைகள் கொண்டு இணைக்கும் வகையில் நவீன வலை அமைப்பு உருவாக்கப்படும் .

**மூத்த குடிமக்களுக்கு பிரதம மந்திரியின் வயா வந்தனா (Pradan Mantri Vaya Vandhana Yojana - PMVUY) அரசு பிரதான் மந்திரி வயா வந்தன யோஜனாவை அறிமுகப்படுத்தியது**

- மத்திய நிதி அமைச்சகம், 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மூத்த குடிமக்களுக்கு மட்டும் பிரத்யேகமாக பிரதம மந்திரியின் வயா வந்தனா திட்டம் (PMVVY), என்ற ஓய்வூதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், மூத்த குடிமக்கள் 10 ஆண்டுகளுக்கு 8 சதவிகிதம் உத்தரவாத வட்டியை, அவர்கள் செய்த முதலீட்டின் அளவைப் பொறுத்துப் பெறுவார்கள்.

*PMVVY இன் சிறப்பு அம்சங்கள்*

- இந்த PMVVY திட்டம் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் தேதி முதல் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் தேதி வரையில் கிடைக்கும்.
- இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான உரிமம் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் (Life Insurance Corporation of India - LIC) வழங்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தை நேரடியாகவோ அல்லது LIC யின் இணையதளம் வாயிலாகவோ வாங்க முடியும்.
- இத்திட்டத்திற்கு ஜிஎஸ்டி வரிவிதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. வட்டி விகிதங்களின் வீழ்ச்சியின்போது நிலையான வருமானம் பெற மூத்த குடிமக்களுக்கு கூடுதல் வாய்ப்புகளை வழங்குகிறது.
- திட்டத்தின் 10 வருட காலக்கட்டத்தின் பொழுது ஓய்வுதியதாரர் இறக்க நேர்ந்தால் திட்டத்தின் மதிப்பு முழுவதும் அவரின் பயனாளிக்கு அளிக்கப்படும். 10 வருட காப்பீட்டுத் திட்ட காலத்தின் முடிவில், ஓய்வூதியதாரர் உயிருடன் இருக்கும்போது அவரின் இறுதி ஓய்வூதியத் தவணையுடன் சேர்த்து திட்டத்தில் குறிப்பிட்டுள்ள விலையும் செலுத்தப்படும்.
- திட்டத்தின் 3 பாலிசி ஆண்டுகளுக்குப் பிறகு, பணத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, திட்டத்தில்

குறிப்பிட்டுள்ள விலையில் 75 % வரை கடன் அளிக்கிறது. கடனுக்கான வட்டித் தொகை, ஓய்வூதியத் தவணையில் இருந்து பிடித்தம் செய்துகொள்ளப்படும்.

- திட்டத்தின் சந்தாதாரரோ அல்லது அவர்களின் இல்லறத் துணையோ கடைநிலை உடல்நலக் குறைவால் (Terminal illness) பாதிக்கப்பட்டுள்ள நிலையில் திட்டத்தின் முதிர்ச்சி காலத்திற்கு முன்பே காப்பீட்டுச் சந்தா செலுத்துவதில் இருந்து விடுபடுவதற்கு இத்திட்டம் வழிவகை செய்கிறது. அப்படி விலகும் நிலையில், திட்டத்தில் குறிப்பிடப்படுள்ள விலையில் 98 % அவர்களுக்கு வழங்கப்படும்.
- ஓய்வூதியத்திற்கான உச்சவரம்பு பயனாளியையும் அவரது இல்லறத் துணையையும் கொண்ட முழு குடும்பத்திற்கானதாகும்.
- வட்டி உத்தரவாதத்திற்கும், உண்மையான வட்டிக்குமிடையில் உள்ள வித்தியாசத்திற்கும், நிர்வாகத்திற்கான செலவினங்களுக்கும் இடையேயான வேறுபாடுகளுக்கும் இந்திய அரசாங்கத்தால் மானியம் வழங்கப்பட்டு, LIC நிர்வாகத்திற்கு ஈடு செய்யப்படும்.

## சிறார்களுக்கான இலவச மற்றும் கட்டாய கல்விக்கான உரிமை (திருத்தம்) மசோதா, 2017

- 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், மக்களவையில் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர், சிறார்களுக்கான இலவச மற்றும் கட்டாய கல்விக்கான உரிமை (திருத்தம்) மசோதாவை அறிமுகப்படுத்தியுள்ளார்.
- இந்த மசோதாவானது, இதற்கு முன் இருந்த குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமை சட்டத்தில் (2009) சில திருத்தங்களைக் கொண்டுள்ளது.
- இந்த மசோதா ஆசிரியர்களின் நியமனத்திற்கு தேவையான குறைந்தபட்ச தகுதிகளை அடைய வேண்டிய காலக்கெடு வினை நீட்டிக்கிறது.
- 2009ஆம் ஆண்டின் சட்டத்தின் கீழ், ஒரு மாநிலத்தில் போதுமான அளவில் அரசின் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (அல்லது) போதுமான எண்ணிக்கையில் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் இல்லாத போது, குறைந்தபட்ச ஆசிரியர் தகுதிச் சட்டத்திலிருந்து ஐந்து வருடம் வரை (அதிகபட்சமாக) விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அதாவது 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதிவரை.
- மேலும் மார்ச் 31, 2015 அன்று குறைந்தபட்ச தகுதி இல்லாத ஆசிரியர்கள், நான்கு ஆண்டு காலத்திற்குள் (2019 மார்ச் 31 ஆம் தேதிக்குள்) குறைந்தபட்ச தகுதிகளினைப் பெற வேண்டும் என்று இந்த மசோதா குறிப்பிடுகிறது.

*<u>சிறார்களுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமைச் சட்டம் (RTE)</u>*

- இலவச மற்றும் கட்டாய கல்விக்கான உரிமைச் சட்டம், (RTE) இந்திய பாராளுமன்றத்தால் ஆகஸ்டு 4, 2009 அன்று இயற்றப்பட்ட சட்டமாகும்.
- இச்சட்டம் இந்திய அரசியலமைப்பின் மூன்றாவது பிரிவில் உள்ள சரத்து 21-A இன் கீழ் இந்தியாவில் 6 முதல் 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாய கல்விக்கான முக்கியத்துவத்தை விவரிக்கிறது. ஏப்ரல் 1, 2010 அன்று சட்டம் நடைமுறைக்கு வந்த பொழுது குழந்தைகள் கல்வியை அடிப்படை உரிமையாக்கிய 135 நாடுகளின் பட்டியலில் இந்தியா இணைந்தது.

## பெங்களூரு பிரகடனம்

- பெங்களூரு பிரகடனம் சமீபத்தில் (23.07.2017) டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர் சர்வதேச மாநாட்டில் ஏற்கப்பட்டது.
- இம்மாநாட்டிற்கு கர்நாடக அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டது.
- சமநிலைக்கான வேட்கை (Quest for Equity) என்ற கருப்பொருளுடன் கூடிய இம்மாநாட்டில், உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

- பெங்களூர் பிரகடன ஆவணம், ஆறு பரந்தபிரிவுகளின்கீழ் 40 பரிந்துரைகளைக் கொண்டுள்ளது. அவை - மக்களைப்பாதுகாத்தல், ஜனநாயக நிறுவனங்களைபலப்படுத்துதல், சமூகநீதியை பரவச்செய்தல், மனிதவள மேம்பாட்டை உயர்த்துதல், பொறுப்பான நிர்வாகத்தை உறுதிப்படுத்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பை ஊக்குவித்தல்.
- இந்தபிரகடனம் தனியார்துறை, நீதித்துறை, கல்விநிறுவனங்கள், அரசாங்க ஒப்பந்தங்கள், தலித்துகளின் மேம்பாடு போன்ற துறைகளில் உறுதியான நடவடிக்கை எடுக்க அழைப்பு விடுக்கிறது.
- இந்த பிரகடனம் பட்டியலிடப்பட்ட இனத்தவர்மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மீது அதிகம் கவனம் செலுத்துகிறது.

*இந்தப் பிரகடனத்தின் முக்கிய கோரிக்கைகள்*

- ✓ SC/ST பிரிவினரை நீதிபதிகளாக நியமித்தல், பதவி உயர்வுகள், அரசு ஒப்பந்தங்கள், தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறைகளில் நியமனம் செய்வதில் இடஒதுக்கீடு.
- ✓ பிற்படுத்தப்பட்டோருக்கு சட்டமன்றத்தில் இடஒதுக்கீடு.
- ✓ விவசாயிகளுக்கான வருமான ஆணையத்தை அமைத்தல்.
- ✓ காவல்துறை சீர்திருத்தங்கள் மூலம் சட்டத்தின் ஆட்சியை நிறுவுதல்.
- ✓ படுகொலைகளை தடுக்க அரசு நடவடிக்கைகள்.
- ✓ கல்வி நிறுவனங்களில் பாலினம் மற்றும் சாதிபாகுபாடுகளுக்கு எதிரானசட்டம்

ஆகியவற்றிற்காக அழைக்கிறது.

## INS வக்லி

- ரஷ்யாவால் வடிவமைக்கப்பட்ட வக்லி நீர்மூழ்கிக் கப்பல், இந்திய கடற்கரையில் 1974 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டது. கடந்த 2010 ஆம் ஆண்டு இந்த நீர்மூழ்கிக் கப்பல் பணி நிறைவு பெற்றது.
- பணிநிறைவுப் பெற்ற INS வக்லி நீர்மூழ்கிக் கப்பலில், கடல்அருங்காட்சியகம் அமைக்க தமிழகஅரசு முடிவெடுத்துள்ளது.
- இந்த அருங்காட்சியகம், யுனெஸ்கோ உலக பாரம்பரியத் தளங்களுள் ஒன்றான மகாபலிபுரத்தில் அமையவுள்ளது.

## ஆரம்ப்

- சமீபத்தில் கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம், கிராமப்புற சாலைகளை பராமரிப்பதற்காக ஆரம்ப் (Aarambh) என்ற மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த செயலியானது புவியியல் தகவல் அமைப்பு (GIS) வரைபடத்தை சாலைபயன்பாட்டுத் திட்டங்கள், நிபந்தனை ஆய்வுகள் செலவுகளை மதிப்பிடுதல் மற்றும் சாலை தொடர்பான இதர விவரங்கள் மற்றும் வருடாந்திர சாலை பராமரிப்புத் திட்டங்கள் ஆகியவற்றிற்காக உபயோகப்படுத்த இலக்கு வைக்கிறது.
- மேலும் "ஆரம்ப்" (Aarambh) என்ற பெயரில் மற்றொரு முயற்சியை இந்திய நிறுவனங்களின் பிணையம் மற்றும் பிரிட்டனில் உள்ள இணையக் கண்காணிப்பு நிறுவனம் (Internet Watch foundation) தொடங்கியது.
- நாட்டிலேயே முதன்முறையாக இணையதளத்தின் மூலம் குழந்தைகளை பாலியல் மோசடி செய்வதைத் தடுக்க மற்றும் குழந்தைகளின் ஆபாச படங்களை இணையதளத்தில் இருந்து நீக்க இந்த செயலி உதவுகிறது.
- ஆரம்பிந்தியா (AarambhIndia) அமைப்பில் ஹாட்லைனை (Hotline) தொடங்கப்பட்டு அதில் குழந்தைகளின் பாலியல் மோசடி பற்றிய புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களைப் பற்றிப் புகாரளிக்க உதவுகிறது. இதைப் பயன்படுத்தி பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்க முடியும்.

**மண்டல கலாச்சார மையங்கள்**

- நாட்டின் பல்வேறு பாரம்பரிய கலை மற்றும் நாட்டுப்புற கலைகளை பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் ஏழும ண்டல கலாச்சார மையங்கள் (ZCC) இந்திய அரசால் அமைக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு மண்டலத லைமையகம் உள்ளது; அங்கு ஒரு மண்டல கலாச்சார மையம் நிறுவப்பட்டுள்ளது. பல மாநிலங்கள் பல கலாச்சார மையங்களிலும் உறுப்பினராக உள்ளது .
- ZCC இன் ஏழு தலைமையகங்கள் - பட்டியாலா, நாக்பூர், உதய்ப்பூர், அலகாபாத், கொல்கத்தா, திமாபூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ளது.

| **மண்டல மையங்கள்** | **தலைமையகம்** | **உள்ளடக்கிய மாநிலங்கள்** |
|---|---|---|
| வடக்கு மத்திய மண்டல கலாச்சார மையம் | அலகாபாத் | மத்திய பிரதேசம், ராஜஸ்தான், ஹரியானா, பீகார், உத்திர பிரதேசம், உத்ராஞ்சல் மற்றும் டெல்லி |
| வடக்கு மண்டல கலாச்சார மையம் | பட்டியாலா | ஹிமாச்சல பிரதேசம், ஜம்மு காஷ்மீர், ராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப், மற்றும் சண்டிகர் யூனியன் பிரதேசம் |
| மேற்கு மண்டல கலாச்சார மையம் | உதய்பூர் | கோவா, குஜராத், ராஜஸ்தான், மகாராஷ்டிரா, டாமன் யூனியன் பிரதேசம், டையு மற்றும் தாத்ரா, நாகர் ஹவேலி |
| வட கிழக்கு மண்டல கலாச்சார மையம் | திமாபூர் | அசாம், திரிபுரா, மணிப்பூர், அருணாசலப் பிரதேசம், நாகாலாந்து மற்றும் மேகலாயா |
| கிழக்கு மண்டல கலாச்சார மையம் | கொல்கத்தா | பீகார், மேற்கு வங்காளம், ஒரிசா, அசாம், திரிபுரா, மணிப்பூர், சிக்கிம் மற்றும் அந்தமான் நிகோபார் யூனியன் பிரதேசம் |
| தென் மண்டல கலாச்சார மையம் | தஞ்சாவூர் | கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திர பிரதேசம், அந்தமான் நிக்கோபார், இலட்சத்தீவுகள், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசங்கள் |
| தெற்கு மண்டல கலாச்சார மையம் | நாக்பூர் | மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திர பிரதேசம் |

- பாரம்பரியமான கலை மற்றும் நாட்டுப்புற கலைகளை மேம்படுத்துவதற்கு மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேசங்கள் நிதிகளை ஒதுக்குவது இல்லை.
- நாடு முழுவதும் பல்வேறு கலாச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்த 7 ZCCகளுக்கு வருடாந்திர மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

## தீவுகள் மேம்பாட்டு நிறுவனம்

- இது இந்தியாவில் உள்ள தீவுகளின் முழுமையான வளர்ச்சித் திட்டங்களை தயாரிப்பதற்காக புதிதாக அமைக்கப்பட்ட நிறுவனம் ஆகும்.
- சமீபத்தில், இந்த நிறுவனத்தின் முதல் கூட்டம் மத்திய உள்துறை மந்திரி தலைமையில் கூட்டப்பட்டது.
- கடலோரப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, சுற்றுச்சூழல் அமைப்புகளை பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சனைகளைக் கையாளுதல் ஆகியவற்றிற்காக அந்தமான்-நிக்கோபார், இலட்சதீவுகள் உள்பட பத்துத்தீவுகள் அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- இந்த தீவுகளில் சுமித், ராஸ், ஏவெஸ், அந்தமான்நிக்கோபாரில் உள்ளபெரிய மற்றும் சிறிய அந்தமான் மற்றும் இலட்சத்தீவில் உள்ள பங்ராம், சுஹெலி, கிரியும் மற்றும் தென்னகரா ஆகிய இடங்களை உள்ளடக்கியது.

## 14-ஆவது குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பதவியேற்றார்

- நாட்டின் 14-ஆவது குடியரசுத் தலைவராக ராம்நாத் கோவிந்த் (71) பதவியேற்றார். குடியரசுத் தலைவர் பதவிக்கு கடந்த 17-ஆம்தேதி தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் மத்தியில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளரான ராம்நாத் கோவிந்த், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மீராகுமாரைத் தோற்கடித்தார். கோவிந்த் 65 சதவீத வாக்குகளுடன்வெற்றி பெற்றார்.
- இந்நிலையில், புதிய குடியரசுத் தலைவராக ராம்நாத் கோவிந்த் ஜூலை 26, 2017 அன்றுபதவியேற்றார். அவருக்கு தில்லியில் நாடாளுமன்ற வளாத்தில் நடைபெற்ற விழாவில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஜே.எஸ்.கேஹர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.
- உத்தரப் பிரதேசத்தில் இருந்து மாநிலங்களவை எம்.பி.யாக 1994 முதல் 2006 வரை இருமுறை தொடர்ச்சியாகப் பதவிவகித்தார். பீகார் ஆளுநராக இருந்த அவர், அண்மையில் குடியரசுத்தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.



- மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் கே.ஆர். நாராயணனுக்குப் பிறகு இந்த உயர்பதவிக்கு வந்துள்ள தலித்சமூகத்தைச் சேர்ந்த இரண்டாவது தலைவர் ராம்நாத் கோவிந்த்ஆவார். பாஜகவைச் சேர்ந்த ஒருவர் இப்பதவிக்கு வருவது இதுவே முதல்முறையாகும்.

## ரிலையன்ஸ் பாதுகாப்பு மற்றும் பொறியியல் நிறுவனம் இரண்டு கடற்படை கப்பல்களை அறிமுகப்படுத்தியது

- ரிலையன்ஸ் பாதுகாப்பு மற்றும் பொறியியல்நிறுவனம் (Reliance Defence and Engineering Limited , RDEL/ ஆர்.டி.ஈ.எல்) ஷாச்சி மற்றும் ஸ்ருதி என்ற இரண்டு கடல் ரோந்துக் கப்பல்களை கடற்படைக்காக அறிமுகம் செய்தது (Naval Offshore Patrol Vessels, NOPVs). இந்தக் கப்பல்கள் குஜராத் மாநிலம் பிபவவ் என்ற இடத்தில் உள்ள கப்பல் கட்டும் துறையில் கட்டப்படுகிறது.
- இவை இந்தியாவில் , தனியார் கப்பல்கட்டுந் துறையால் உருவாக்கப்படும் முதல் போர்க்கப்பல்கள் ஆகும். இந்த இரண்டு கப்பல்களும் இந்திய கடற்படையின் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் ஐந்து கப்பல்களின் ஒரு பகுதியாகும். திட்டத்தின் கீழ் கட்டப்படும் கப்பல்களின் மொத்த மதிப்பு சுமார் 2500 கோடி ருபாய் ஆகும் .
- NOPV கப்பல்களின் முக்கிய பணி - இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் (Exclusive Economic Zone, EEZ) ரோந்து பணியில் ஈடுபடுவது ஆகும். மேலும்கடற்படைரோந்துகள், கடற்படையின் மீட்பு மற்றும் ஆதரவு நடவடிக்கைகள் , கடலோர பாதுகாப்புப் பணிகள் , கப்பல் போக்குவரத்து வழித்தடங்கள் பாதுகாப்பு, கடற்கொள்ளை தடுப்பு நடவடிக்கை போன்றவற்றிலும் இந்த நவீன ரக கப்பல்கள் ஈடுபடுத்தப்படும்.

## மகாராஷ்டிராவில் தனியார் நிலத்தில் மலிவு வீடுகள்

- மகாராஷ்டிராவில் உள்ள தனியார் நிலப்பகுதியில், நகர்ப்புற ஏழைகளுக்கு 30,000 மலிவு வீடுகள் கட்ட , வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம் (Ministry of Housing and Urban Affairs ) அனுமதி அளித்துள்ளது.
- பல்துறை சார்ந்த மத்திய ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக் குழுவின் (Central Sanctioning and Monitoring Committee, CSMC) செயலாளர், துர்காசங்கர் மிஸ்ரா, இதற்கான ஒப்புதலை வழங்கினார்.
- இதன்படி, 'நகர்ப்புற பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீடு திட்டத்தின் 'Pradhan Mantri Awas Yojana (Urban) கீழ் , 450 கோடி ரூபாய் மத்திய நிதி உதவியளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## ஹமரி தரோஹார் திட்டம் (Hamari Dharohar Scheme)

- இந்த திட்டம் சிறுபான்மையினர் நலன் அமைச்சகம் சார்பில் இந்தியாவின் சிறுபான்மை சமூகங்களின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.
- மாநிலம் அல்லது மாவட்டம் வாரியாக பாகுபடுத்தாமல் , திட்டப்பணிகளை பொருத்து அதற்கான நிதி ஒதுக்கப்படும்.
- இந்த திட்டத்தின் கீழ் தனித்துவமான கண்காட்சிகள், எழுத்தழகியல் (calligraphy), ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றம் தொடர்பான திட்டங்களுக்கு ஊக்கமளிக்கப்படும்.
- அரபு மொழியில் உள்ள மருத்துவம் , கணிதம் மற்றும் இலக்கியம் குறித்த பழம்பெரும் இடைக்கால வரலாற்று ஆவணங்களை, ஆங்கில மொழியில் மொழிபெயர்க்க ஒரு திட்டப்பணி தொடங்கப்பட்டுள்ளது.

**புதிய ரோஷினி திட்டம் (Nai Roshni Scheme)**

- சிறுபான்மை பெண்கள் மத்தியில் தலைமைத்துவ பண்புகளை மேம்படுத்த தொடங்கப்பட்ட திட்டம்.
- திட்டத்தின் நோக்கம் : சிறுபான்மையின பெண்களிடையே தன்னம்பிக்கையை நிலைநாட்டுவதும் , அவர்களுக்கு அரசாங்க அமைப்புகள் , வங்கிகள் மற்றும் பிற நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கான கருவிகள் மற்றும் உத்திகளை கற்றுக்கொடுப்பதும் ஆகும்.

*மத்திய அரசின் திட்ட மதிப்பீட்டு ஆய்வு*

- நை ரோஷினி திட்டம் குறித்த மதிப்பீட்டு ஆய்வு ஒன்றை சமீபத்தில் 'நிதி ஆயோக்' (NITI Aayog) அமைப்பு நடத்தியது .
- இந்த ஆய்வின் முக்கிய நோக்கம் , நை ரோஷினி திட்டமானது சிறுபான்மையின பெண்களிடையே எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை மதிப்பிடவும் , திட்டத்தினை நடைமுறை படுத்துவதில் ஏற்படும் தடைகளைக் குறித்து ஆய்வதும் ஆகும்.
- பயிற்றுவிக்கப்பட்ட பெண்கள் தங்கள் செறிவூட்டப்பட்ட அறிவைப் பயன்படுத்தி , தங்கள் குடும்பத்தின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யவும் , குடும்பத்தினருக்கு கிடைக்கவேண்டிய அரசாங்க உதவிகளை பெறுவதற்கும் உதவுகிறார்கள், என்று இந்த ஆய்வு குறிப்பிடுகின்றது.

**சணல் –ICARE (Jute – ICARE)**

- இது சணல் விவசாயிகளின் வருவாயினை இரட்டிப்பாக்க ஜவுளித்துறை அமைச்சகம் மேற்கொள்ளும் ஒரு புதிய முயற்சி.
- இந்த திட்டத்தின் பெயர் விரிவாக்கம் - Improved Cultivation and Advanced Retting Exercise for Jute (Jute – ICARE) - மேம்படுத்தப்பட்ட சணல் சாகுபடிமற்றும் மிருதுவாக்கும் முறைகள் என்பதாகும். இந்தத் திட்டம் விவசாயிகளிடையே சிறந்த வேளாண் நடைமுறைகள் மற்றும் நுண்ணுயிர்-உதவியுடன் சணலை மிருதுவாக்கும் முறைகளை அறிமுகம் செய்கிறது .
- ரெட்டிங் என்பது சணலினை மிருதுவாக்கும் ஒரு செயல்முறை . ரெட்டிங் முறையில் சணல் நார்கள் திரவத்தில் வைக்கப்படும் , இது மரத்தின் திசுக்களில் இருந்து நார்கள் தளர்ந்து பிரிந்து வர உதவும்.
- முதல் கட்டமாக அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்காள பகுதிகளில் ரெட்டிங் முறை பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டது .
- இந்த திட்டத்தின் கீழ் , பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் கைப்பேசிகளுக்கு, சணல் சாகுபடியில் மேம்படுத்தப்பட்ட நடைமுறைகள் குறித்து குறுந்தகவல்கள் அனுப்பப்படும்.

*சோனா (SONA)*

- இது மத்திய சணல் மற்றும் நெய்யப்பட்ட இழைகள் ஆராய்ச்சி நிறுவனம் (Central Research Institute for Research in Jute and Allied Fibres, CRIJAF) உருவாக்கிய நுண்ணுயிர் கூட்டமைப்பு ஆகும்.
- நுண்ணுயிர் கூட்டமைப்பு (Microbial Consortium) என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நுண்ணுயிரி குழுக்களின் இணைவாழ்வு நிலை ஆகும்.இதன் நோக்கம் சணல் விளைச்சலை அதிகப்படுத்துவதும் , சணலின் தரத்தினை உயர்த்துவதும் ஆகும்.

**ஷி-பாக்ஸ் போர்டல் (SHe-box Portal)**

- இது பெண்கள் மற்றும் குழந்தை நலன் அமைச்சகம் அறிமுகப்படுத்திய நிகழ்நிலைச் சேவை தளம் ஆகும்.


- மத்திய அரசாங்க பெண் ஊழியர்களுக்குப், பணியிடத்தில் ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான புகார்களைப் பதிவு செய்ய இந்த சேவைத் தளம் உதவும்.

### கெய்ல் (இந்தியா) நிறுவனத்தின் முயற்சி “பங்க்”

- கெய்ல் (இந்தியா) நிறுவனம் புதுமையான தொடக்கநிலை நிறுவன முயற்சிகளை (Start-up initiative ) கண்டறிந்து மேம்படுத்தவும் , ஊக்குவிக்கவும் ‘பங்க்’ ('Pankh') என்ற புதிய திட்டத்தை தொடங்கியுள்ளது.
- தொடக்கத்தில் முதலீடு செய்ய , 50 கோடி ரூபாயை கெயில்(இந்தியா) நிறுவனம் ஒதுக்கியுள்ளது. இந்த நிதியினை, இயற்கை எரிவாயு மற்றும் அதன் தருவிப்புகள் தொடர்பான திட்டங்களில் முதலீடு செய்ய முடிவெடுத்துள்ளது.
- திறம்மிக்க தொடக்கநிலை நிறுவன விண்ணப்பதாரர்கள், தங்கள் திட்டங்களை சமர்ப்பிக்க ஒரு நிகழ்நிலைத் தளத்தை கெய்ல் (இந்தியா) நிறுவனம் உருவாக்கியுள்ளது.

### நிதி ஆயோக்கின் அதிநவீன அரசுப் போக்குவரத்து மாதிரிகள்

- 6 அதிநவீன, பெருசன விரைவுப் போக்குவரத்துத் திட்டங்களின் (Mass Rapid Transportation) பரிந்துரைக்கு நிதி ஆயோக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் ஹைபர்லூப் )Hyperloop) , மெட்ரினோ(Metrino) பாட் டாக்ஸி ,(Pod Taxi) போன்ற நவீன வகைப் போக்குவரத்து கட்டமைப்புகள் இந்தியாவில் வரவிருக்கின்றன.




- இந்த ஆறு போக்குவரத்துத்திட்டங்களுக்கு, நிதி ஆயோக் குழுவிடம் , மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் ஒப்புதல் கோரியதன் பேரில் , இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.


- அதிநவீனப் போக்குவரத்துத் திட்டங்கள் – ஹைபர்லூப் (Hyperloop) , மெட்ரினோ (Metrino), பாட் டாக்ஸி (Pod Taxi), ஸ்டாட்லர் பேருந்துகள் (stadler buses), கலப்பு தொழில்நுட்ப பேருந்துகள் (hybrid buses) மற்றும் சரக்கு ரயில் சாலைகள் (freight rail road).
- நாட்டில் அதிகரித்துவரும் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்க்க, தற்போதைய பொதுப் போக்குவரத்து முறைகள்போதுமானதாக இல்லாத காரணத்தால், இத்தகைய புதிய தொழில் நுட்பங்களை இந்தியா நாடியுள்ளது .
- முதல் கட்டமாக , சோதனை ஓட்டம் செய்து , பாதுகாப்பு அளவுருக்கள் பரிசோதித்துப் பார்க்கப்பட்ட பிறகு , மெட்ரினோ போன்ற போக்குவரத்து முறைகள் இந்தியாவில் அடுத்த ஆண்டின் முடிவில் பொதுமக்களுக்கு சேவையில் அமர்த்தப்படலாம் .
- இத்தகைய உலகத் தரத்திலானபாதுகாப்பு அளவுருக்களை சோதித்து உறுதி செய்வதற்காக ,6 பேர் கொண்ட நிபுணர் குழுவை மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் அமைத்துள்ளது . இதில் ரயில்வே துறையின் மூத்தஅதிகாரிகள் போன்றோர் இடம்பெற்றுள்ளனர்.

## நிர்பயா நிதி

- நாட்டிலுள்ள பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான இலக்கை அமுல்படுத்துவதற்காக,இந்திய அரசாங்கம், நிர்பயா நிதி என்ற பிரத்யேக நிதி ஒன்றை அமைத்துள்ளது.
- நிர்பயா நிதியின் கீழ் பெறப்பட்ட திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கான அதிகாரப் பூர்வ அமைப்பு, பெண்கள் மற்றும் குழந்தை நலன் அமைச்சகம் (Ministry of Women and Child Development ) ஆகும்.
- மத்திய நிதி அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட அதிகாரக் குழுவானது (Empowered Committee ) , இந்த நிதியின் கீழ் உருவாக்கப்படும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது.
- திட்டங்களை அமல்படுத்துவதற்கான ஒப்புதல் மற்றும் செயலாக்க அனுமதி , சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுக்கு வழங்கப்படும்.

## சுவதார்கிரே திட்டம்/ Swadhar Greh Scheme (கடினமான சூழ்நிலையில் இருக்கும் பெண்களுக்கான திட்டம்)

- இந்த திட்டத்தை பெண்கள் மற்றும் குழந்தை நலன் அமைச்சகம் (Ministry of Women and Child Development ) செயல்படுத்துகிறது.
- வாழ்க்கையில் பாதிக்கப்பட்டு கடினமான சூழலில் இருக்கும் பெண்களின் மறுவாழ்வுக்கு ஆதரவளித்து, அவர்களின் கண்ணியமான வாழ்க்கைக்கு உதவுகிறது.




- பாதிக்கப்பட்டப் பெண்களுக்கு உணவு , உடை, இருப்பிடம் மற்றும் சுகாதார வசதிகள் கிடைக்க வழிவகை செய்வதன் மூலம், அவர்களுக்குப் பொருளாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

*திட்டத்தின் முக்கிய அம்சங்கள்*

- ✓ உணவு, உடை, மருத்துவ வசதிகளை வழங்கும் தற்காலிக குடியிருப்பு வசதிகள்
- ✓ பொருளாதார ரீதியான மறுவாழ்வுக்கு தொழில் மற்றும் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்.
- ✓ உளவியல் ரீதியான ஆலோசனை, விழிப்புணர்வு மற்றும் நடத்தை பயிற்சிகள்
- ✓ சட்ட உதவி மற்றும் வழிகாட்டுதல்
- ✓ தொலைபேசி மூலமாக ஆலோசனை வழங்குதல்

- இத்திட்டத்தின் மூலம் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பயன் அடைவார்கள் . ஒவ்வொரு மாவட்டத்திலும் 30 பெண்களைக் கொண்டிருக்கும் 'ஸ்வாதர் கிரே' அமைக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## உலகின் மூன்றாவது பெரிய மாட்டிறைச்சி ஏற்றுமதியாளர் – இந்தியா

- அறிக்கையின் பெயர்: OECD-FAO வேளாண்மைக் கண்ணோட்டம் அறிக்கை 2016-2026.
- அறிக்கையினை நடத்திய அமைப்புகள்:
  - ✓ ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு - The Food and Agriculture Organization of the United Nations (FAO)
  - ✓ பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு - Organisation for Economic Co-operation and Development (OECD)
- உலக அளவில் மாட்டிறைச்சி ஏற்றுமதியில் இந்தியா மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது.
- இந்த நிலைப்பாட்டை அடுத்த பத்து ஆண்டுகளுக்கு இந்தியா தக்க வைக்கும் என்று OECD-FAO வேளாண்மைக் கண்ணோட்டம் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- கடந்த ஆண்டு இந்தியா , சுமார்1.56 மில்லியன் டன் மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்துள்ளது. இந்த அறிக்கையின்படி, 2026 ஆம் ஆண்டு இந்திய1.93 டன் மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்து , உலக மாட்டிறைச்சி ஏற்றுமதியில் 16 சதவீதம் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ஏற்றுமதி செய்யப்பட்ட மாட்டிறைச்சியின் வகைகள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

இந்தியாவில் இருந்து மியான்மர் நாட்டிற்கு அதிக அளவில் எருமை மாடுகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது . நாட்டின் மாட்டிறைச்சி ஏற்றுமதியில் , எருமை மாடுகளின் ஏற்றுமதி பெரும்பங்கு வகிக்கின்றது.

- ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் தரவுத்தளத்தின் படி, கடந்த ஆண்டில் இந்தியா 363,000 டன் மாட்டிறைச்சியை இறக்குமதி செய்துள்ளது.
- அதிக அளவில் மாட்டிறைச்சிஏற்றுமதி செய்யும் நாடுகளின் தரவரிசை:
    1. பிரேசில்
    2. ஆஸ்திரேலியா
    3. இந்தியா

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியாவுடன் ராணுவ உறவை பலப்படுத்த புதிய மசோதா - அமெரிக்கா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்

- அடுத்த நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் பாதுகாப்புத் துறைக்கு ரூ. 40.3 லட்சம் கோடி ஒதுக்குவது தொடர்பான மசோதா அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியது.
- இந்தியாவுடனான ராணுவ ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவது தொடர்பான திருத்த மசோதாவும் நிறைவேறியது.
- அமெரிக்காவில் வரும் அக்டோபர் 1-ம் தேதி அடுத்த நிதியாண்டு (2018) தொடங்குகிறது.
- இதற்காக அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஏற்கெனவே பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.இதன் ஒரு பகுதியாக தேசிய பாதுகாப்பு ஒப்புதல் சட்ட மசோதா 2018 தாக்கல் செய்யப்பட்டது. பாதுகாப்புத் துறைக்கு ரூ.40.3 லட்சம் கோடி ஒதுக்க வகை செய்யும் இந்த மசோதா நிறைவேறியது.
- இந்த மசோதாவின் ஒரு பகுதியாக இந்தியாவுடனான ராணுவ ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி இந்திய வம்சாவளியைச் சார்ந்த அமெரிக்க எம்.பி. அமி பேரா ஒரு திருத்த மசோதா கொண்டு வந்தார். இது குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.
- இந்தியா, அமெரிக்கா இடையிலான பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பை பலப்படுத்துவது தொடர்பான வியூகங்களை அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சரும் வெளியுறவுத் துறை அமைச்சரும் வகுக்க இந்த மசோதா வகை செய்கிறது. இதற்காக 180 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.
- அடுத்தபடியாக இந்த மசோதா அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட் சபையில் (மேலவை) நிறைவேற வேண்டும். அதன் பிறகு அதிபரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## இந்தோனேசியா தன் பிரத்யேக பொருளாதார மண்டல கடல் பகுதியை பெயர் மாற்றம் செய்துள்ளது


- இந்தோனேசியா தன் பிராந்தியத்துக்கு உட்பட்ட பகுதியை "தென்சீனக் கடல்" என்ற பெயரிலிருந்து "வட நட்டுனா கடல்" (North Natuna Sea) என்று ஜூலை 14, 2017 அன்று பெயர் மாற்றம் செய்தது.




- சீனாவின் பிராந்திய பேராசைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சமீபத்திய செயல் இதுவாகும்.
- மறுபெயரிடப்பட்ட பகுதியின் ஒரு பகுதி ஆனது சீனாவின் ஒன்பது - கோடு எல்லைக்குள் (nine - dash line) அமைந்துள்ளது. இப்பகுதி சீனாவின் ஹைனன் தீவின் தெற்கு மற்றும் கிழக்கு திசையில் பல நூறு மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது.
- தென் சீனக் கடல் பகுதியின் பெயரை முதன்முதலாக இந்தோனேசியா மட்டும் மாற்றவில்லை. இதற்கு முன் 2011ல் பிலிப்பைன்ஸ் தன் கடல் பகுதிகளை "மேற்கு பிலிப்பைன் கடல்" என்று பெயர் மாற்றம் செய்தது. மேலும் இரண்டு ஆண்டுகள் கழித்து பிராந்திய சர்ச்சைக்கு தீர்வு காணும் வகையில் நெதர்லாந்து நாட்டின் தலைநகரான ஹேக்கில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றத்தை அணுகியது.
- இதையடுத்து ஜூலை 2016ல், பிலிப்பைன்ஸுக்கு ஆதரவாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பாயம் தென் சீனக் கடலின் பெரும்பகுதியை சீனா வரலாற்று அடிப்படையில் உரிமை கோர எந்த விதமான சட்ட அடிப்படையும் இல்லை என்று கூறியது.

*தென் சீனக் கடல் சர்ச்சை*

- தென் சீனக் கடல் முழுவதும் தனக்கே சொந்தம் என்று சீனா கூறி வருகின்றது. தென் சீனக் கடலில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கு உரிமை கோரும் மற்ற நாடுகள் தைவான், இந்தோனேசியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருனே. தென் சீனக் கடலானது பசிபிக் பெருங்கடலின் ஒரு பகுதியாகும்.




- தென்சீனக் கடலானது சுமார் 35 லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் எட்டு கடலை ஒட்டிய நாடுகள் / பிரதேசங்களைக் கொண்டுள்ளது. அவையாவன சீனா, தைவான், பிலிப்பைன்ஸ், மலேசியா, இந்தோனேசியா, புருனே, சிங்கப்பூர் மற்றும் வியட்நாம்.
- இந்தக் கடல் சர்வதேச கப்பல் போக்குவரத்துப் பாதையில் அமைந்துள்ளது. உலகின் 50 சதவீதத்துக்கும் அதிகமான சரக்குக் கப்பல்கள் இந்தப் பகுதியினை கடந்து செல்கின்றன. இந்தக் கடலில் பெட்ரோலியம், கனிமம் மற்றும் மீன்பிடி வளங்கள் மிகவும் நிறைந்துள்ளன.
- இருநூறுக்கும் மேற்பட்ட தீவுகள், பவளப் பாறைகள், நீரடித் திடல் (Shoals) , நீரடி மணல் திட்டுகள் (Sandbars) நிறைந்த இப்பகுதி ஸ்பாரட்லிஸ், பாராசெல்ஸ் மற்றும் ப்ரதஸ் (Spratlys, Paracels and Pratas) என்று மூன்று தீவுக் கூட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன.
- மக்கிலெஸ்ஃபீல்ட் மீன்பிடிப் பரப்பு (Macclesfield bank) மற்றும் ஸ்கார்பரோ நீரடித்திடல் (Scarborough Shoal) ஆகியவை தென் சீனக் கடலின் பகுதியாகும். பல நாடுகளும் தென் சீனக் கடலில் தங்களது பிராந்திய உரிமைகளை வலியுறுத்தி வருகின்றன. இது ஆசிய நாடுகளுக்கு இடையேயான முரண்பாட்டின் அபாயகரமான புள்ளியாகக் கருதப்படுகிறது.

### தனி நாடு உருவாக்கியதாக உக்ரைன் கிளர்ச்சியாளர்கள் அறிவிப்பு - டொனெட்ஸ்க் - லுஹான்ஸ்க் இணைந்து 'மலோரோஸியா ஆனது

- உக்ரைனில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கிழக்குப் பகுதியில் தனி நாடு உருவாக்கியதாக அறிவிக்கப்பட்டது.
- டோனெட்ஸ்க் மக்கள் குடியரசின் தலைவர் அலெக்ஸாண்டர் ஸகர்சென்கோ வெளியிட்ட அறிக்கையின்படி, டோனெட்ஸ்க், லுஹான்ஸ்க் பகுதிகள் இணைந்த புதிய நாடு உருவாக்கப்படுகிறது. "மலோரோஸியா" என்பது அதன் பெயர்.
- அந்த நாட்டுக்கான புதிய அரசியல் சாசனம் விரைவில் இயற்றப்படும். அதையடுத்து, மலோரோஸியா மக்களின் ஒப்புதலினைப் பெறுவதற்கான வாக்கெடுப்பு நடைபெறும்.
- தனி நாட்டுக்கான அனைத்து நடவடிக்கைகளும் மூன்று ஆண்டுகளில் பூர்த்தியாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

- "மலோரோஸியா" என்றால் "குட்டி ரஷியா" என்று பொருள்.
- இந்த விவகாரம் குறித்து, கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் உள்ளிட்ட உதவிகளை அளித்து வரும் ரஷியா எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.
- உக்ரைனின் கிழக்குப் பகுதியில் ரஷிய மொழி பேசுவோர் பெரும்பான்மையாக உள்ளனர்.
- சோவியத் யூனியன் அமைப்பில் இணைந்திருந்த போது எந்தப் பிரச்சினையையும் அவர்கள் எதிர்கொள்ளவில்லை. ஆனால், சமீப காலமாக ரஷிய மொழி பேசுவோரை உக்ரைன் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது என்று அவர்கள் புகார் கூறி வந்தனர்.
- இதையடுத்து, ஆயுதக் கிளர்ச்சி தொடங்கியது. உக்ரைனின் உள்நாட்டுச் சண்டையில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர்.
- ரஷியாவின் மறைமுக ஆதரவுடன் அந்நாட்டின் எல்லையையொட்டிய கிழக்கு உக்ரைன் பகுதிகளான டொனெட்ஸ்க், லுஹான்ஸ்க் ஆகியவற்றை கிளர்ச்சியாளர்கள் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.
- டொனெட்ஸ்க் குடியரசு, லுஹான்ஸ்க் மக்கள் குடியரசு உருவானதாக கிளர்ச்சியாளர்கள் கடந்த ஆண்டு அறிவித்தனர். அப்பகுதிகளில் அவர்கள் ஏற்கெனவே தேர்தல் நடத்தி ஆட்சி புரிந்து வருகின்றனர். ஆனால் இதனை உக்ரைன் அங்கீகரிக்கவில்லை.
- உக்ரைன், ஜெர்மனி, ரஷியா முன்னிலையில்உக்ரைன் அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தையின் முடிவில், ரஷிய மொழி பேசுவோர் பகுதியில் கூடுதல் தன்னாட்சி அதிகாரம் வழங்க உடன்படிக்கை ஏற்பட்டது. ஆனாலும், இது முழு செயல்பாட்டுக்கு வரவில்லை. கிழக்கு உக்ரைன் பகுதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகிறது.
- இந்த நிலையில், இரு பகுதிகளும் இணைந்த மலோரோஸியா என்னும் தனி நாடு உருவானதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.
- கிழக்கு உக்ரைனில் பிரிவினைவாதத்தைத் தூண்டி, கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்கி உதவி செய்து வருவதாக குற்றம் சாட்டி, ரஷியா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் விதித்துள்ளன என்பது நினைவுகூரத்தக்கது.

### பரீத் கவுர் கில்

- பிரிட்டனின் முதல் பெண் சீக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ப்ரீத் கவுர் கில், இங்கிலாந்து பாராளுமன்றத்தில் உள்துறை அலுவலகத்தின் வேலைகளை ஆய்வு செய்யும் செல்வாக்குமிக்க குழுவுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- கனடா நாட்டில் ஜூன் மாதம் பொதுத் தேர்தல் நடைபெற்றது . இதில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ப்ரீத் கவுர் கில், தொழிலாளர் கட்சி சார்பில் எட்க்பாஸ்டன் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.
- தற்பொழுது இவர், அந்நாட்டு உள்துறை அமைச்சகத்தின் சிறப்புக் குழுவில் (Home Affairs Select Committee) உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.


### ஆஸ்திரேலியாவில் அதிதிறன் பாதுகாப்பு உள்துறை அமைச்சகம்

- ஆஸ்திரேலியா தனது பாதுகாப்புக்குத் தீவிர அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதால் சூப்பர் மினிஸ்ட்ரி எனப்படும் அதிதிறன் அமைச்சகத்தை (Super Security Home Affairs Ministry) உருவாக்கியுள்ளது. பயங்கரவாத அச்சுறுத்தல்களை சமாளிக்க நாட்டின் சட்ட அமலாக்கம், உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் திருத்தங்களை ஏற்படுத்தி உள்ளது.
- உள்நாட்டு உளவு நிறுவனம், மத்தியக் காவல்துறை, சுங்கத்துறை மற்றும் குடியேற்றத் துறை

ஆகியவற்றை இணைத்து ஒரே அதிதிறன் அமைச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது.

## இந்திய – ஜப்பான் அணு ஆற்றல் ஒப்பந்தம்

- ஆணு ஆயுத ஆற்றலை அமைதியான முறையில் பயன்படுத்துவதற்கான கூட்டுறவு உடன்படிக்கை இரு நாடுகளுக்கு இடையே ஜூலை 20,2017 அன்று கையெழுத்தானது. இந்த உடன்படிக்கை தற்போது அமலுக்கு வந்துள்ளது .
- அரசுமுறைப் பயணமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஜப்பான் சென்றிருந்த பொழுது , இந்த உடன்படிக்கை கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தம் இந்தியாவிற்கும் ஜப்பானுக்கும் இடையேயான உத்தி ரீதியான நல்லுறவின் பிரதிபலிப்பாகும். மேலும், இந்த ஒப்பந்தமானது ஆற்றல் பாதுகாப்பு மற்றும் தூய்மையான ஆற்றல் தொழில்நுட்பங்களில் இரு நாட்டிற்கும் இடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தும்.




- அணுசக்தி ஆற்றலை அமைதியான நோக்கங்களுக்கு , நிலையான மற்றும் நம்பகமான முறையில் , நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது இந்த உடன்படிக்கையின் நோக்கம் ஆகும்.
- அமெரிக்காவின் முக்கியமான அணுசக்தி நிறுவனங்கள் , தோஷிபா போன்ற ஜப்பானின் பெருநிறுவனங்களுக்குச் சொந்தமானவை ஆகும். எனவே , இத்தகைய உடனபடிக்கையானது இந்திய நாட்டுக்கு, ஜப்பான் மற்றும் அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளுடனான அணு ஆற்றல் கூட்டமைப்புக்கு பெரும் பங்களிக்கும்.

## பண்ட்-மிர்ஸா ஒப்பந்தம்

- பண்ட்-மிர்ஸா ஒப்பந்தம் என்பது இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் “இரு நாடுகளுக்கு இடையிலான புண்ணியத் தலங்களுக்குச் செல்வதற்கான நெறிமுறை” ஆகும். இது 1974 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்டது.
- பண்ட்-மிர்ஸா ஒப்பந்தமானது, இருநாட்டு மக்களும் மற்ற நாட்டில் இருக்கும் புண்ணியத் தலங்களுக்குச் சென்று வழிபட வகை செய்கிறது. இந்த ஒப்பந்தத்தில் ,எந்த புண்ணியத் தலங்களுக்கு மற்ற நாட்டவர் அனுமதிக்கப்படுவர் என்ற பட்டியல் குறிப்பிடப்பட்டுள்ளது.

- இந்த உடன்படிக்கையின்படி, பட்டியலில் ஏற்றுக் கொள்ளப்பட்ட புண்ணியத் தலங்கள் ஒழுங்காகப் பராமரிக்கப்படுவதோடு, அதன் புனிதத்தன்மையையும் பாதுகாக்கப்பட வேண்டும் . இது புண்ணியத்தலம் அமைந்துள்ள அந்தந்த நாட்டின் பொறுப்பு ஆகும்.
- ஹஸ்ரத் மொய்னுதின் சிஷ்தி (அஜ்மீர்), ஹஸ்ரத் நிஜாமுதின் அவுலியா (டெல்லி), ஹஸ்ரத் அமிர் குஸ்ரோ (டெல்லி), ஹஸ்ரத் முஜதித் அல்ஃப் சனி (சிர்ஹிந்த் ஷெரீஃப்) மற்றும் ஹஸ்ரத் குவாஜா அலாவுதீன் அலி அஹ்மத் சபிர் (கல்யார்க ஷரீஃப்) ஆகியோரின் தர்காக்கள் இந்த பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது .
- இந்தியர்கள் சென்று வழிபட பாகிஸ்தான் அனுமதி அளித்துள்ள புனிதத்தலங்கள்:
    - ஷாதானி தர்பார் (ஹைட் பீடாபி)
    - ஸ்ரீ காதாஸ்ராஜ் தாம் (லாகூர்)
    - ஸ்ரீ நன்கானா சாஹிப் குருத்துவாரா (ராவல்பிண்டி)
    - ஸ்ரீ பாஞ்சா சாஹிப் குருத்துவாரா (ராவல்பிண்டி)
    - ஸ்ரீ தேரா சாஹிப் குருத்துவாரா (லாகூர்).

## எகிப்தின் மிகப் பெரிய ராணுவ தளம் திறப்பு

- எகிப்தின் மிகப் பெரிய ராணுவ தளத்தை அந்நாட்டு அதிபர் அப்தெல் ஃபதா அல்-சிசி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- அலெக்ஸாண்ட்ரியா நகருக்கு மேற்கே மார்சா மத்ரோ மாகாணத்தில் அமைந்திருக்கும் இந்த ராணுவத் தளம்தான் மத்திய கிழக்குப் பிராந்தியத்திலேயே மிகப் பெரியதாகும்.
- நாட்டின் வட மேற்குப் பகுதியைப் பாதுகாப்பதிலும், கடலோர நகரங்கள், பல முக்கிய ராணுவ நிலைகளைப் பாதுகாப்பதிலும் புதிய ராணுவத் தளம் முக்கியப் பங்காற்றும் என்று அதிபர் அல்சிசி தனது அர்ப்பணிப்பு உரையில் தெரிவித்தார்.
- புதிய ராணுவத் தளத்துக்கு எகிப்தின் முதல் அதிபர் முகமது நகீப் பெயரிடப்பட்டுள்ளது. ராணுவ தளபதியாக இருந்து பின்னர் அவர் அந்நாட்டின் அதிபரானார்.
- லிபியாவையொட்டிய எல்லைப் பகுதியில் அண்மையில் ஒரு ராணுவ தளம் அமைக்கப்பட்டதாக எகிப்து அண்மையில் அறிவித்தது. அதைத் தொடர்ந்து தற்போது மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் மிகப் பெரிய ராணுவத் தளத்தை அமைத்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலகின் முதல் காற்றாலைப் பண்ணை

- உலகின் முதல் முழு அளவிலான மிதக்கும் காற்றாலைப் பண்ணை ஸ்காட்லாந்தின் வடகிழக்கு கடற்கரையில் கட்டப்பட்டுவருகிறது.
- ஹை வைண்ட் என அறியப்படும் காற்றாலை மின்சாரப் பண்ணை 20,000 வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் ஒரு சோதனை திட்டமாகும்.



- காற்றாலையின் அடித்தளம் தரையில் படவேண்டிய அவசியம் இல்லாததால், இவ்வகை காற்றாலைகளை ஆழ்கடலில் காற்று இருக்கும் பகுதிகளில் நிறுவி, மின்சாரம்உற்பத்தி செய்யமுடியும்.

## விண்வெளி ஒப்பந்தம்

- வெளிப்புற விண்வெளி உடன்படிக்கை ஒரு சர்வதேச விண்வெளிச் சட்டத்திற்கான அடித்தளத்தை அமைத்தது. இது 1967 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைமுறைக்கு வந்தது.
- இந்த ஆண்டு அதன் 50 வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறது.
- இந்தியா உட்பட இந்த உடன்படிக்கையில் 107 நாடுகள் உள்ளன.
- இதன் உறுப்பு நாடுகள் சந்திரனிலோ மற்றும் வேறு எந்த கிரகத்திலோ, பூமியின் சுற்றுப்பாதையிலோ பேரழிவு ஆயுதங்கள் வைப்பதைத் தடை செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சமாதான நோக்கங்களுக்காக விண்வெளி ஆராய்ச்சியைப் பயன்படுத்த நாடுகளை நாடுவதே இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும்.
- இந்த ஒப்பந்தம் பாரம்பரியமான ஆயுதங்களைச் சுற்றுப்பாதையில் வைக்கப்படுவதை தடைசெய்யாது. இதனால் இயக்கவியல் குண்டுவெடிப்பு போன்ற மிக அதிக அழிவுகரமான தாக்குதல் உத்திகள் இன்னும் சாத்தியமானவையாகும்.

## 2040 முதல் பெட்ரோல், டீசல் கார்களுக்கு தடை: பிரிட்டன் முடிவு

- புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்தும் விதமாக, வரும் 2040-ஆம் ஆண்டில் பெட்ரோல் மற்றும் டீசலில் இயங்கும் கார்களையும் , வேன்களையும் விற்பனை செய்வதற்குத் தடை விதிக்க பிரிட்டன் முடிவு செய்துள்ளது.
- சுற்றுச்சூழலுக்கு மாசு விளைவிக்கும் பெட்ரோல் மற்றும் டீசல் கார்கள் பிரிட்டன் சாலைகளில் தென்படக்கூடாது, என்பதே இதன் நோக்கமாகும் .
- அதற்கேற்ப, வரும் 2040-ஆம் ஆண்டில் பெட்ரோல் மற்றும் டீசலில் இயங்கும் கார்களையும், வேன்களையும் விற்பனை செய்யத் தடை விதிக்கப்படும்.புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்தும்

வகையில், காற்றில் நைட்ரஜன் டையாக்ஸைடு கலப்பதைக் குறைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தத் தடை விதிக்கப்படும். ஏற்கெனவே, பிரான்ஸ் அரசு இதே போன்ற அறிவிப்பை வெளியிட்டிருந்தாலும், பிரிட்டன் வெளியிட்டுள்ள அறிவிப்பில் பெட்ரோல், டீசல் வாகனங்களுக்கு மட்டுமன்றி, எரிபொருள்களுடன் மின்சாரத்திலும் இயங்கக் கூடிய 'ஹைப்ரிட்' கார்களுக்கும் தடை விதிக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

### இசுலாமிய ஒத்துழைப்பு அமைப்பு (Organisation of Islamic Cooperation - OIC)

- இந்தியாவின் பசு-பாதுகாப்புக் குழுக்கள், மக்கள் மீது நடத்திய சமீபத்திய தாக்குதல்கள் பற்றி இசுலாமிய ஒத்துழைப்பு அமைப்பு (Organisation of Islamic Cooperation - OIC) கவலை தெரிவித்தது. மேலும், இத்தகைய தாக்குதல்களைக் கண்டித்து அவ்வமைப்பு நிறைவேற்றிய தீர்மானங்களை இந்திய அரசு நிராகரித்துள்ளது .
- இசுலாமிய ஒத்துழைப்பு அமைப்புஎன்பது, 57 உறுப்பினர் நாடுகளைக் கொண்ட ஒரு சர்வதேச அமைப்பு. இது1969 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இதன் நிர்வாக மையம் , சவுதி அரேபியாவில் உள்ள ஜெட்டாவில் (Jeddah) அமைந்துள்ளது.
- இசுலாமிய மக்களின் நலன்களைக் காப்பதும் , சர்வதேச அமைதி மற்றும் இணக்கத்தை ஊக்குவிப்பதும் இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாகும் .

### பிரிக்ஸ் நாடுகள் வரி ஒத்துழைப்பு இயங்கமைப்பு

- வரிவிதிப்பு ஒத்துழைப்புக்கான இயங்கமைப்பில், ஐந்துபிரிக்ஸ் நாடுகளைச் சேர்ந்த வரிவிதிப்பு ஆணையத்தின் அதிகாரிகள் கையொப்பமிட்டனர். பிரிக்ஸ் நாடுகளைச் சேர்ந்த வரிவிதிப்பு ஆணைய தலைவர்களின் ஐந்தாவது உச்சி மாநாட்டில் கையெழுத்து இடப்பட்ட , இந்த பிரிக்ஸ் வரிவிதிப்பு ஒத்துழைப்பு இயங்கமைப்பானது (The BRICS Taxation Cooperation Memorandum), நாடுகளுக்கு இடையே உள்ள வரி ஒத்துழைப்பினை நிர்வாக அளவில் மேம்படுத்தும்முயற்சியாகும்.
- இதன்படி வரித் தகவல் பரிமாற்றம் , வரி ஆலோசனை மேம்பாடு , ஒருங்கிணைந்த வரிக்கொள்கை போன்ற துறைகளில் ஒத்துழைப்பளிக்க பிரிக்ஸ் நாட்டின்அதிகாரிகள் சம்மதம் தெரிவித்தனர்.
- சீனாவின் புஜியான் மாகணத்தில்உள்ள ஜியாமின் நகரில் 2017-க்கான பிரிக்ஸ் உச்சி மாநாடு , செப்டம்பர் 3 முதல் 5 வரை நடைபெறவுள்ளது.
- உலகின் மக்கள் தொகையில் 42 சதவிகிதம் - பிரிக்ஸ் நாடுகளான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்காவில் உள்ளது. உலகப் பொருளாதாரத்தில் பிரிக்ஸ் நாடுகளின் மொத்தப் பங்களிப்பு12 % இல் இருந்து 23 % ஆக கடந்த பத்து ஆண்டுகளில் உயர்ந்துள்ளது. மேலும், உலக வளர்ச்சியில்50% க்கும் அதிகமாக பிரிக்ஸ் நாடுகள் பங்களிக்கின்றன.

### பிரிக்ஸ் நாடுகளின் அமைச்சர்கள் சீனாவில் சந்திப்பு

- சந்திப்பு: பிரிக்ஸ் நாடுகளின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர்கள் சந்திப்பு, 2017.
- இடம்: சோங்கிங் (Chongqing) , சீனா.
- நாள்: 26-27, ஜூலை, 2017.
- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர்(சுதந்திர பொறுப்பு) , ஸ்ரீ பண்டார தத்தத்ரேயா தலைமையிலான இந்திய பிரதிநிதிகள், 'பிரிக்ஸ் நாடுகளின் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர்கள் சந்திப்பில்' பங்குபெற்றனர். இந்த சந்திப்பில் பிரிக்ஸ் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகத்தின் உறுதிமொழி (BRICS Labour and Employment Ministerial Declaration) அனைவராலும்ஏற்றுக்கொள்ளபட்டது.

- இந்த உறுதிமொழி அனைத்து பிரிக்ஸ் நாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு முக்கிய அம்சங்களை கொண்டுள்ளது. பிரிக்ஸ் நாடுகளிடையே நிறுவன ரீதியில் கூட்டு வணிகம் மற்றும் ஒத்துழைப்பை ஏற்படுத்த முனைகிறது.
- உறுதிமொழியின் சில முக்கிய அம்சங்கள் : 'பிரிக்ஸ்முன்னேற்றத்துக்கானதிறன்கள்', 'உலகளாவிய மற்றும் நிலையான சமூக பாதுகாப்பு அமைப்புகள்', 'பிரிக்ஸ் தொழிலாளர் ஆராய்ச்சி நிறுவனங்கள்' , 'பிரிக்ஸ் சமூக பாதுகாப்பு ஒத்துழைப்புக் கட்டமைப்பு', 'பிரிக்ஸ்தொழில் முனைவோர் ஆராய்ச்சி'.

### அம்பாந்தோட்டை துறைமுகம்: இலங்கை - சீனா உடன்படிக்கை கையெழுத்து

- இலங்கையில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுக மேம்பாடு, பயன்பாடு தொடர்பாக இலங்கை - சீனா இடையே 99 ஆண்டு காலத்திற்கான உடன்படிக்கை கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தப்படி, துறைமுகத்தில் 70 சதவீதப் பங்கு சீன அரசுக்குச் சொந்தமான வணிகத் துறைமுக நிறுவனத்துக்கு அளிக்கப்படும். குத்தகை அடிப்படையில் 99 ஆண்டு காலத்துக்கு இந்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும்.
- இலங்கையின் முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபட்சேவின் ஆட்சிக் காலத்தில் அவரது சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டையில் சர்வதேச தரத்தில் துறைமுகம் அமைக்க முடிவானது. சீன அரசு நிறுவனத்தின் உதவியுடன் முதல் கட்ட கட்டுமானம் 2008-ஆம் ஆண்டு தொடங்கி 2010-இல் நிறைவடைந்தது.
- இதன் மேம்பாட்டில் சீனா மிக மும்முரமாக ஆர்வம் காட்டி வந்தது. மேலும், சீன கடற்படைக் கப்பல்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பயன்படுத்தும் என்ற அச்சம் எழுந்தது. இதைத் தொடர்ந்து, துறைமுகத் திட்டத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கம் மாற்றி அமைக்கப்பட்டது.
- இந்த நிலையில், இலங்கையில் ஆட்சி மாறியதும், பிரதமர் ரணில் விக்ரமசிங்க சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, புதிய உடன்படிக்கை ஏற்படுத்தினார்.

## பொருளாதாரச் செய்திகள்

### SBI ரியல்ட்டி

- சொந்த வீடு வாங்குவோருக்கு, நாடு முழுவதும் 3,000 அங்கீகரிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புத் திட்டங்களில் இருந்து வீடுகளைத் தேர்வு செய்ய உதவியாக "எஸ்.பி.ஐ ரியால்ட்டி" என்ற பிரத்யேக இணையதள வாயிலை இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக வங்கியான பாரத ஸ்டேட் வங்கி அறிமுகப் படுத்தியுள்ளது.
- 'எஸ்.பி.ஐ ரியால்ட்டி இணையதளம் , 13 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் 30 நகரங்களில் பாரத ஸ்டேட் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட 3000 அடுக்குமாடி குடியிருப்புத் திட்டத்தில் இருந்து தங்கள் கனவு இல்லத்தை தேர்ந்தெடுக்க உதவும் .
- இந்த இணையதளத்தை எஸ்.பி.ஐ.கேப் செக்யூரிட்டிஸ் (SBICAP Securities) மற்றும் ப்ராப் ஈக்விட்டி (PropEquity) ஆகிய நிறுவனங்கள் ஒருங்கிணைந்து உருவாக்கியுள்ளன.
- தற்போது விற்பனைக்குத் தயாராக இருக்கும் 9.5 லட்சம் வீடுகளின் பட்டியல் இந்த இணையதளத்தில் உள்ளது. நகரின் பல்வேறு இடங்களில் உள்ள சொத்துக்களுக்கான தற்போதைய மற்றும் கடந்த கால விலைவாசியை வாடிக்கையாளர்கள் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.
- வாடிக்கையாளரின் வருமான அடிப்படையில், வங்கியில் எவ்வளவு வீட்டுக் கடன் பெறலாம் என்று கணக்கிட இந்த இணையதளம் உதவும் .

**இந்தியா %7.4வளர்ச்சியை அடையும்ஆசிய மேம்பாட்டு வங்கி அறிக்கை -**

- நுகர்வோர் தேவையின் அதிகரிப்பாலும், பொதுத்துறை முதலீட்டின் வளர்ச்சியாலும் இந்திய பொருளாதாரம் , நடப்பு நிதியாண்டில் 4% வளர்ச்சி அடையும் என ஆசிய மேம்பாட்டு வங்கி தெரிவித்துள்ளது கடந்த ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி.7.1% சதவிதமாக இருந்தது குறிப்பிடதக்கது.
- மேலும் , உலகப் பொருளாதாரம் சரிவிலிருந்து மீண்டு வருவதாலும் , பொருள்களின் விலை உயர்வதாலும் , நாட்டின் பணவீக்கம் 2017-18 ஆம் ஆண்டில் 5.2% ஆகவும், 2018-19 ஆம் ஆண்டு 5.4% ஆகவும் இருக்கும் என ஆசிய மேம்பாட்டு வங்கி கணித்துள்ளது.

**ஜிஎஸ்டியின் (GST) தாக்கத்தை கண்காணிக்கும் மத்திய கண்காணிப்பு குழு**

- GST இன் தாக்கத்தை கண்காணிப்பதற்காக அமைச்சரவை செயலாளரின் (Cabinet Secretary) தலைமையில் மத்திய கண்காணிப்புக் குழுவை இந்திய அரசு அமைத்துள்ளது.

**தேசிய வர்த்தக ஊக்குவிப்புத் திட்டம் (National Trade Facilitation Action Plan - NTFAP)**

- இந்தியாவின் NTFAP ஆனது ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளுக்கான சரக்கு வெளியீட்டு நேரத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேசச் சுங்க அமைப்பானது (World Customs Organisation), தேசிய வர்த்தக ஊக்குவிப்புத் திட்டத்தை மற்றநாடுகள் பின்பற்றுவதற்கு ஏற்ற ஒரு சிறந்த செயல்முறை என்றும், இது உலக வணிக அமைப்பின் வர்த்தககத்தை எளிமைப்படுத்தும் ஒப்பந்தத்தின்(Trade Facilitation Agreement - TFA)தேவைகளை விட அதிகமாக இருக்கிறது என குறிப்பிடுகிறது.
- தேசிய வர்த்தக ஊக்குவிப்புத் திட்டமானது 2017 முதல் 2020 ஆம் ஆண்டுகளுக்குள் செயல்படுத்தப்பட வேண்டும்.
- உலகவங்கியின் "சுலபமாக வியாபாரம் செய்வதற்கான வருடாந்திர அறிக்கையில்" (World Banks Ease of doing business report) தனது தரத்தை உயர்த்துவதற்கு இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகளில் இது ஒரு பகுதியாகும்.
- உலகெங்கிலும் வர்த்தகத்தை எளிமைப்படுத்தும் ஒப்பந்தத்தை (TFA) சீரான முறையில் செயல்படுத்த சர்வதேசச் சுங்க அமைப்பு உதவுகிறது. உதவிகள் ஒப்பந்தத்தின் சீரான செயல்பாட்டை ஆதரிக்கும் சர்வதேசஅமைப்பு, உலக சுங்க அமைப்பு ஆகும்.

*வர்த்தகத்தை எளிமைப்படுத்தும் ஒப்பந்தம் (TFA)*

- உலக வர்த்தக அமைப்பின், ஒப்பந்தமானது சுங்க நெறிமுறைகளை தளர்த்தி, எல்லைகளுக்கு இடையில் வேகமாக சரக்குகளைப் பரிமாற முயற்சிமேற்கொள்கிறது. 2016 ஆம்ஆண்டு இந்தியா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- வர்த்தக உதவிகள் ஒப்பந்தம் 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைமுறைக்கு வந்தது.
- வர்த்தகத்தை எளிமைப்படுத்தும் ஒப்பந்தம் (TFA), முழுமையாக செயல்முறைப்படுத்தப்பட்டால் உலகவர்த்தகம் 1 டிரில்லியன் டாலர்கள் வரை கூடுதலாக உயரக் கூடும்.
- வர்த்தக உதவிகள் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை செயலாளர் தலைமையிலான, வர்த்தக எளிமையாக்களுக்கான தேசிய குழு (NCTF), ஒன்று உருவாக்கப்பட்டது

**நிதிக்கொள்கைக் குழு (MPC)**

- அரசின் அறிவிப்பின்படி பணவீக்கஇலக்கு 4%ஆகும். இதில் 2% அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பணவீக்கம் இருப்பது வரையறை. இந்த இலக்குகளை அடையத்தகுந்தாற் போல் மீள்வாங்கல் வீதத்தை நிர்ணயிப்பது-குழுவின் பொறுப்பு ஆகும்.

- நிதிக்கொள்கைக் குழு ஆறு உறுப்பினர்களைக் கொண்டது. இதில் மூன்று உறுப்பினர்கள் இந்திய ரிசர்வ் வங்கியின் உறுப்பினர்கள் ஆவர். மீதம் உள்ள மூன்று உறுப்பினர்களை மத்திய அரசு நியமிக்கிறது.
- இந்தக் குழு ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் நான்கு முறையாவது சந்திக்க வேண்டும்.
- மத்திய அரசால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்நான்கு ஆண்டுகாலத்திற்கோ அல்லது அதற்கு அடுத்தகட்டளைகள் வரும் வரையிலோ (எது முன்பு வருகிறதோ ) பதவியில் இருக்கலாம்.
- எம்.பி.சி-யின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒருவாக்கு உண்டு. சமமான வாக்குகள் வரும் சூழலில் ரிசர்வ் வங்கி கவர்னர் அறுதி வாக்கினை (casting vote) அளிப்பார்.
- அனைத்து உறுப்பினர்களும் தங்கள் சொத்துக்களையும் பொறுப்புகளையும் வெளிப்படுத்த வேண்டும். மேலும் ஆண்டிற்கு ஒருமுறை இத்தகவல்களைப் புதுப்பிக்க வேண்டும்
- பணவீக்க இலக்கை வங்கிஅடையத் தவறிய தேதி முதல் ஒரு மாதத்திற்குள் நிதிக்கொள்கைக் குழு மத்திய அரசாங்கத்திற்கு அறிக்கைசமர்ப்பிக்க வேண்டும்.
- குழு உறுப்பினர்கள், குழுவின் கூட்டத்திற்கு முன்னும் பின்னும் அமைதி/ இரகசியம் காக்க வேண்டும்.

## ஹெச்.பி.சி.எல் (HPCL) நிறுவனத்திற்கு பங்குகளை விற்க CCEA ஒப்புதல்

- மத்திய அரசுக்கு சொந்தமான இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தின் (Hindustan Petroleum Corporation Limited - HPCL) 51.11 சதவீத பங்குகளை, நிர்வாகக் கட்டுப்பாட்டுடன் சேர்த்து ஓ.என்.ஜி.சி(ONGC) நிறுவனத்திடம் விற்க, பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (Cabinet Committee on Economic Affairs - CCEA) ஒப்புதல் அளித்துள்ளது.
- ONGC நிறுவனத்திடம் பங்குகள் விற்கப்பட்டாலும், இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனம், தொடர்ந்து பொதுத்துறை நிறுவனமாகவே செயல்படும்.

## தொழில் ரீதியாகப் பின்தங்கிய மாநிலங்களின் முன்னேற்றம்

- பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில்துறைகளின் வளர்ச்சியில் மாநிலஅரசு முக்கியமான பொறுப்பு வகிக்கிறது.
- தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்புத் துறையின் கீழ் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் மாநிலத்தின் தொழில்ரீதியாக பின்தங்கிய பிரதேசங்களில் தொழில்மயமாக்கலை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநில அரசுகளின் முயற்சிகளை ஊக்குவிக்கிறது.
- வடகிழக்கு மற்றும் இமாலய மாநிலங்களில் தற்போதுள்ள தொழில்துறை பூங்காக்கள் / தோட்டங்கள் / பகுதிகள் ஆகியவற்றில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக "மாற்றியமைக்கப்பட்ட தொழில்துறை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம்"(MIIUS)என்ற திட்டம் உள்ளது.
- எனினும், பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு (CCEA) கடந்த வருடம் பின்தங்கிய மாநிலங்களில் மாற்றியமைக்கப்பட்ட தொழில்துறை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை(MIIUS) செயல்படுத்துவதை நிறுத்த முடிவு செய்துள்ளது.
- வடகிழக்கு மற்றும் இமயமலை மாநிலங்களுக்கான எதிர்காலக் கொள்கையை வலியுறுத்தி நிதிஆயோக்கின் தலைமைநிர்வாக அதிகாரி தலைமையில் ஒரு குழுவினை இவ்வமைச்சரவைக் குழு அமைத்தது.

### பாரத் பற்றுச்சீட்டு செலுத்து அமைப்பு (Bharat Bill Payment System - BBPS)

- தேசியப்பணம் செலுத்து நிறுவனமானது (National Payments Corporation of India - NPCI) , மத்திய பாரத் பற்றுச்சீட்டு செலுத்துப்பிரிவாக (Bharat Bill Payment Central Unit - BBPCU) இயங்கவும், பாரத் பற்றுச்சீட்டு செலுத்து அமைப்பை (BBPS) அதிகாரப்பூர்வமாக செயல்முறைப்படுத்தவும் பாரத ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது .
- மின்சாரம், தொலைத்தொடர்பு, டிடிஹெச், குடிநீர் மற்றும் சமையல் எரிவாயு போன்ற 45 கோடி பற்றுச்சீட்டுகளை BBPS மூலம் செலுத்த முடியும் . நாட்டில் டிஜிட்டல் முறையிலான பணம் செலுத்தும் பழக்கத்தை இந்த அமைப்பு பெரிதும் ஊக்கப்படுத்தும். மேலும், பற்றுச்சீட்டு செலுத்தும் முறைகளை முறைப்படுத்த இந்த முயற்சி உதவும் .
- கடந்த ஆகஸ்ட் மாதம் , ரிசர்வ் வங்கி அனுமதி அளித்தபின் , முதல்கட்டமாக 8 BBPS அலகுகள் நடைமுறைப்படுத்தி சோதித்துப் பார்க்கப்பட்டது. ஒருவருட சோதனைக்குப் பிறகு , தற்போது இறுதி கட்டமாக முழு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- தற்பொழுது,தேசியப்பணம் செலுத்துநிறுவனம் (NPCI) சான்றளித்து அங்கீகரித்துள்ள மொத்த மத்திய பாரத் பற்றுச்சீட்டு செலுத்துப்பிரிவுகளின் (BBPOU) எண்ணிக்கை 24 ஆகும்.
- சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் : மூன்று பொதுத்துறை வங்கிகள் - Bank of Baroda, Union Bank of India and Indian Overseas Bank ; 10 தனியார் கடன் நிறுவனங்கள்; 5 கூட்டுறவு வங்கிகள் மற்றும் 6 வங்கியல்லா பற்றுச்சீட்டு தொகுப்பு நிறுவனங்கள் (non-bank biller aggregators).
- BBPS - இல் பெருமளவான செலுத்து பரிவர்த்தனைகள் மின்சாரத்துறையில் நடைபெறுகின்றன. நாட்டின் அதிகமான பற்றுச்சீட்டுகள் மின்சாரத் துறையில் உருவாகின்றன (மாதம்சுமார்18 கோடிப் பற்றுச்சீட்டுகள்). இதில் வெறும் 10 சதவீதம் மட்டுமே டிஜிட்டல் முறையில் செலுத்தப்படுகின்றன.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

### 73 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது ரஷியா

- ரஷியா 73 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தி அவற்றினைச் சுற்றுவட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தியதாக அறிவித்தது.
- சோயுஸ் 2-1 ஏ ராக்கெட் மூலம் ஒரு புகைப்படச் செயற்கைக் கோள் மற்றும் 72 மைக்ரோ செயற்கைக்கோள்கள் என மொத்தம் 73 செயற்கைக்கோள்கள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.
- சுமார் 8 மணி நேர பயணத்துக்குப் பிறகு அனைத்து செயற்கைக் கோள்களும் முன்னர் தீர்மானிக்கப்பட்ட அதனதன் சுற்றுவட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.
- உலகிலேயே முதல்முறையாக மிகவும் சிக்கலான செயற்கைக்கோள்களை ஏவும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- விண்ணில் செலுத்தப்பட்டுள்ள கனோபஸ் - வி.ஐகே (Kanopus - V - IK) என்ற புகைப்பட செயற்கைக்கோளானது பூமியைப் பரந்த கோணத்தில் படம் எடுத்து அனுப்பும்.
- இதன்மூலம் காட்டுத்தீ ஏற்படும் பகுதிகளைத் துல்லியமாக கண்டறியலாம் என்பதுடன் நிலப்பகுதி வரைபடங்களை மேம்படுத்தவும் முடியும் என்று ரஷ்ய விண்வெளி ஆய்வு நிறுவனமான ராஸ்காஸ்மோஸ் தெரிவித்துள்ளது.
- ரஷியா விண்ணில் செலுத்திய 72 சிறிய செயற்கைக்கோள்களில் ஜப்பான், ஜெர்மனி, கனடா ஆகிய நாடுகள் தயாரித்த 10 செயற்கைக்கோள்கள் உள்பட அமெரிக்கா வடிவமைத்த 62 நானோ செயற்கைக்கோள்களும் அடங்கும்.

## இந்தியாவின் முதல் உயிர்-மீத்தேன் பேருந்தை அறிமுகப்படுத்தியது டாட்டா

- டாட்டா மோட்டார்ஸ் நிறுவனம் நாட்டின் முதல் உயிர்-சி.என்.ஜி (உயிர்-மீத்தேன்) பேருந்து ஒன்றை உருவாக்கியுள்ளது, இது சமீபத்தில் "உர்ஜா உத்சவ்" (Urja Utsav) எனும் உயிர் - சக்தி நிகழ்ச்சியில் (Bio - energy event) வெளியிடப்பட்டது.
- டாட்டா மோட்டார்ஸ் நிறுவனம் இந்தியாவின் கனரக வாகனங்கள், ராணுவ வாகனங்கள் தயாரிப்பதில் பெரும் பங்கு வகிக்கும் நிறுவனம் ஆகும்.
- இந்நிலையில் , புனேவில் உள்ள ஷிவ் சத்ரபதி விளையாட்டு வளாகத்தில் நடந்த 'உர்ஜா உத்சவ் இல் மூன்று வகையான என்ஜின்களை பார்வைக்கு வைத்தது.
- மேலும், Tata LPO 1613 (5.7 SGI) எனும் உயர் ரக BS- IV என்ஜின்கள் பொருத்தக்கூடிய பேருந்துகள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

## ஆல்பெர்டவெனேட்டர் கர்ரி (Albertavenator Curriei) என்ற பறவை போன்ற டினோசரின் தொல்படிவம் கண்டுபிடிப்பு

- ஆல்பெர்டவெனேட்டர் கர்ரி அல்லது கர்ரி ஆல்பர்ட்டா என்ற வேட்டையாடும் டினோசார் இனத்தின் புதைவடிவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இந்த நீல மற்றும் பழுப்பு நிறமுடைய உயிரினங்கள் 71 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் கனடா நாட்டுப் பகுதியில் வாழ்ந்துள்ளன .
- தற்பொழுது "ரெட் டீர் பள்ளத்தாக்கு" என்று அழைக்கப்படும் பகுதிகளில் நீண்ட காலம் புதையுண்டு கிடந்த இவற்றின் தொல்படிமம் தற்பொழுது கண்டெடுக்கப்பட்டுள்ளது.



- இந்த ஆல்பெர்டவெனேட்டர் கர்ரி இன டினோசர்கள் இரண்டு கால்களில் நடந்துள்ளன. மேலும் அவற்றின் உடல் முழுவதும் இறகுகளால் மூடப்பட்டு இருந்தது. இந்த ஆய்வின் மூலமாக, கண்டறியப்படாத மேலும் பல இனங்கள் இருப்பதாகக் கருதப்படுகிறது.

## உலகின் முதல் லேசர் ஆயுதம்

- அமெரிக்கா, உலகின் முதல் லேசர் ஆயுதத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- லேசர் ஆயுத அமைப்பு (சுருக்கமாக - லாஸ்) (Laser Weapons System - LaWS) என்று பெயரிடப்பட்டு

இருக்கும் இந்த ஆயுதம் பாரசீக வளைகுடாவில் இருக்கும் நிலம்-நீர் இரண்டிலும் பயணிக்கக் கூடிய யு.எஸ்.எஸ் பொன்சே (USS ponce) என்ற கப்பலில் நிறுவப்பட்டுள்ளது .

- செயல்பாட்டு ரீதியாக, இது ஒரு லேசர் போலவே செயல்படுகிறது. போட்டான்கள் (Photons) வெளியிட தனியறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
- முற்றிலும் அமைதியாகவும் கண்ணுக்குத் தெரியாததாகவும் இருக்கும் இந்த லாஸ் லேசர் கற்றை, ஒளி வேகத்தில் பயணிக்கிறது (விநாடிக்கு 186,000 மைல் அல்லது வினாடிக்கு 300,000 கிலோமீட்டர்). அதாவது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை (Inter-continental Ballistic Missile) விட 50,000 மடங்கு வேகமானது .
- காற்றுவழி வரும் ஆபத்துகளை எதிர்கொள்வது மட்டும் அல்லாமல், நீர்வழி வரும் தாக்குதல்களையும் தாக்கி செயலிழக்கச் செய்யும் வல்லமை வாய்ந்தது இந்த லாஸ் கட்டமைப்பு ஆகும்.

## ஆதார் செயலி

- ஆண்ட்ராய்ட் கைபேசியில் (Smart phone) ஆதார் தரவை ஒத்திசைவு செய்வதற்கான ஒரு புதிய செயலி தொடங்கப்பட்டுள்ளது. ஆதார் வழங்கும் பொறுப்பை வகிக்கும் நிறுவனமான இந்திய ஒத்திசைவு செய்வதற்கான தனிப்பட்ட அடையாள ஆணைய அமைப்பு (Unique Identification Authority of India - UIDAI), "எம்-ஆதார்" (mAadhaar) என்ற இந்தச் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது .
- தற்காலத்துக்கு ஆண்ட்ராய்ட் "ப்ளே ஸ்டோர்" இல் மட்டுமே கிடைக்கும். இந்தச் செயலியினை உருவாக்குபவர் (developer) UIDAI என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- mAadhaar செயலியை அமைத்தவுடன், உங்கள் அலைபேசி எண், முகவரி மற்றும் பிற ஆதார்அட்டை விவரங்கள் ஆகியவை செயலியில் சேமிக்கப்படும்.
- ஒருவர் தன் ஆதார் தரவு மற்றும் விவரங்களை மூன்றாம் தரப்பினருடன் மின்னஞ்சல், பார்கோடு, QR குறியீடுகள் அல்லது அருகாமை தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் (Near field communication - NFC) மூலம் பகிர்ந்து கொள்ள முடியும்.

## இதய நோய் குறித்த மரபணு ஆராய்ச்சிக்கு புதிய ஒப்பந்தம்

- இதய நோய் தொடர்பான மரபணு ஆய்வுகளை மேற்கொள்ளும் வகையிலான புதிய ஒப்பந்தத்தில் மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவமனை கையெழுத்திட்டுள்ளது.
- மரபணு அடிப்படையிலான நோயறிதல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனமான . 'மெட்ஜீநோம் உடன் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இதன்படி மாரடைப்பு, நுரையீரல் தமனியில் உயர் ரத்த அழுத்தம், இதய நோயினால் ஏற்படும் திடீர் மரணங்கள் உள்ளிட்டவை குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.
- மெட்ஜீனோம் நிறுவனம், கடந்த ஆண்டு இம்மருத்துவமனை வளாகத்தில் மரபணு ஆய்வகம் மற்றும் பரிசோதனை மையம் ஒன்றை நிறுவியது. அதன் தொடர்ச்சியாக இந்தப் புதிய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

## லிங்க்ட்இன் லைட் )LinkedIn Liteஇந்தியாவில் முதலில் வெளியிடப்படுகிறது : செயலி (

- லிங்க்ட்இன் என்பது தொழில்முறை சமூக வலையமைப்பு ஆகும் இந்தியாவில் சுமார் .42 மில்லியன் மக்கள் இந்த இணையதளத்தில் உறுப்பினர்களாக உள்ளனர் . இந்நிலையில் லிங்க்ட்இன் நிறுவனம் , 'லிங்க்ட்இன் லைட் . என்ற புதிய ஆண்டிராய்டு செயலியை இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது ' முன்னர் இருக்கும் லிங்க்ட்இன் செயலியை விட இது இலகுவானதும் வேகமாக இயங்கக்கூடியதும்

.ஆகும்

- இந்தியாவில் உள்ள உறுப்பினர்களுக்கு ,செயலியின் முதற்கட்ட பதிப்பு 'லிங்க்கிடின் லைட்' பதிவிறக்கம் செய்ய வெளியிடப்பட்டுள்ளது.
- அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் லிங்க்ட்இன் இணையதளத்தின் கைப்பேசி இணக்கப் பதிப்பு மற்றும் ஆண்ட்ராய்டு செயலி விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

## இணையவெளி உலக மாநாடு – இந்தியாவில் நடைபெறுகிறது

- உலகளாவிய இணையவெளி மாநாட்டை (Global Conference of Cyber Space -GCCS) 2017 இல் இந்தியா நடத்தவுள்ளது. உலகின் மிகப்பெரிய இணையவெளி மாநாடானது வரும் நவம்பர் 23 - 24 ஆம் தேதிகளில் நடக்கவுள்ளது. இதனை பிரதமர் தொடங்கி வைக்கிறார். 5வது உலகளாவிய இணையவெளி மாநாட்டை இந்தியா நடத்துகிறது.
- பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பின் (Organisation for Economic Co - operation and Development) உறுப்பு நாடுகளை விட்டு வெளியே முதன் முறையாக இந்த (GCCS) மாநாடு நடக்கவுள்ளது.
- GCCS 2017 க்கான கருப்பொருள் "அனைவருக்கும் இணையவெளி: அனைவரையும் உள்ளடக்கிய, நிலையான, மேம்பட்ட, பாதுகாப்பான இணையவெளி" (Cyber4all: An inclusive Sustainable Development Safe and Secure Cyber space).
- இணைய பாதுகாப்பு என்பது, ஜி.சி.சி.எஸ்., 2017 இல் முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளில் ஒன்றாக இருக்கும். குறிப்பாக மத்திய அரசானது தனியார் துறையில் குறிப்பிட்ட சில துறைசார்ந்த அவசர மையங்களை அமைப்பதன் மூலம், இணைய பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப உள்கட்டமைப்பை உறுதிப்படுத்த முடியும்.
- உலக கருத்தரங்க மாநாட்டில் கலந்துகொள்வதோடு மட்டுமல்லாமல், கருத்தைப் பரிமாற்றுவதற்கு சிறந்த இடமாகவும், சர்வதேச சமூகத்தில் நெருக்கமான ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும், இந்த மாநாடு உதவுகிறது.

| எண் | மாநாடு | வருடம் | நடைபெற்ற இடம் |
|---|---|---|---|
| 1. | முதல் மாநாடு | 2011 | இலண்டன், இங்கிலாந்து |
| 2. | இரண்டாம் மாநாடு | 2012 | புடாபெஸ்ட் , ஹங்கேரி |
| 3. | மூன்றாம் மாநாடு | 2013 | சியால், தென் கொரியா |
| 4. | நான்காம் மாநாடு | 2015 | ஹேக், நெதர்லாந்து |
| 5. | ஐந்தாம் மாநாடு (அறிவிக்கப்பட்டுள்ளது | 2017 | இந்தியா |

## போபோஸ் (Phobos)

- சூரிய குடும்பத்தின் மிகச்சிறிய நிலவுகளில் ஒன்றான போபோஸ், செவ்வாய் கிரகத்தைச் சுற்றி வருகிறது



- சூரியக் குடும்பத்தில் தன் மூலக் கிரகத்தின் (Parent Planet) நாள் அளவைவிட குறைந்த நேரத்தில் அக்கிரகத்தினை வட்டமிடும் ஒரே இயற்கைக் கோள் போபோஸ் மட்டுமே
- சிவப்பு கிரகமானது செவ்வாய் கிரகம், டேய்மோஸ் (Deimos) என்ற இயற்கையான துணைக்கோளினைக் கொண்டுள்ளது
- டேய்மோஸ் உடன் ஒப்பிடுகையில், போபோஸ் மிகப்பெரியது மற்றும் மிகவும் உள்புறத்தில் அமைந்துள்ளது
- சமீபத்தில், நாசாவின் ஹப்பல் விண்வெளி தொலைநோக்கி (Hubble Space Telescope) செவ்வாய் கிரகத்தின் சுற்றுப்பாதையில் உள்ள போபோஸின் படங்களை எடுத்து அனுப்பியுள்ளது.

## உள்நாட்டுத் தொழில்நுட்பத்தில் "சூப்பர் கம்ப்யூட்டர்': மத்திய அரசு முடிவு

- முழுவதும் உள்நாட்டுத் தொழில்நுட்பத்திலான "சூப்பர் கம்ப்யூட்டரை" (அதிதிறன் கணினி) தயாரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின்கீழ் மூன்று கட்டங்களாக இந்த சூப்பர் கம்ப்யூட்டர் தயாரிக்கும் பணிகள் நடைபெறவுள்ளன. ரூ.4,500 கோடி மதிப்பிலான இந்தத் திட்டத்துக்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு கடந்த ஆண்டு ஒப்புதல் அளித்தது.
- நாடு முழுவதும் அறிவியல் ஆய்வுகளுக்கு சர்வதேச தரத்திலான கணினிகள் கிடைக்க வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். மூன்று கட்டமாக மொத்தம் 50 சூப்பர் கம்ப்யூட்டர்களை தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- முதல் கட்டத்தில் உருவாக்கப்படவுள்ள 6 சூப்பர் கம்ப்யூட்டர்களில் 3 கம்ப்யூட்டர்கள் வெளிநாடுகளில் வாங்கப்படவுள்ளன. அடுத்த 3 கம்ப்யூட்டர்களின் உதிரி பாகங்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, இந்தியாவில் ஒருங்கிணைக்கப்படவுள்ளது.
- இவை பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகம், கான்பூர், காரக்பூர், ஹைதராபாத் ஐஐடிக்கள், புனேவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிலையம், பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிலையம் ஆகியவற்றில் நிறுவப்படும். இத்திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் வெற்றிகரமாக செயல்படுத்தப்படும்.
- இரண்டாவது கட்டத்தில் சூப்பர் கம்ப்யூட்டரின் முக்கிய பாகங்கள் அனைத்தும் இந்தியாவிலேயே தயாரிக்கப்படும். மூன்றாவது கட்டத்தில் ஏறக்குறைய அனைத்து பாகங்களும் இந்தியாவில்

தயாரிக்கப்பட்டவையாக இருக்கும்.

- இப்போது சர்வதேச அளவில் அமெரிக்கா, ஜப்பான், சீனா, ஐரோப்பிய யூனியன் ஆகியவை சூப்பர் கம்ப்யூட்டர் தயாரிப்பில் முன்னிலையில் உள்ளன.
- இந்தியாவில் 1988ஆம் ஆண்டிலேயே சூப்பர் கம்ப்யூட்டர் தயாரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளப்படும் பரம் சூப்பர் கம்ப்யூட்டர்கள் உருவாக்கப்பட்டன. எனினும், கடந்த 10 ஆண்டுகளாக இந்தியாவில் சூப்பர் கம்ப்யூட்டர் தயாரிக்கும் பணியில் பெரிய முன்னேற்றம் ஏற்படவில்லை.
- இப்போது இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 25 சூப்பர் கம்ப்யூட்டர்கள் உள்ளன. இவை வானிலை, பருவநிலை மாற்றம், அணு ஆய்வு ஆகிய துறைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## மாற்றுத் திறனாளிகளுக்கு இடங்களை அணுக உதவும் 'பில்லியன்அபில்ஸ்' செயலி

- மாற்றுத் திறனாளிகள் அணுகக் கூடிய வசதி வாய்ப்புகள் அமைந்துள்ள இடங்களைக் கண்டுபிடித்து உதவும் விதமாக, 'பில்லியனபில்ஸ்' (Billionables) என்ற புதிய செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகளுக்கு அத்தியாவசியமான சரிவுமேடை, விசைத்தூக்கி, படிக்கட்டுகள் இல்லாத இடங்கள், பார்வையற்றோருக்கான பிரெய்ல் எழுத்து முறை, வரைபடச்செய்திகள், சைகை மொழி, கோதுமைப்புரதம் அற்ற உணவுகள் போன்றவை எங்கு அமைந்திருக்கின்றன என்பதை வரைபடத்தொடு இந்தச் செயலி காண்பிக்கும்.




- பில்லியனபில்ஸ் செயலியில் வழிகாட்டியும், இடங்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதற்கான வசதியும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் வகையில், அவர்கள் அணுகக்கூடிய இடங்களை செயலியில் பதிவிடும் மக்களுக்கு வெகுமதிப்புள்ளிகள் அளித்து ஊக்கப்படுத்தப்படும்.
- பில்லியனபில்ஸ் என்பது சமூகஆர்வத்துடன் தொடங்கப்பட்ட தொடக்கநிலை நிறுவனம் ஆகும். மாற்றுத்திறனாளியான சமீர்கார்க் என்பவர் இதனை நிறுவியுள்ளார்.

## மின்காப்புரிமை

- காப்புரிமை வழங்கிய பின்னர்இ-காப்புரிமை சான்றிதழ்களை விநியோகிக்கும் முறையை வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.

- மின்காப்புரிமைச் சான்றிதழ் ஒரு தானியக்க கட்டுப்படுத்தி அமைப்பு மூலம் உருவாக்கப்படும். பின்னர் இது அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர் / காப்புரிமை முகவரின் மின்னஞ்சல் முகவரிக்கு தகவல்களை அனுப்பும்.
- இதனால் காப்புரிமைச் சான்றிதழ்களை அனுப்புவதில் ஏற்படும் தாமதங்களை இது நீக்குகிறது, அதிக வெளிப்படைத் தன்மையையும் அதிகரிக்கிறது.

## உயர்மட்ட விண்வெளி ஆய்வகம்

- உயர் மட்ட இயற்பியல் விண்வெளி ஆய்வகம் மேற்குத்தொடர்ச்சி மலையில் உள்ள மூணாறில் (கேரளா) நிறுவப்பட்டுள்ளது.
- உயர்மட்ட இயற்பியல் விண்வெளி ஆய்வகமானது அந்த மாநிலத்தில் குறிப்பிட்ட பகுதியில் உள்ள விண்வெளி மற்றும் மழை நிகழ்வுகளை ஆராய்ந்திட பயன்படுகிறது.
- பருவமழைப் பொழிவு கணிப்புக்கு பயன்படுத்தப்படும் மாதிரிகளின் சிறந்த செயல்முறைகள் மற்றும் மழைப்பொழிவின் பரவல் ஆகியவற்றின் தன்மையைப் பற்றி புரிந்து கொள்ள பயன்படுகிறது.
- மகாராஷ்டிராவில் மஹாபலேஷ்வர் (கொங்கன்) என்னும் இடத்தில் மற்றுமொரு உயர்மட்ட இயற்பியல் விண்வெளி ஆய்வகம் செயல்பாட்டில் உள்ளது.

## ரிலையன்ஸ் பாதுகாப்பு நிறுவனம் கடற்படை கப்பல்களான ஷாச்சி மற்றும் சுருதியை அறிமுகப்படுத்தியது

- ரிலையன்ஸ் பாதுகாப்பு மற்றும் பொறியியல் லிமிடெட் (RDEL) நிறுவனமானது குஜராத்தில் உள்ள பிப்பாவ் துறைமுகத்தில் முதல் இரண்டு கடற்படை ரோந்து கப்பல்களை (NOPVs) ஷாச்சி மற்றும் சுருதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த இரண்டு NOPVக்கள் இந்தியாவில் தனியார் துறை கப்பல் சேவையால் தொடங்கப்படும் முதல் போர்க்கப்பல்கள் ஆகும்.
- இந்த கப்பல்கள், P-21 திட்டத்தின் கீழ் இந்தியக் கடற்படைக்கு ஐந்து கப்பல்களை கொடுக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- ரிலையன்ஸ் உள்கட்டமைப்பின் துணை நிறுவனமான RDEL ஆனது, இந்தியாவில் தனியார் உற்பத்தி உரிமையாளராக உள்ளது. இது 2011ல் பாதுகாப்புப்படை கப்பல்களுக்கான பாதுகாப்புத்துறை உற்பத்திக்கு அனுமதி பெறும் முதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்தியக் கடலோரப் பாதுகாப்புக்காக ஒரு பயிற்சி கப்பல் மற்றும் 14 வேகமாக செல்லக்கூடிய ரோந்துப்படகுகள் (FPVs) ஆகியவற்றின் கட்டுமானத்திலும் ஈடுபட்டுள்ளது.
- இதற்கு முன் ஆர்டிஎல் நிறுவனம் ONGCக்காக கடற்கரை உதவிக் கப்பல்கள் மற்றும் நார்வே நிறுவனத்திற்காக பனிப்பொழிவு தாங்கிகள் மற்றும் NPCC-UAEக்காக கடல் துறைமுகச் சரக்குக் கப்பல்கள் உள்ளிட்ட பல்வேறு வாடிக்கையாளர்களுக்கான கப்பல்களை கட்டியுள்ளது.
- இது சர்வதேச வாடிக்கையாளர்களுக்காகபழுது மற்றும் மறுசீரமைப்பு, வணிக மற்றும் பாதுகாப்பு கப்பல்கள் மற்றும் நகர்ந்து செல்லக்கூடிய எண்ணெய் தோண்டும் தளங்கள் ஆகிய பணிகளில் உதவுகிறது.

*கடற்படை ரோந்து கப்பல்கள் (NOPVs)*


- NOPVக்கள் நாட்டின் பரந்த கடல் பொருளாதார மண்டலத்தை (EEZ) கண்காணித்து வரும் முக்கியமான ரோந்து கப்பல்கள்.
- கடற்படை ரோந்துகள், கடலோர சொத்துக்களைப் பாதுகாத்தல், கடற்படை ஆதரவு

நடவடிக்கைகள், கடலோர பாதுகாப்பு நடவடிக்கைகள்மற்றும் கப்பல்பாதைகள் பாதுகாப்பு போன்ற செயல்பாட்டு பணிகளையும் மேற்கொள்கின்றன.

- ஆர்டிஇஎல் (RDEL) மூலம் உருவாக்கப்பட்ட ஐந்து NOPVகள் 76 மிமீ சூப்பர் ரேபிட் கன் மவுண்ட் (SRGM) அமைப்போடு நடுத்தர எல்லை மற்றும் குறுகிய தூர தாக்குதல் மற்றும் தற்காப்பு திறன்களை மேம்படுத்தும் இரண்டு 30 மிமீ AK- 630 துப்பாக்கிகளோடுபலப்படுத்தப்பட்டுள்ளன.
- இந்தக் கப்பல்களின் ஆயுதங்கள் தொலைதூர மின்னணு கட்டுப்பாட்டு அமைப்பு மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றன.
- இவை 20,000 கிலோவாட் டீசல் எஞ்சின் மூலம் இயக்கப்படும். இதனால் 25 கடல் மைல்கள் வரை வேகத்தை வழங்க முடியும்.

## 'ஸ்டென்ட் உபகரணத்துக்கு அதிக விலை கூடாது': மருத்துவமனைகளுக்கு மத்தியஅரசு அறிவுறுத்தல்

- இரத்தக்குழாய்களில் பொருத்தப்படும் ஸ்டென்ட் உபகரணத்துக்கு அதிகப்படியான விலை நிர்ணயிக்கக் கூடாது என்று மருத்துவமனைகளுக்கு மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.
- மருத்துவத்துறையில் உயிர்காக்கும் முக்கிய உபகரணங்களில் ஒன்றாக 'ஸ்டென்ட் கருதப்படுகிறது. அடைப்புகளால் தடைபட்ட இரத்த ஓட்டத்தை மீண்டும் சீராக்குவதற்காக இவை இரத்தக் குழாய்களில் பொருத்தப்படுகின்றன. இந்த உபகரணங்களுக்கான விலை மீது எந்தக் கட்டுப்பாடும் இல்லாத போது, அவற்றைப் பொருத்துவதற்காக பல லட்சக்கணக்கான ரூபாயை தனியார் மருத்துவமனை நிர்வாகங்கள் நோயாளிகளிடம் வசூலித்தன.
- இந்நிலையில் மத்திய மருந்தகத்துறை சார்பில் கடந்த பிப்ரவரி மாதம் ஓர் அறிவிப்பு வெளியானது. 'ஸ்டென்ட் உபகரணங்களுக்கான விலை 85 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, சாதாரண ஸ்டென்ட் விலை ரூ.7,260 எனவும், மருந்து நிரப்பப்பட்ட 'ஸ்டென்ட் உபகரணம் ரூ.29,600 எனவும் நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி, 'ஸ்டென்ட் உபகரணத்துக்கு அதிகவிலை நிர்ணயிக்கக்கூடாது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.



### மரபணு பொறியியல் மதிப்பீட்டுக் குழு (Genetic Engineering Appraisal Committee -GEAC)

- இந்தக் குழு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளது.
- அபாயகரமான நுண்ணுயிரிகள் மற்றும் இனக்கலப்பு நுண்ணுயிரிகளின் பயன்பாடு சம்பந்தப்பட்ட முடிவுகளையும் , அதற்கான ஒப்புதலையும் அளிக்கும் உயர்மட்டக் குழு இதுவாகும்.
- மரபணு மாற்றப்பட்ட / மரபணு பொறியியல் மூலம் வடிவமைக்கப்பட்ட உயிரினங்களைப் பண்ணைச் சோதனைகள் செய்வதற்கும், சுற்றுச்சூழலில் வெளியிடுவது தொடர்பான திட்டவட்டமான ஒப்புதலுக்கும், இந்தக் குழு பொறுப்பு ஏற்கிறது.

### இந்தியாவில் உருவாக்குவோம் ('Made in India') – மைக்ரோசாப்ட் வழங்கும் 'கைசாலா' செயலி

- வணிக நிறுவனங்களின் உற்பத்தியினை பெருக்கவும் ,நிறுவன இயக்கங்களை மேம்படுத்தவும் , மைக்ரோசாப்ட் இந்தியா நிறுவனம் 'கைசாலா' என்ற செயலியை உருவாக்கியுள்ளது . இந்தச் செயலி குழு தொடர்பு மற்றும் பணி நிர்வாகத்திற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. தொலைதூர இடங்களிலும் 2G இணையதள சேவையைக் கொண்டு இயங்கும் சிறப்பு அம்சத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 'கைசாலா' செயலியைப் பயன்படுத்தி நிறுவனங்களுக்கு உள்ளே அல்லது வெளியே இருக்கும் கணினி மற்றும்கைப்பேசி பயன்பாட்டாளர்களை ஒருங்கிணைக்க முடியும்.
- கைபேசிசெய்திப் பரிமாற்றம், மற்றும் கணினி வழிச் செய்திப் பரிமாற்றம் என்ற இருவேறு உலகுக்கும் இருக்கும் இடைவெளியை இணைக்க 'கைசாலா' செயலி முற்படுகிறது.

### மீத்தேன் ஹைட்ரேட்டில் இருந்து இயற்கை எரிவாயு

- மீத்தேன் ஹைட்ரேட்டிலிருந்து சீனா இயற்கை எரிவாயுவை வெற்றிகரமாக உற்பத்தி செய்துள்ளது. "எரிதகுபனிக்கட்டி" (Flammable Ice) என்றும் மீத்தேன் ஹைட்ரேட் அழைக்கப்படுகிறது. இந்தச் சோதனைத் திட்டம் சீனப் பெருங்கடலில் செய்து பார்க்கப்பட்டுள்ளது.
- மீத்தேன் ஹைட்ரேட் பனிக்கட்டியின் நீர்படிமங்களுக்கு இடையே மீத்தேன் வாயு அடைபட்டு இருக்கும் . இது சீனாவிற்கு முக்கியமான , புதிய நிலையாற்றல் ஆதாரமாக கருதப்படுகிறது. தென்சீனக் கடல் பகுதியில், உலகின் அதிகமான மீத்தேன் ஹைட்ரேட் நிலைகள் இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது .
- ஜப்பானில் இதே போன்ற வெற்றிகரமான உற்பத்தி சோதனை மே மாதத்தில் நிகழ்த்தப்பட்டது. இந்தியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகள் ஹைட்ரேட் போன்ற மாற்று ஆற்றல் முறைகளை கண்டுபிடிக்க முயற்சி செய்து வருகின்றன.

### இந்தியாவின் முதல் ஆளில்லா ராணுவ பீரங்கி – முன்ட்ரா (Muntra)

- அணு ஆயுதம் மற்றும் உயிரி ஆயுத அச்சுறுத்தல்கள் இருக்கும் பகுதிகளில் இயங்கக்கூடிய ஆளில்லா ராணுவ பீரங்கிகளை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (Defense Research and Development Organisation - DRDO) உருவாக்கியுள்ளது.
- கண்காணிப்பு, கண்ணிவெடிகளை கண்டறிவது , ராணுவ உளவு போன்ற மூன்று செயல்களுக்கு மூன்று வகையான பீரங்கிகள் உருவாக்கப்பட்டுள்ளன . முன்ட்ரா/ MUNTRA என்று பெயரிடப்பட்டு இருக்கும் சொல்லின் விரிவாக்கம்'ஆளில்லா ஆய்வுத் திட்டம்'/'Mission UNmanned TRAcked' என்பதாகும்.
- ராஜஸ்தானில் உள்ள மகாஜன் துப்பாக்கி சுடும் துறையில் (Mahajan field firing range ) இந்த வகை

டாங்கிகள் சோதிக்கப்பட்டன. முன்ட்ரா டாங்கிகளில் கண்காணிப்பு ரேடார்கள்பொருத்தப்பட்டுள்ளன. முன்ட்ரா பீரங்கிகளில் இருக்கும்லேசர் தொழிநுட்பம் கொண்ட வரம்பினை கண்டறியும் நிழற்படக் கருவி மூலமாக15 கிலோமீட்டர் தொலைவு வரை இருக்கும் இலக்குகளை உளவுபார்க்க முடியும் .


- முன்ட்ரா பீரங்கிகள் சென்னையில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் ஆய்வகத்தில் இருந்து அறிமுகம் செய்யப்பட்டன .
    - மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுக்கு மரியாதை செலுத்தும் வகையில் சென்னையில் நடந்த கண்காட்சியில் இரண்டு முன்ட்ரா வகை பீரங்கிகள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

# சுற்றுப்புறச்சூழல்

## புலிகள் கடக்க சூழலியல் பாலம்

- தெலுங்கானா மாநிலத்தில் புலிகள், கால்வாயைக் கடந்து செல்ல ஏதுவாக சூழலியல் பாலம் (Eco - bridge) அமைக்கப்பட இருக்கிறது.
- மகாராஷ்டிரா மாநிலம் சந்திராபூர் மாவட்டத்தில் உள்ள ததோபா - அந்தாரி புலிகள் காப்பகத்துக்கும் (Tadoba - Andhari Tiger Reserve - TATR) தெலுங்கானா மாநிலத்தில் உள்ள குமரம் பீம் ஆசிப்பாத் மாவட்டத்திற்கும் இடையே கால்வாய் உள்ளது. இதனால் ஒதுக்கப்பட்டக் காடுகள் (Reserve Forest) பிளவுபடுகின்றன. புலிகளால், பிளவுபட்ட வெவ்வேறு காட்டுப் பகுதிகளுக்குச் சென்று வர முடிவதில்லை.





- இந்தச் சூழலியல் பாலத்தில் வளமான மண் கொட்டப்பட்டு செடிகளும் புற்களும் வளர்க்கப்பட்டு காடு போன்ற தோற்றமளிக்க வேண்டும்.
- பெஜ்ஜீர், தஹிகான் மண்டலத்தில் (Bejjur and Dahegaon) பிரனகிதா தடுப்பணையின் (Pranahita Barrage) வலது கால்வாயின் 72 கிலோ மீட்டர் நெடுக முக்கியமான இடங்களில் இவ்வகைப் பாலங்கள் கட்டப்பட உள்ளன.
- பெஜ்ஜீர் வன வரம்பில் சுல்குபல்லி (Sulgupalli) என்ற இடத்தில் கால்வாயின் அகலம் சுமார் ஒரு கிலோ மீட்டர் உள்ளது. இங்கு அமையவிருக்கும் பாலம் வன விலங்குகள் கடந்து செல்ல போதுமான

அளவு இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

- தெலுங்கானா நீர்ப்பாசனத் துறை (Telangana Irrigation Department) இந்தச் சூழலியல் பாலத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. பாலத்தின் அளவு மற்றும் இடத்தை (தேசிய வனவிலங்கு வாரியம்) பரிந்துரை செய்ய காத்திருக்கின்றது.

*பிரனகிதா ஆறு*

- பிரனகிதா நதியானது கோதாவரி நதியின் மிகப்பெரும் கிளை நதி ஆகும். பெண் கங்கா, வார்தா மற்றும் வயின்கங்கா நதிகளின் தண்ணீரோடு சேர்ந்து பிரனகிதா ஆறு கோதாவரியின் 34% வடிநிலப் பகுதிக்குப் பங்களிக்கிறது.
- விதர்பா பகுதிகள் மற்றும் தெற்கு சாத்புரா மலைப் பகுதிகளில், பிரனகிதா ஆறு பாய்கிறது.
- மகாராஷ்டிராவின் கட்சிரோலி மாவட்டத்திற்கும் , தெலுங்கானாவில் உள்ள அடிலாபாத் மாவட்டத்திற்கும் இடையேயான எல்லையில் பிரனகிதா ஆறு ஓடுகிறது.

## வடக்கு நதி டெராபின் ஆமைகள்

- டெராபின் எனும் சிறிய ஆமை இனம் நன்னீர் அல்லது உவநீரில் வாழும்.
- படாகுர் பஸ்கா (Batagur Baska)என்று பொதுவாக அழைக்கப்படும் டெராபின் இன ஆமைகள் ஆற்று நீரில் வாழ்வன. இவை தென் கிழக்கு ஆசியாவைப் பூர்வீகமாகக் கொண்டவை.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் (IUCN), இதனை அழிந்து வரும் தருவாயில் உள்ள உயிரினங்கள் (Critically Endangered - CR)என்று வகைப்படுத்தியுள்ளது.



- இந்த இனங்கள் தற்போது வங்காளதேசம் (சுந்தரவனக் காடுகள்), இந்தியா (மேற்கு வங்கம் மற்றும் ஒடிசா), இந்தோனேசியா, கம்போடியா மற்றும் மலேசியா ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.
- டெராபின் ஆமை வகையானது அனைத்துண்ணிகளாகும். மேலும் இவை நன்னீர் வாழிடங்களை விரும்புகின்றன.
- இனப்பெருக்கப் பருவத்தில் ( டிசம்பர் - மார்ச் ) உவர் நிலங்களுக்கோ அல்லது அவற்றின் முகத்துவாரங்களுக்கோ இடம்பெயர்ந்து தங்களது முட்டைகளை இட்டுச் செல்கின்றன.
- சுந்தரவனக் காடுகள் புலிகள் காப்பகத்தில், இந்த ஆமைகளை இயற்கையான அபாயங்களில் இருந்து காப்பதற்கும், இவற்றின் மரபணு மேலாண்மைக்கும், இனப்பெருக்கத் திட்டமொன்றை அரசு செயல்படுத்திப் பாதுகாத்து வருகிறது

## இந்திய-வங்கதேச எல்லையில் யானைகள் செல்வதற்கு 13 வழிகள்: மத்திய அரசு முடிவு

- யானைகள் இடம்பெயர்வதற்கு வசதியாக இந்திய-வங்கதேச எல்லையில் அமைக்கப்பட்டுள்ள வேலிகளை நீக்கி 13 வழிகளை உருவாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- யானைகள் இடம் பெறுவது இயற்கையான ஒன்று. அவை இடம்பெயர்வதற்கு வசதியாக அடையாளம் காணப்பட்டுள்ள 13 வழிகள் உள்ள இடத்தில் வேலிகள் நீக்கிவிட்டு சிறப்புக் கதவுகள் அமைக்கப்படும். வங்கதேச எல்லையை ஒட்டி உள்ள மேகாலயாவில் 12 வழிகளும், அசாம் எல்லையில் 1 வழியும் உருவாக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

## கோவை சிங்காநல்லூர் குளம்: தமிழகத்தின் முதல் நகர்ப்புறப் பல்லுயிர்ப் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது

- 16-ம்நூற்றாண்டில்சுமார் 288 ஏக்கர் பரப்பளவில் சோழர் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட இந்த குளம், நொய்யல் ஆற்றில் இருந்தும், நகரின் இதர நீர்வழித்தடங்களில் இருந்தும் நீரைப் பெறுகிறது.
- மற்ற எந்த குளங்களிலும் இல்லாத அளவுக்கு இயற்கைச்சூழல், பசுமையானபரப்பு, பல்லுயிர் செழுமை ஆகியவை இந்த நீர்நிலைக்கு நிறைந்துள்ளன. அதன் பிரதிபலிப்பாகவே இங்குகடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்ற ஆய்வில், தாவர, பறவை உள்ளிட்ட 720 வகையான பல்லுயிர்கள் நிறைந்திருப்பது தெரியவந்துள்ளது.
- குறிப்பாக 396 வகைதாவரங்கள், 160 வகையானபறவைகள், 62 வகையான பட்டாம்பூச்சிகள், 22 வகையான பாலூட்டிகள் என பல்வேறு உயிரினங்கள் இந்த குளத்தை நம்பி உயிர் வாழ்வதாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. மிக முக்கியமாக 200 வகையான மூலிகைச்செடிகள், வெளிநாட்டுப் பறவையினங்கள் ஆகியவற்றுக்கு சிங்காநல்லூர் குளம் அடைக்கலம் கொடுக்கும் இடமாக உள்ளது.



- நகரில் எங்கும் இல்லாத வகையில் நன்னீர் ஆமை அதிகமாக உள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்போது இயற்கை சூழலியல் குறித்து, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கும், ஆய்வுக்கு இடமளிக்கும் பகுதியாகவும் இந்த குளம் மாறியுள்ளது. இந்த சூழலை அங்கீகரித்து, மேம்படுத்த 'நகர்ப்புறப் பல்லுயிர்கள் பாதுகாப்பு மண்டலமாக' அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் முதல்முறையாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது'
- முன்னாள் குடியரசுத்தலைவர் நினைவாக, குளக்கரையில் 'கலாம் வனம்' அமைக்கும் பணியும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

# மாநிலம்

## புனே: கோபால கிருஷ்ண கோகலே அருங்காட்சியகம்

- புனேவில் உள்ள கோகலே அரசியல் மற்றும் பொருளாதார நிறுவனத்தில் (Gokhale Institute of Politics and Economics) கோபால கிருஷ்ண கோகலேவிற்கு என்று ஒரு அருங்காட்சியகம் அர்ப்பணிக்கப்பட உள்ளது.
- 1900 களின் சிறப்பு வாய்ந்த தலைவரான கோபால கிருஷ்ண கோகலே வாழ்ந்த இல்லத்திலேயே இந்த அருங்காட்சியகம் அமையவிருப்பது தான் இதன் தனிச் சிறப்பாகும்.
- மகாத்மா காந்தியடிகள் மற்றும் மகாத்மா ஜோதிபா பூலே போன்ற பல்வேறு தேசிய தலைவர்களுக்கும், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் தனித்தனியே அர்ப்பணிக்கப்பட்ட பல்வேறு அருங்காட்சியகங்கள் புனேவில் அமைந்துள்ளன.

*கோபால கிருஷ்ண கோகலே*

- இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கோகலே மிக முக்கியமான தலைவராவார். இந்திய தேசிய காங்கிரசில் (Indian National Congress - INC) உறுப்பினராக இருந்த போதிலும், 1884-இல் பட்டம் பெற்ற பின்னர் பெர்குசன் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றினார்.
- மஹாதேவ் கோவிந்த ராணடேவின் வழிகாட்டுதலின்படி, ஜூன் 12, 1905 இல் இந்திய சமூகத்தின் ஊழியர்கள் (Servants of Indian Society) என்ற இயக்கத்தினை நிறுவினார். மேலும் 1896ல் தக்காண சபையை (Deccan Sabha) நிறுவினார்.

## நாகாலாந்து முதல்வராக ஜீலியாங் மீண்டும் பதவியேற்பு

- நாகாலாந்து முதல்வராக டி.ஆர்.ஜீலியாங் மீண்டும் பதவியேற்றுள்ளார்.
- நாகாலாந்தில் நாகா மக்கள் முன்னணியின் ஆட்சி நடைபெற்று வருகிறது.
- கடந்த பிப்ரவரி மாதம் நகராட்சித் தேர்தல் இடஒதுக்கீடு விவகாரத்தால் மாநிலம் தழுவிய அளவில் நடைபெற்ற போராட்டம் காரணமாக ஜீலியாங் முதல்வர் பதவியில் இருந்து விலகினார். அதன் பிறகு அவரது கட்சியைச் சேர்ந்த ஷுரோசெலி லீசீட்சு முதல்வராகப் பொறுப்பேற்றார்.
- சட்டப் பேரவையில் அவர் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டுமென்று ஆளுநர் உத்தரவிட்டார். பெரும்பான்மையினை ஜீலியாங் நிரூபித்த பிறகு மற்ற அமைச்சர்கள் பதவியேற்கவுள்ளனர். பதவியில் இருந்து விலகிய 5 மாதத்தில் ஜீலியாங் மீண்டும் முதல்வராகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒடிஸாவின் மிக நீண்ட பாலம் திறப்பு

- ஒடிஸா மாநிலத்தின் மிக நீளமான பாலத்தை முதல்வர் நவீன் பட்நாயக் திறந்துவைத்துள்ளார்.
- சுமார் 2.81 கிமீ நீளமுள்ள இந்த பாலம் தலைநகர் புவனேசுவரத்தை கட்டாக் நகருடன் இணைக்கிறது. தலைநகரை கட்டாக்குடன் இணைக்கும் 2-வது பாலம் இது.
- நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் என இப்பாலத்துக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- மகாநதியின் துணை நதியான "கத்தஜோடியின்" குறுக்காக இந்த நேதாஜி பாலம் கட்டப்பட்டுள்ளது.
- கட்டாக்- புவனேசுவரம் இடையிலான தூரத்தை 12 கிமீ வரை குறைக்கிறது இந்த பாலம்.

### பெஹ்டியன்க்ஹலம் விழா: (Behdienkhlam Festival) ஜேரவாய் (மேற்குஜெயின்டியா மலைகள்)

- நிகழ்வு: ஒவ்வொரு ஆண்டும் ஜூன் அல்லது ஜூலை
- பெஹ்டியன்க்ஹலம் விழா என்பது பினெர் (Pnar) என்ற பழங்குடி மக்களிடையே மிகவும் பிரபலமாக கொண்டாடப்படும் கலாச்சார விழா ஆகும்.
- பெஹ்டியன்க்ஹலம் என்பது (காலரா நோய் அரக்கனை துரத்துவது) ஜூலை மாதத்தில், ஜெயின்டியா பழங்குடியினரின் விதைப்புக் காலத்திற்குப் பிறகு ஆண்டுதோறும் கொண்டாடப்படும் நடனத்திருவிழா.
- இந்தப் பண்டிகை மிகுந்த விளைச்சல் மற்றும் நோய் இல்லா வாழ்க்கைக்காக கடவுளை அழைத்து, வேண்டுவதற்காக கொண்டாடும் பண்டிகை ஆகும்.
- இந்த நடனத்தில் பெண்கள் பங்கேற்பது இல்லை. இத்திருவிழாவின் பொழுது பெண்கள் தங்கள் முன்னோர்களின் ஆத்மாவிற்கு படையலிட்டு உணவளிக்கும் பணியைச் செய்கிறார்கள்.

### மின் சிகரெட்டுகளை விற்பனை செய்வதற்கு ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசு தடை

- ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசு (24/07/17 அன்று) அம்மாநிலத்தில் மின் சிகரெட்டுகள் விற்பனை செய்வதற்கு தடை விதித்தது.
- மின்னணு மூலம் உடலில் நிக்கோட்டினை செலுத்தும், என்ட்ஸ் ((Electronic Nicotine Delivery system , ENDS)என்ற முறையில் இயங்கும் மின்னணு சிகரெட்டுகளின் உற்பத்தி, விநியோகம், வர்த்தகம், இறக்குமதி மற்றும் விளம்பரம் ஆகியவை மீது முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது.
- புகையிலை பழக்கத்தை குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் குறைப்பதற்காக இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


## HOW IT WORKS

E-cigarette is a battery-powered device which simulates smoking. It electronically heats nicotine-based liquid that vaporises to induce the effect of smoking

**Clearomizer**
E-liquid is manually filled through a dropper-tip bottle into a tunnel shaped pipe 'clearomizer,' by the user. When the user inhales through the mouth, the liquid is converted into vapour. After inhalation of sufficient vapour, the user exhales minimal amount of fumes. The exhaled fumes are odourless

**Battery**
LED light on the opposite tip lights up while a user 'vapes.' It indicates if battery is charged or running low

**LED**
Two lithium batteries of 3.7 volts charge the clearomizer to produce vapour




## Cost of a nicotine-fix

E-cigarettes work out to be cheaper than tobacco-based cigarettes, costing up to three times less than the latter. An e-cigarette can hold up to 2ml of liquid at a time. The process of taking in e-cigarette vapour is called 'vaping.' Users can 'vape' up to a hundred times in a 2ml refill

**Tobacco-based cigarettes**

| ₹150 | ₹4,500 |
|---|---|
| One packet of 20 cigarettes | Monthly cost |

E-cigarettes available in flavours like mint, chocolate, strawberry and tobacco

**One-time cost of a device that lasts 6 months: Rs500 to Rs3,000**

Monthly cost of flavoured liquid: Rs1,000

## # twitterbox

### #eCigarettes

Derek Flad@Flad02 Using e-cigarettes in public buildings might be this generations socks and sandals #pureclass #getbetter

Nathan Rabin@nathanrabin Stephen Dorff is to Jack Nicholson what e-cigarettes are to Marlboro Reds.

Terri Green@TerriGreenUSA e-Cigarettes are just #cancer by another name. #ecigarette #cigarettes

ROGER BEZANIS@RogerBezanis If we talk about E-cigarettes to JUNK FOOD, we talk about added foreign ingredients that build in the system sickening it.

X Ian@Nico098 E-cigars might not be safe after all. Although, it is much safer than cigarettes but it might also contain toxic compound when inhaled.

The Raymie @TheRaymie Haven't had a cigarette in nearly 2 weeks. Loving life. #vaping #ecigarettes

ROGER BEZANIS @RogerBezanis Lymphoma is now the leading cancerous result of Vaping and E-Cigarettes, lawyers are building class action suits as you read this

Steve Christie @schristieauthor Repeat after me.....NICOTINE IS NOT TOBACCO, NICOTINE ON ITS OWN IS NOT DEADLY...I MUST LEARN TO DIFFERENTIATE! Feel free to share! #ecigs


Fred K @gotsteem As long as cigarettes are legal for sale to adults, so should #ecigs and our ability to choose which we as adults care to use. I choose ecig.

## After 10 years of smoking, he switched to e-puffing

It has been two years since Akshay Chauhan, 34, (name changed), has switched to e-cigarettes. The Malad resident feels that it has been a wise decision. "Having been addicted to tobacco-based cigarettes for over 10 years, I used to consume up to 20 a day. After being afflicted by chronic cough, I worried for my health and started searching for a less harmful alternative. It is then that I switched to e-cigarettes," he told **dna**.

He sources e-cigarettes from the US. In a bid to advocate its use, he said, "I was apprehensive initially of using e-cigarettes as I did not know of how much harm they cause. While cigarettes have harmful tar and produce smoke, e-cigarettes only vaporise nicotine. They seem less harmful."





## The big business of e-cigarettes

In 2005, there was only one manufacturer of e-cigarettes, something that has now evolved to a $3 billion global business with 466 brands.

Brands, namely US-based Blu and China-based Joyetech, Kangar and Dekang, are major manufacturers of e-cigarettes and sell products internationally through online portals.

Running a Google search for buying e-cigarettes throws up over 20 results. Steamlite.co.in, which operates out of Mumbai Central, Ecigindia.com, a Goregaon-based company, and Sion-based Esutta.com, among other such websites, openly sell e-cigarettes. Further, mobile phone numbers of local paan shop owners, such as Chaurasiya Pan Shop or Rehan Pan Shop, that stock e-cigarette brands, can be easily found.

## What is World Health Organization's stand?

Increasing popularity of e-cigarettes, or Electronic Nicotine Delivery Systems (ENDS), threatens to undermine years of hard work done in tobacco de-addiction. The argument for ENDS is that they don't contain the toxic byproducts found in cigarettes, such as tar, and don't produce smoke. But the fact is that there is very little research on ENDS and no convincing evidence that they are effective as a "quit-smoking device".

WHO calls for regulations to prohibit addition of flavours which may make ENDS more attractive to youths, ban the use of ENDS indoors and in public and workplaces and restrict its advertising, promotion, and sponsorship to ensure adolescents and non-smokers are not targeted.

## How can e-cigarettes harm you?

They contain cancer-causing agents, such as formaldehyde, which in some brands reach concentrations close to that of conventional cigarettes. They deliver nicotine, which contributes to cardiovascular disease.

In severe poisoning cases, people who have downed the nicotine vial can have tremors, convulsions and can later go into coma.

Death may occur due to paralysis of lungs due to intake of an oral dose of 30-60mg; in children, even 10mg of drinking nicotine can cause death.

### ராமேசுவரம் - ஃபைசாபாத் இடையே அயோத்தி விரைவு ரயில்

- ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம்மற்றும் உத்தரபிரதேசத்தில் உள்ளஃபைசாபாத்துக்கு இடையே,அயோத்தி வாராந்திர விரைவு ரயிலை, பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இந்த ரயில் அயோத்தி மற்றும் ராமேஸ்வரத்தில் உள்ள புனித சுற்றுலாத் தலங்களை மையமாக கொண்டு இயக்கப்படுகிறது.

### ராமேஸ்வரத்தில் அப்துல் கலாம் மணிமண்டபம்: பிரதமர் திறந்து வைத்தார்

- ராமேஸ்வரம் அருகே முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் நினைவிடத்தில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ள மணிமண்டபத்தை பிரதமர் திறந்து வைத்தார்.
- ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தை அடுத்த தங்கச்சிமடத்தில் பேய்க்கரும்பு பகுதியில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் நினைவிடம் உள்ளது.
- இங்கு மத்திய அரசின் பாதுகாப்புத்துறை சார்பில் ரூ.15 கோடி செலவில் அப்துல் கலாம் மணிமண்டபம் பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ளது.
- இதில், அக்னி ஏவுகணையின் மாதிரி வடிவம், செயற்கைக்கோள் மாதிரி, கலாமின் 700-க்கும் மேற்பட்ட புகைப்படங்கள், அவர் தொடர்பான 91 ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன.
- அப்துல் கலாமின் 2-ம் ஆண்டு நினைவு தினமான 27 ஜூலை 2017 அன்று இந்த மணிமண்டத்தை திறந்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.



### தமிழகத்தில் புலிகள் சரணாலயங்களைக் கண்காணிக்கும் பணியில் ஆளில்லா விமானங்கள்

- தமிழகத்தில் புலிகள் சரணாலயங்களைக் கண்காணிக்கும் பணியில் ஆளில்லா விமானங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. இந்தியாவில் உள்ள 13 புலிகள் சரணாலயங்களில் இந்த ஆளில்லா விமானம் மூலம் கண்காணிப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தைப் பொருத்தவரை சத்தியமங்கலம், முதுமலை, ஆனைமலை, களக்காடு-முண்டந்துறை என 4 புலிகள் சரணாலயங்கள் உள்ளன.
- இந்த ஆளில்லா விமானங்கள், புலிகள் சரணலாயத்தில் உள்ள வனப் பாதுகாவலர் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்படும். அவர்களுக்குத்தான் இதனை இயக்குவதற்கான பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளது.
- சத்தியமங்கலம் புலிகள் சரணாலயம் தமிழகத்தில் மிகப்பெரியதாகும். எனவே, இந்த ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கான பயிற்சியும், ஒத்திகையும் அங்கேயே தொடங்கப்பட்டது.
- இந்தியாவில் முதல் முறையாக வனப் பாதுகாப்புக்காகவும் வனக் குற்றங்களை தடுக்கவும்

மத்தியப் பிரதேசத்தின் பன்னா புலிகள் சரணாலயத்தில் இரண்டு ஆளில்லா விமானங்கள் கடந்தாண்டு அறிமுகப்படுத்தப்பட்டன.

- உலகளவில் இந்தோனேசியாவின் சுமத்ரா, போர்நியோ காடுகளிலும் நேபாளம், சீனா, ஸ்காட்லாந்து, நமீபியா மற்றும் சில மேற்கத்திய நாடுகளிலும் வனங்கள் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக்காக ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- மனிதர்கள் புக முடியாத காடுகளை ஆய்வு செய்தல், சந்தனக் கட்டைகள், செம்மரக்கட்டை உள்ளிட்ட வனக் கொள்ளையைத் தடுத்தல், வேட்டைத் தடுப்பு, காட்டுத்தீ தடுப்பு, வன விலங்குகளை கண்காணித்தல், நீர் நிலைகளைக் கண்காணித்தல், வனங்கள் குறித்த வரைபடங்களை தயாரித்தல், வனங்கள் விரிவாக்கம் மற்றும் அழிவுகளின்போது அவற்றை அளவிடுதல், அழியும் தருவாயில் உள்ள வன உயிரினங்கள் மற்றும் மரம், தாவரங்களைக் கண்டறிந்து பாதுகாத்தல், வனவிலங்கு கணக்கெடுப்பு, அவற்றின் பழக்க வழக்கங்களை கண்காணித்தல் போன்ற பணிகள் இவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### ஃபீல்ட்ஸ் பதக்கம் வென்ற மரியாம் மீர்ச்சாகானி காலமானார்

- ஃபீல்ட்ஸ் பதக்கம் பெற்ற முதல் பெண்மணியான மரியாம் மீர்ச்சாகானி அமெரிக்காவில் காலமானார்.
- கலிபோர்னியாவில் உள்ள ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தின் கணிதத்துறை பேராசிரியரான மரியாம் புற்று நோயால் காலமானார்.
- கணிதத் துறையில் நோபல் பரிசுக்கு இணையான பரிசாக கருதப்படும் ஃபீல்ட்ஸ் பதக்கத்தை சர்வதேச கணித ஒன்றியம் (International Mathematical Union - IMU) நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை அளித்து வருகிறது.
- ஒவ்வொரு முறையும் நாற்பது வயதுக்கு உட்பட்ட இரண்டு முதல் நான்கு கணிதவியல் நிபுணர்களுக்கு இந்த பரிசு வழங்கப்படும்.
- 2014ஆம் ஆண்டு தென் கொரியாவில் நடைபெற்ற சர்வதேச கணிதவியலாளர்கள் மாநாட்டில் (International Congress of Mathematicians) மீர்ச்சாகானி உட்பட நான்கு பேருக்கு ஃபீல்ட்ஸ் பதக்கம் வழங்கப்பட்டது.
- இதன் மூலம் ஃபீல்ட்ஸ் பதக்கம் பெற்ற முதல் ஈரான் நாட்டவர் மற்றும் முதல் பெண்மணி என்ற பெருமையை முனைவர் மரியாம் மீர்ச்சாகானி பெற்றார்.
- இதற்கு முன் இப்பதக்கத்தை வென்ற 52 பேரும் ஆண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
- ஃபீல்ட்ஸ் பரிசு மற்றும் ஏபெல் பரிசு (Abel Prize) ஆகிய இரண்டும் கணிதத்தின் நோபல் பரிசு எனப்படும்.
- ஃபீல்ட்ஸ் பதக்கம் கனடியக் கணிதவியலாளரான ஜான் சார்லஸ் ஃபீல்ட்ஸ் என்பவரால் 1924இல் முன்மொழியப்பட்டது. இந்தப் பதக்கத்துடன் 1500 கனடா டாலர்கள் பரிசுத் தொகையும் வழங்கப்படும்.
- 40 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மட்டுமே ஃபீல்ட்ஸ் பதக்கம் அளிக்கப்படுவதும், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படுவதும் இதன் தனிச் சிறப்பாகக் கருதப்படுகிறது.

### சங்கீத கலாநிதி விருது: சி.என். ரவிகிரண்

- சித்திரவீணை கலைஞர் என். ரவிகிரணுக்கு "சங்கீத கலாநிதி" விருது வழங்கப்பட்டுள்ளது. மியூசிக் அகடமி வழங்கும் மழலை மேதைகளுக்கான உதவித்தொகையினை 1996 ஆம் ஆண்டு பெற்றவர்

ரவிகிரண்.

- டிசம்பர் 15 முதல் ஜனவரி 1 வரை நடைபெறும் மியூசிக் அகாடமியின் 91ஆவது ஆண்டு மாநாட்டுக்கு என். ரவிகிரண் தலைமை தாங்குவார். அவருக்கு ஜனவரி 1-ஆம் தேதி நடைபெறும் சதஸ் விழாவில் விருது வழங்கப்படும்.

*சதஸ் விழாவின் இந்த ஆண்டிற்கான முக்கிய விருதுகள்*

| | |
|---|---|
| சங்கீத கலா ஆச்சார்யா விருது | ▪ மிருதங்கம் கலைஞர் - வி. கமலாகர் ராவ்<br>▪ பாடகர் - ராதா நம்பூதிரி |
| டிடிகே (TTK Awards)விருதுகள் | ▪ ஓதுவார் பாரம்பரியத்தைச் சேர்ந்த முத்து கந்தசாமி தேசிகர்<br>▪ கடம் கலைஞர் - சுகன்யா இராமகோபால் |
| இசை வல்லுனர் விருது | டி.எஸ். சத்தியவதி |
| பப்பு வெங்கடராமையா விருது | திருவள்ளூர் பார்த்தசாரதி |

- ஜனவரி 3, 2018 இல் நடக்கும் நாட்டிய விழாவில் பரதநாட்டிய கலைஞர் லட்சுமி விஸ்வநாதனுக்கு நாட்டியத்துக்கான "நிருத்ய கலாநிதி விருது" வழங்கப்படுகிறது.

*சங்கீத கலாநிதி*

- கர்நாடக இசையில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு மியூசிக் அகாடமி ஆண்டுதோறும் விருதுகள் வழங்கி கவுரவிக்கிறது. இதில் மிக உயரிய விருதாக கருதப்படுவது "சங்கீத கலாநிதி" விருது ஆகும். சங்கீத என்பதற்கு "இசை" என்றும் கலாநிதி என்பதற்கு பெருஞ்செல்வம் என்பதும் பொருள்.

## மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சராக ஸ்மிருதி இரானி: (18.07.2017)

- மத்திய ஜவுளித்துறை அமைச்சராக பதவியில் உள்ள திருமதி. ஸ்மிருதி இரானி, அவர்கள் தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சராக கூடுதல் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

## இந்திய வம்சாவளியைச் சேர்ந்த லில்லி சிங், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் புதிய நல்லெண்ணத் தூதராகத் தேர்வு

- நகைச்சுவை நடிகை , மற்றும் எழுத்தாளரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கனடா நாட்டுப் பெண்மணி லில்லி சிங், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் (United Nations Children's Fund - UNICEF/ யுனிசெப்) புதிய நல்லெண்ணத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இணையதள உலகில் "சூப்பர்வுமன்" என்று பிரபலமாக அழைக்கப்படும் லில்லி, இந்தியாவில் யுனிசெப் ஆதரவளிக்கும் குழந்தைகள் மற்றும் இளம் வயதினரை சந்தித்து உரையாடினர்.
- குழந்தைகள் மற்றும் இளம் வயதினர் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி எடுத்துரைக்க லில்லி தனக்குரிய தனித்துவமான டிஜிட்டல் முன்னிலையைப் (Digital Presence) பயன்படுத்த இருக்கிறார் .
- லில்லி , யூ-டியுப் உலகில் சுமார் மில்லியன் வாடிக்கையாளர்களை கொண்டுள்ள பிரபலம் ஆவார். இவரது "How To Be A Bawse: A Guide to Conquering Life" என்ற புத்தகம் உலகப் புகழ் பெற்றது ஆகும்.
- ஜூன் மாதம் ஃபோர்ப்ஸ் இதழ் பொழுதுபோக்கு உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர்களின் பட்டியலை வெளியிட்டது . இதில் லில்லி சிங் முதல் இடம் பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### டாட்டா குழுமத்தின் தலைவர் என்.சந்திரசேகரனுக்கு விருது

- "AIMA – JRD டாட்டா பெருநிறுவனத் தலைமை விருது", டாட்டா குழுமத்தின் தலைவரும் தமிழகத்தைச் சேர்ந்தவருமான என். சந்திரசேகரனுக்கு வழங்கப்பட்டது. இந்த விருதை அப்போதைய குடியரசு துணைத் தலைவர் ஹமீது அன்சாரி வழங்கினார்.
- அகில இந்திய மேலாண்மை சங்கம் (All India Management Association - AIMA)
- இந்திய அரசு மற்றும் தொழில்துறை நிறுவனங்களின் ஆதரவுடன், தொழில்முறை நிர்வாகத்தின் உச்சநிலை அமைப்பான அகில இந்திய மேலாண்மை சங்கம் 1957ல் தொடங்கப்பட்டது.

### ஆர்பிஐ உதவி மேலாளராக உமேஷ் யாதவ் நியமனம்

- இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான உமேஷ் யாதவ், இந்திய ரிசர்வ் வங்கியின் (ஆர்பிஐ) நாகபுரி கிளை உதவி மேலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

### உலக ரோபோடிக்ஸ் போட்டியில் இந்தியாவுக்கு இரண்டு விருதுகள்

- வாஷிங்டனில் நடைபெற்ற முதல் உலக ரோபாட்டிக்ஸ் ஒலிம்பியாட்டில் (First Global Robotics Olympiad) 157 நாடுகள் கலந்துகொண்டது. இதில் ஏழு மாணவர்களைக் கொண்ட இந்தியாவைச் சேர்ந்த குழு இரண்டு விருதுகளைப் வென்றுள்ளது
- மும்பையைச் சேர்ந்த மாணவர்கள் குழு வாஷிங்டன்னில் பர்ஸ்ட் குளோபல் ஒருங்கிணைத்த ஹாங் ஹெங் பொறியியல் வடிவமைப்பு விருது பிரிவில் தங்கப் பதக்கமும், சர்வதேச ரோபாட்டிக்ஸ் சவால் பிரிவில் வெண்கலப் பதக்கமும் வென்றுள்ளனர்.
- இந்த அணியின் இளைய உறுப்பினரான 15 வயது ராகேஸ் (Rahesh), இந்த அணிக்குத் தலைமை தாங்கினார்.
- இவர்கள் தயாரித்த ரோபோட்டுக்கு நியூட்ரினோ என்று பெயரிடப்பட்டுள்ளது. இது தரையில் கிடந்த ஆரஞ்சு மற்றும் நீல நிற பந்துகளை எடுத்து, வகைப்படுத்தியது. மேலும், 2.5 அடி வரையான தடைகளை ஏறிக் கடக்கவல்லது.
- பர்ஸ்ட் குளோபல் எனும் இலாப நோக்கம் இல்லாத தொண்டு நிறுவனம், அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணித ஆர்வத்தை தூண்ட ஆண்டுதோறும் ரோபோடிக் போட்டிகளை நடத்துகிறது
- இந்த உலக ரோபோடிக் போட்டியில், ஒலிம்பிக் பாணியில் ஒவ்வொரு நாட்டின் சார்பாக ஒரு அணி மட்டுமே பங்குபெறும்.
- வாஷிங்டன் டி.சியில் ஏற்பாடு செய்யப்பட்ட `FIRST Global Challenge 2017' இந்த ரோபாட்டிக்ஸ் ஒலிம்பியாட்டின் தொடக்கப் பதிப்பாக இருந்தது. அதில் 157 நாடுகள் பங்கேற்றன.
- அடுத்தாண்டுக்கான போட்டி மெக்சிகோவில் நடைபெற இருக்கிறது.

### இஸ்துமுஸ் ஆஃப் டைம் (Isthmus of time)

- துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி 21.07.17 அன்று, இஸ்துமுஸ் ஆஃப் டைம் (Isthmus of time) என்ற புத்தகத்தை வெளியிட்டார். இது இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி, அன்ஷுமன் கவுர் எழுதியுள்ள கவிதையின் தொகுப்பு ஆகும்.

### கோபால் பாக்லே - பிரதமர் அலுவலகத்தின் கூடுதல் செயலாளராக நியமனம்

- பிரதமர் அலுவலகத்தின் (PMO) கூடுதல் செயலாளராக (Joint Secretary), கேரபால் பக்லே அடுத்த 3 ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலை அமைச்சரவையின் நியமனங்கள் குழு (Appointments Commitee of the cabinet) வழங்கியுள்ளது.
- இதற்கு முன் இப்பதவியில் இருந்த வினய் மோகன் வத்ரா பிரெஞ்சு நாட்டின் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து கேரபால் பாக்லே இந்த பதவிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- பக்லே 1992 ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த வெளியுறவுத்துறை அதிகாரி ஆவார்.
- அமைச்சரவை நியமனங்கள் குழு
- அமைச்சரவையின் நியமனங்கள் குழுவானது, (Appointments Commitee of the cabinet). இந்திய அரசின் பல தலைமைப் பதவிகளுக்கு அரசு அதிகாரிகளை நியமனம் செய்கிறது.
- குழுவின் உறுப்பினர்கள்:
    - பிரதமர் (தலைவர்),
    - மத்திய உள்துறை அமைச்சர்.

### ரவீஷ் குமார்: வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் புதிய செய்தித் தொரடர்பாளர்

- கோபால் பக்லேவிற்கு பதிலாக, வெளியுறவுத் துறை அமைச்சகம், ரவீஷ் குமாரை புதிய செய்தித் தொடர்பாளராக நியமித்துள்ளது.
- வெளியுறவுத் துறையின் செய்தித் தொரடர்பாளராக நியமிக்கப்படுவதற்கு முன்பு, ஜெர்மனியின் பிராங்ஃபர்டிட்கான இந்தியாவின் தூதராக இருந்தவர் ரவீஷ் குமார்.

*<u>ரவீஷ் குமார் பற்றி</u>*

- 1971 இல் பிறந்தவர், ரவீஷ் குமார். மதுரா சாலையில் உள்ள தில்லி பப்ளிக் பள்ளியின் முன்னாள் மாணவர் ஆவார். தில்லி பல்கலைக்கழகத்தின் ஹன்ஸ்ராஜ் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றுள்ளார்
- 2013 ஆம் ஆண்டு முதல் பிராங்ஃபர்டில் தூதராக பணியாற்றிய குமார், இந்தோனேசியாவின் அதிகாரப்பூர்வ மொழியான பகாசாவில் (Bahasa) புலமைப் பெற்றவர்.
- இவர் இந்திய வெளியுறவுப் பணியில் 1995 இல் இணைந்தார் மற்றும் ஜகார்த்தாவில் இந்திய தூதரகத்தில் தனது பணியைத் தொடங்கினார். இதைத் தொரடர்ந்து, லண்டன் மற்றும் திம்புவில் அவர் பணியமர்த்தப்பட்டார்.

### முன்னாள் இஸ்ரோ தலைவர் யு.ஆர். ராவ் மரணம்

- முன்னாள் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழக (இஸ்ரோ) தலைவர் மற்றும் சர்வதேச அளவில் புகழ்பெற்ற விண்வெளி விஞ்ஞானி பேராசிரியர் யூ.ஆர்.ராவ் காலமானார்.
- 1984-1994 ஆண்டுகளில் ISRO தலைவராகப் பணியாற்றிய பேராசிரியர் ராவ், கடந்த ஆண்டு சர்வதேச விமான ஏவுகணை சம்மேளனத்தின் (IAF)ஹால்ஆஃப் ஃபேமில் நுழைந்தார்.
- மெக்ஸிகோவின் குவாடலஜாராவில் நடைபெற்ற IAF காங்கிரஸ் 2016-ல் கலந்து கொண்டார்.
- 2017 பத்மவிபூசன் விருது பெற்ற விஞ்ஞானி. நாட்டின் முதல் செயற்கைக் கோளான ஆர்யபட்டா உட்பட, குறைந்தபட்சம் 20 செயற்கைக்கோள்களை இந்தியா இவரது கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொண்டது.

- ராவ் அகமதாபாத்தில் உள்ள பிசிக்கல் ஆய்வகத்தின் ஆளும்குழுவின் தலைவராகப் பணியாற்றி வந்தார், மற்றும் திருவனந்தபுரத்தில் உள்ள இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் வேந்தர் ஆக இருந்தார் எனஇஸ்ரோ தெரிவித்துள்ளது. எம்ஐடியின் (MIT) ஆசிரிய உறுப்பினராகப் பணிபுரிந்தார். டல்லாஸில் உள்ள டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகவும் இருந்தார். 2013 இல் வாஷிங்டன்.டி.சி. வில் கவுரவிக்கப்பட்ட "சேட்டிலைட் ஹால்ஆஃப்ஃபேம்" விருதை அவர் பெற்றார்.

## புகையிலையைக் கைவிடும் திட்டம்: 20 லட்சம் பேர் பதிவு

- மத்திய அரசு அறிமுகம் செய்த புகையிலைப் பழக்கத்தைக் கைவிடும் திட்டத்தின் முதலாம் ஆண்டில் சுமார் 20 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு (டபிள்யூஹெச்ஓ/WHO) தெரிவித்துள்ளது.
- புகையிலைப் பொருள்களைப் பயன்படுத்தும் நபர்களிடையே அவற்றைக் கைவிடும் ஆர்வம் அதிகரித்துள்ளதைக் கவனித்த மத்திய அரசு, இதற்கென நாடு தழுவிய திட்டம் ஒன்றை கடந்த ஆண்டு (2016) ஜனவரி மாதம் தொடங்கியது. இப்பழக்கத்தைக் கைவிடுவோர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்வதற்கு வசதியாக இலவச தொலைபேசி எண் கடந்த ஆண்டு மே மாதம் அறிமுகம் செய்யப்பட்டது. இரண்டு மொழிகளில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் ஓராண்டில் சுமார் 20 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.
- அவ்வாறு பதிவு செய்தவர்களில் 12000 பேர் தொடர்புடைய விவரங்களை மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் ஆய்வு செய்தது. அப்போது புகை பிடிப்போர் மற்றும் புகை அல்லாத பிற வகையில் புகையிலையைப் பயன்படுத்துவோர் என்ற இரு பிரிவினருமே இப்பழக்கத்தைக் கைவிடும் விகிதம் சுமார் 7 சதவீதமாக இருந்ததைக் கண்டறிந்தது. இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு செல்லிடப்பேசி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது சிறந்த வழியாக உள்ளது. குறிப்பாக புகையிலையைக் கைவிடுவது தொடர்பாக குறுஞ்செய்திகளை அப்பழக்கத்துக்கு ஆளானவர்களுக்கு அனுப்பி வைப்பது நல்ல பலனை அளிக்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2018 ஆம்ஆண்டின் 8வது மேடை நாடக ஒலிம்பிக்கை (Theatre Olympics) இந்தியா நடத்துகிறது

- 2018 ஆம் ஆண்டின் 8வது மேடை நாடக ஒலிம்பிக்கை இந்தியா நடத்துகிறது.
- 2018 ஆம் ஆண்டில் நாடகக்கலை உலகின் மிகப்பெரிய திருவிழாவான 8 வது சர்வதேச மேடை நாடக ஒலிம்பிக் போட்டியை முதல்முறையாக இந்தியா நடத்துகிறது.
- இது மத்திய கலாச்சாரத்துறை அமைச்சகத்தின்(National School of Drama)கீழ் தேசிய நாடகப் பள்ளி மூலம் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- இத்திருவிழா பிப்ரவரி 17 முதல் ஏப்ரல் 08, 2018 (51 நாள் நிகழ்வு) வரை இந்தியா முழுவதும் 15 நகரங்களில் நடைபெறும்.
- 8 வது மேடை நாடக ஒலிம்பிக்கின் கருப்பொருள்- "நட்பின்கொடி" (Flag of Friendship).

### *மேடை நாடக ஒலிம்பிக்ஸ்*

- 1993 ஆம் ஆண்டில் கிரேக்கத்தில் உள்ள டெல்ஃபி நகரில் முதல் சர்வதேச நாடக விழாவாக மேடை நாடக ஒலிம்பிக்ஸ் நிறுவப்பட்டது.

| எண் | நடத்தும்நாடு | ஆண்டு |
|---|---|---|
| 1 | கிரீஸ் | 1995 |
| 2 | ஜப்பான் | 1999 |
| 3 | ரஷ்யா | 2001 |
| 4 | துருக்கி (இஸ்தான்புல்) | 2006 |
| 5 | தென்கொரியா (சியோல்) | 2010 |
| 6 | சீனா (பெய்ஜிங்) | 2014 |
| 7 | போலந்து ரோக்லா (Wroclaw) | 2016 |
| 8 | இந்தியா | 2018 |

## கூகுள் தாய் நிறுவனமான 'ஆல்ஃபபெட் இயக்குநர்களில் ஒருவரானார் சுந்தர் பிச்சை


- 'ஆல்ஃபபெட் நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி (Chief Executive Officer, CEO/சிஇஓ) சுந்தர்பிச்சை (45) நியமிக்கப்பட்டுள்ளார். ஆல்ஃபபெட் நிறுவனம் கூகுளின் தாய் நிறுவனமாகும்.



- கூகுள் சிஇஓவாக மிகச் சிறப்பாக பணியாற்றி வருபவர் சுந்தர்பிச்சை. அவரது முயற்சியால் சிறந்தவளர்ச்சி, கட்டமைப்புகள், வழங்கும் சேவைகளில் புத்தாக்கம் ஆகியவற்றை கூகுள் கண்டது. கூகுள் நிறுவனத்தில்நீண்ட காலமாகப் பணி புரிந்து வரும் சுந்தர் பிச்சை, சென்னையில் பிறந்தவர் ஆவார்.

## புகழ்பெற்ற விஞ்ஞானி யஷ்பால் காலமானார்

- சிறந்த விஞ்ஞானியும், பல்கலைக்கழக மானியக் குழுவின் (University Grants Commission) முன்னாள் தலைவருமான யஷ்பால் உடல்நலக் குறைவு காரணமாக காலமானார்.



- டாடா அடிப்படை ஆராய்ச்சி மையத்தில் (Tata Institute of Fundamental Research - TIFR) தனது வாழ்க்கைப் பயணத்தை தொடங்கிய யஷ்பால், நாட்டில் குடிமகனுக்கு அளிக்கப்படும் மிக உயரிய விருதான பத்மவிபூஷண் விருதைப் பெற்றுள்ளார். இவர் காஸ்மிக் கதிர்கள் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டார்.

## இலங்கை தமிழ் சமூக சேவகருக்கு மகஸேஸே விருது

- ஆசிய நோபல் பரிசு என்று அறியப்படும் மகஸேஸே விருதுக்கு இலங்கையைச் சேர்ந்த தமிழ் சமூக சேவகர் ஞானதீபம் ஷண்முகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- மேலும், பல்வேறு துறைகளில் சிறந்த சேவையாற்றிய 4 நபர்களுக்கும், பிலிப்பின்ஸைச் சேர்ந்த நாடகக் குழுவுக்கும் இவ்வாண்டுக்கான விருது அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- மனநல ஆலோசகரான ஞானதீபம் 'கெத்ஸி' ஷண்முகம் ஈழப்போர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கி வருகிறார். குறிப்பாக, இலங்கையில் வன்முறையாலும் இயற்கை இடர்பாடுகளாலும் மன நலன் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் அவர் உளவியல் ரீதியான ஆலோசனைகளை வழங்கி வருகிறார். ஆதரவற்ற பெண்கள், குழந்தைகளிடையே கெத்ஸி ஷண்முகம் ஆற்றிய அயராத சேவையைப் பாராட்டி அவருக்கு விருது வழங்கப்படுவதாக மகஸேஸே விருதுகளை அளிக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.
- கெத்ஸி ஷண்முகம் தவிர, கம்போடியாவில் உள்ள உலகப் புகழ் பெற்ற அங்கோர் வாட் கோயில் வளாகத்தைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்காற்றிய சரித்திர ஆய்வாளர் யோஷியாகி இஷிஸாவா (79), ஏழைகளுக்கு இலவச உணவு அளிக்கும் திட்டத்தை தொடங்கிய டோனி டே (70), இந்தோனேசிய பழங்குடியினத்தவரிடையே தொண்டாற்றி வரும் ஆப்டன் நபாபன் (53), பிலிப்பின்ஸ் ஏற்றுமதியை அதிகரிக்க உதவிய வழக்குரைஞர் லிலியா டிலீமா (76) ஆகியோருக்கு இவ்வாண்டு மகஸேஸே விருது அளிக்கப்படுகிறது.
- இவர்களுடன், பிலிப்பின்ஸில் மேடை நாடகங்கள் மூலம் அரசியல், சமூக எழுச்சி ஏற்படும் வகையில் கடந்த 50 ஆண்டுகளாக இயங்கி வரும் பிலிப்பீன் தேசிய கல்வி நாடக சங்கத்துக்கும் விருது வழங்கப்படுகிறது.

## முன்னாள் அமைச்சர் அஸ்வனி குமாருக்கு ஜப்பான் விருது

- ஜப்பான்-இந்தியா உறவுகளை வளர்ப்பதில் பெரும்பங்காற்றிய முன்னாள் அமைச்சர் அஸ்வனி குமாருக்கு கௌரவமிக்க 'ஆர்டர் ஆஃப் திரைசிங் சன்' (Order of the Rising Sun) என்றவிருது வழங்கப்பட்டது.
- விருதின் பிரிவு : Grand Cordon of the Order of the Rising Sun.
- 'ஆர்டர் ரைசிங் சன்' விருதுகளின் மிக உயரிய பிரிவு 'கிராண்ட் கோர்டன்' என்பது

குறிப்பிடத்தக்கது . இதற்கு முன் இந்த விருதை இந்தியத் தொழிலதிபர் ரத்தன் டாட்டாபெற்றுள்ளார்.

- 2013 ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டின் பேரரசரும் பேரரசியும் இந்தியா வந்திருந்தபொழுது, அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கின் சிறப்பு தூதராக அஸ்வனி குமார் பணியாற்றினார். அவர்களின் அரசுமுறை பயணம் வெற்றியடைய குமார் கணிசமான பங்காற்றினார் . மேலும் 2007ல் ஜப்பான்பிரதமர் ஷின்ஜோ அபேயின் அரசுமுறை இந்தியப் பயணத்தின்பொழுது, அஸ்வனி குமார் அவருக்கு உடன்செல்லும் அமைச்சராகப் (Accompanying Minister ) பணியாற்றினார்.



- இந்திய வணிக மற்றும் தொழிலகக் கழகங்கள் கூட்டமைப்பின் (FICCI) பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களம் (இந்திய – ஜப்பான்), 2005 ஆம் ஆண்டு அப்போதைய ஜப்பான் பிரதமர் ஜூனிசிரோ கொய்சுமி வருகையின் போது நிறுவப்பட்டது . இதன் தலைவராக அஸ்வனி குமார் பணியாற்றியுள்ளார்.ஜப்பானின் STS குழுமத்தின் உறுப்பினராக இருந்தபோது, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையில் ஜப்பான்-இந்திய உறவுகளை மேம்படுத்துவதில் குமார் பெரிய பங்களித்திருக்கிறார்.

# விளையாட்டுச்செய்திகள்

### விம்பிள்டன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் முகுருஸா சாம்பியன்

- விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் முதல்முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளார் ஸ்பெயினின் கார்பைன் முகுருஸா.
- அதேநேரத்தில் விம்பிள்டனில் சாம்பியன் பட்டம் வென்ற மூத்த வீராங்கனை என்ற சாதனையை படைக்கும் வாய்ப்பை இழந்தார் அமெரிக்காவின் 37 வயது வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ்.
- கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வந்தது. இதில் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் இறுதிச் சுற்றில் கார்பைன் முகுருஸா, வீனஸ் வில்லியம்சை தோற்கடித்தார்.
- இதன்மூலம் விம்பிள்டனில் பட்டம் வென்ற 2-ஆவது ஸ்பெயின் வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார் முகுருஸா.
- முதல் நபர் முகுருஸாவின் தற்போதைய பயிற்சியாளர் கான்சிடா மார்ட்டினிஸ் ஆவார். அவர் 1994-இல் நடைபெற்ற விம்பிள்டன் இறுதிச் சுற்றில் மார்ட்டினா நவரத்திலோவாவை வீழ்த்தி சாம்பியன் ஆனது குறிப்பிடத்தக்கது.
- இது முகுருஸாவின் இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.

**உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் தங்கம் வென்றார் சுந்தர் சிங்**

- பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் சுந்தர் சிங் குர்ஜார் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- லண்டனில் நடைபெற்று வந்த இந்தப் போட்டியில் குர்ஜார் 60.36 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார்.
- இதன்மூலம் 2017 பாரா தடகள சாம்பியன் ஷிப்பில் இந்தியாவுக்கு முதல் பதக்கம் பெற்றுத் தந்தவர் என்ற பெருமையையும் பெற்றிருக்கிறார்.

**2017 விம்பிள்டன் டென்னிஸ் ரோஜர் ஃபெடரர் 8-ஆவது முறையாக சாம்பியன்**

- விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர் 8-ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றார்.
- இதன்மூலம் விம்பிள்டனில் அதிகமுறை பட்டம் வென்றவர் என்ற வரலாற்று சாதனையைப் படைத்தார்.
- முன்னதாக 7 பட்டங்களுடன் பீட் சாம்ப்ராஸ், வில்லியம் ரென்ஷா ஆகியோருடன் முதலிடத்தைப் பகிர்ந்திருந்த ஃபெடரர் இப்போது அவர்களை பின்னுக்குத் தள்ளியிருக்கிறார்.
- கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வந்தது. இதில் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் இறுதிச் சுற்றில் ரோஜர் ஃபெடரர் குரோஷியாவின் மரின் சிலிச்சை தோற்கடித்தார்.

*விம்பிள்டனில் வென்ற மூத்த வீரர்*

- "ஓபன் எராவில்" விம்பிள்டன் சாம்பியன் பட்டம் வென்ற மூத்த வீரர் என்ற பெருமை 35 வயதான ரோஜர் ஃபெடரர் வசமானது.
- முன்னதாக விம்பிள்டனில் சாம்பியன் பட்டம் வென்ற மூத்த வீரர் என்ற சாதனை அமெரிக்காவின் ஆர்தர் ஆஷ் வசம் இருந்தது.
- அவர் 1975-இல் விம்பிள்டனில் பட்டம் வென்றபோது அவருக்கு வயது 32.
- இந்த விம்பிள்டன் தொடரில் ரோஜர் ஃபெடரர் அனைத்து ஆட்டங்களிலும் நேர் செட்களிலேயே வென்றார்.
- இதன்மூலம் கடந்த 41 ஆண்டுகளில் ஒரு செட்டைக் கூட இழக்காமல் விம்பிள்டனில் சாம்பியன் பட்டம் வென்றவர் என்ற சாதனையை படைத்திருக்கிறார்.
- இதற்கு முன்னர் 1976-இல் ஜார் போர்க் ஒரு செட்டைக் கூட இழக்காமல் விம்பிள்டனில் சாம்பியன் பட்டம் வென்றிருந்தார்.

*5 ஆண்டுகளுக்குப் பிறகு*

- கடைசியாக 2012-இல் விம்பிள்டனில் சாம்பியன் பட்டம் வென்ற ஃபெடரர் அதன்பிறகு இரு முறை இறுதிச் சுற்று வரை முன்னேறிய போதிலும் அவரால் பட்டம் வெல்ல முடியவில்லை. ஜோகோவிச்சிடம் தோற்று வெளியேறினார். எனினும் நம்பிக்கையை இழக்காத ஃபெடரர் இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஆஸ்திரேலிய ஓபனில் வாகை சூடினார்.
- அதன்பிறகு விம்பிள்டனை கருத்தில் கொண்டு முக்கியப் போட்டிகளில் மட்டுமே பங்கேற்று வந்த நிலையில் தற்போது தனது கனவு போட்டியான விம்பிள்டனில் சாம்பியன் பட்டம் வென்று வரலாறு படைத்துள்ளார்.

*19 கிராண்ட்ஸ்லாம்*

- ரோஜர் ஃபெடரர் ஆஸ்திரேலிய ஓபனில் 5, பிரெஞ்சு ஓபனில் 1, விம்பிள்டனில் 8, அமெரிக்கா ஓபனில் 5 என மொத்தம் 19 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ளார்.
- ஆடவர் ஒற்றையர் பிரிவில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றவர் என்ற சாதனையும் ஃபெடரர் வசமேயுள்ளது.

*விம்பிள்டனில் இதுவரை*

- விம்பிள்டனில் முதல் முறையாக 2003-இல சாம்பியன் பட்டம் வென்ற ரோஜர் ஃபெடரர், இப்போது 8-ஆவது பட்டத்தைக் கைப்பற்றி வரலாறு படைத்திருக்கிறார்.
- விம்பிள்டனில் இதுவரை ஃபெடரர் வென்ற பட்டங்களும் இறுதிச் சுற்றில் அவரிடம் தோற்றவர்களும்,
    - 2003: மார்க் பிலிப்போஸிஸ் (ஆஸ்திரேலியா)
    - 2004: ஆன்டி ரோடிக் (அமெரிக்கா)
    - 2005: ஆன்டி ரோடிக் (அமெரிக்கா)
    - 2006: ரஃபேல் நடால் (ஸ்பெயின்)
    - 2007: ரஃபேல் நடால் (ஸ்பெயின்)
    - 2009: ஆன்டி ரோடிக் (அமெரிக்கா)
    - 2012: ஆன்டி முர்ரே (பிரிட்டன்)
    - 2017: மரின் சிலிச் (குரோஷியா)

**ஸ்குவாஷ் விக்டோரியா ஓபன்: ஹரிந்தர் சாந்து சாம்பியன்**

- விக்டோரியா ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்திய வீரர் ஹரிந்தர் சாந்து சாம்பியன் பட்டம் வென்றார்.
- ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெற்ற இறுதிச் சுற்றில் ஹரிந்தர் சாந்து ஆஸ்திரேலியாவின் ரெக்ஸ் ஹெத்ரிக்கை வீழ்த்தினார்.
- கடந்த வாரம் தெற்கு ஆஸ்திரேலிய ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற சாந்து இப்போது விக்டோரியா ஓபனில் சாம்பியனாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**சர்வதேச பாரா தடகளம்: அமித் குமாருக்கு வெள்ளிப் பதக்கம்**

- சர்வதேச பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் ஆடவர் "கிளப் த்ரோ" போட்டியில் இந்தியாவின் அமித் குமார் சரோஹா வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- லண்டனில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் அமித் குமார் தனது 3- ஆவது வாய்ப்பில் 30.25 மீட்டர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தை தட்டிச் சென்றார். இதன்மூலம் அவர் ஆசிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.
- இதே பிரிவில் செர்பியாவின் ஜெல்கோ டிமிட்ரிஜெவிச் 31.99 மீ. தூரம் எறிந்து உலக சாதனையுடன் தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார்.

**ஜூனியர் ஜூடோ: இந்தியாவுக்கு 3 வெண்கலம்**

- கிர்கிஸ்தானில் சமீபத்தில் நிறைவடைந்த ஆசிய ஜூனியர் ஜூடோசாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவுக்கு 3 வெண்கலப் பதக்கங்கள் கிடைத்தது.
- இதில் மகளிருக்கான 44 கிலோ எடைப் பிரிவில் போட்டியிட்ட உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த

பிரீத்தி, 52 கிலோவுக்கு உள்பட்ட எடைப் பிரிவில் பங்கேற்ற தில்லியின் பிங்கி பல்ஹாரா, 78 கிலோவுக்கு மேற்பட்ட எடைப் பிரிவில் பங்கேற்ற துலிகா மான் ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

## கிரிக்கெட் மகளிர் உலகக் கோப்பை: இங்கிலாந்து சாம்பியன்

- மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிஇங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாடுகளில் நடைபெற்று வந்தது. அதன் இறுதி ஆட்டத்தில் 9 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி 4-ஆவது முறையாக கோப்பையைக் கைப்பற்றியது இங்கிலாந்து.
- அதேநேரத்தில் இரண்டாவது முறையாக உலகக் கோப்பை இறுதி ஆட்டத்தில் விளையாடிய மிதாலி ராஜ் தலைமையிலான இந்திய அணி, முதல்முறையாக கோப்பையை கைப்பற்றி வரலாறு படைக்கும் வாய்ப்பை நழுவவிட்டது.
- மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற இங்கிலாந்து அணிக்கு ரூ.4.25 கோடியும், இரண்டாவது இடம்பிடித்த இந்திய அணிக்கு ரூ.2.12 கோடியும் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டது.

## 'மும்பை ஓபன்: 5 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் மகளிர் டென்னிஸ் போட்டி

- இந்தியாவில் 5 ஆண்டுகளுக்குப் பிறகு மகளிர் டென்னிஸ் போட்டி (டபிள்யூ.டி.ஏ/WTA) வரும் நவம்பர் மாதம் மும்பையில் நடைபெறவுள்ளது.
- ஆஸ்திரேலிய ஒபனுக்கு முன்பாக, இந்தப் போட்டி இந்தியாவில் நடைபெறும். உலகத் தரவரிசையில் 11 முதல் 50 இடங்களுக்குள் இருக்கும் வீராங்கனைகள் இப்போட்டியில் கலந்து கொள்வர்.
- இதனிடையே, இந்தியாவில் நடைபெற்று வந்த ஒரே ஏடிபி போட்டியான சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியை, மும்பை டென்னிஸ் சங்கம் சமீபத்தில் புனேவுக்கு கொண்டு வந்துள்ளது. அந்தப் போட்டி இனி மகாராஷ்டிர ஓபன் என்ற பெயரில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் முதல்முறையாக 2021-இல் ஆடவர் குத்துச்சண்டை உலக சாம்பியன்ஷிப்

- இந்தியாவில் முதல்முறையாக வரும் 2021-ஆம் ஆண்டில் ஆடவருக்கான உலக குத்துச்சண்டை சாம்பியின்ஷிப் போட்டி நடைபெறவுள்ளது.
- அதே வேளையில், மகளிருக்கான உலககுத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி அடுத்த ஆண்டு (2018) இந்தியாவில் நடைபெறுகிறது.
- 2019-ஆம் ஆண்டுக்கான ஆடவர் குத்துச்சண்டை உலகசாம்பியன்ஷிப் போட்டி ரஷியாவின் சோச்சி நகரில் நடைபெறும். 2021-ஆம் ஆண்டுக்கான சாம்பியன்ஷிப் இந்தியாவின் புதுதில்லியில் நடைபெறும்.
- அதேபோல், 2018-ஆம் ஆண்டுக்கான மகளிர் குத்துச்சண்டை உலக சாம்பியன்ஷிப் போட்டி இந்தியாவிலும், 2019-ஆம் ஆண்டுக்கான சாம்பியன்ஷிப் போட்டி துருக்கியிலும் நடைபெறும்.
- இந்தியாவில் ஆடவர் குத்துச்சண்டை உலகசாம்பியன்ஷிப் போட்டி இதுவரைநடத்தப்படவில்லை. எனினும், 2006-ஆம் ஆண்டில் மகளிருக்கான உலக சாம்பியன்ஷிப் போட்டி நடத்தப்பட்டது.

## சர்வதேச குத்துச்சண்டை: சிவ தாபா, மனோஜுக்கு தங்கம்

- செக்.குடியரசில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் சிவ தாபா, மனோஜ் குமார் உள்ளிட்ட 5 பேர் தங்கப் பதக்கம் வென்றனர்.

- ஆடவர் 60 கிலோ எடைப் பிரிவில் பங்கேற்ற சிவ தாபா தனது இறுதிச் சுற்றில் 5-0 என்ற புள்ளிகள் கணக்கில் ஸ்லோவேக்கியாவின் பிலிப் மெஸ்ஸரோசை தோற்கடித்தார்.
- 69 கிலோ எடைப் பிரிவில் பங்கேற்ற மனோஜ் குமார் 5-0 என்ற புள்ளிகள் கணக்கில் செக் குடியரசின் டேவிட்டை தோற்கடித்து தங்கம் வென்றார்.
- 91 கிலோ எடைப் பிரிவில் பங்கேற்ற இந்தியாவின் சதீஷ் குமார் ஜெர்மனியின் மேக்ஸ் கெல்லரை வீழ்த்தி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
- 52 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் அமித்குமார் பாங்கல் தனது இறுதிச் சுற்றில் சகநாட்டவரான கவிந்தர் பிஸ்ட்டை தோற்கடித்து தங்கம் வென்றார்.
- கௌரவ் பிதுரி (56 கிலோ) 5-0 என்ற புள்ளிகள் கணக்கில் போலந்தின் இவானோவ் ஜெரோஸ்லாவை வீழ்த்தி தங்கம் வென்றார்.
- அதே நேரத்தில் இந்தியாவின் கவிந்தர் பிஸ்ட், மணீஷ் பன்வார் (81 கிலோ எடைப் பிரிவு) ஆகியோர் வெள்ளிப் பதக்கமும், சுமித் சங்வான் (91 கிலோ எடைப் பிரிவு) வெண்கலமும் வென்றனர்.

# இதரச் செய்திகள்

## வாடிக்கையாளர் மனநிறைவு குறியீடு: ராய்ப்பூர் சுவாமி விவேகானந்தா விமான நிலையம் முதலிடம்

- சத்தீஸ்கர் மாநில தலைநகர் ராய்ப்பூரில் உள்ள சுவாமி விவேகானந்தா விமான நிலையம், 49 விமான நிலையங்களினை உள்ளடக்கிய வாடிக்கையாளர் மனநிறைவு குறியீடு [Customer Satisfaction Survey: CSI] கணக்கெடுப்பில் முதலிடம் பெற்றுள்ளது.
- இதன் அடுத்தடுத்த இடங்களை உதய்ப்பூர் (2), அமிர்தசரஸ் (3) மற்றும் டேராடூன் (4) விமான நிலையங்கள் பெற்றுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில், ராய்ப்பூர் விமான நிலையம் ஆனது இந்த அங்கீகாரத்தை மூன்றாவது முறையாகப் பெறுகிறது.

### *வாடிக்கையாளர் மனநிறைவு குறியீடு கணக்கெடுப்பு*

- வாடிக்கையாளர் மனநிறைவு என்பது இந்திய வானூர்தி நிலைய ஆணையத்தின் (Airport Authority of India - AAI) முக்கிய செயல்திறன் நோக்கம் ஆகும்.
- இதனை மதிப்பீடு செய்ய இந்திய வானூர்தி நிலைய ஆணையம் சுதந்திரமான அமைப்பு ஒன்றை நியமித்து வாடிக்கையாளர் மனநிறைவு குறியீடு கணக்கெடுப்பை (CSI Survey) மேற்கொள்கிறது. போக்குவரத்து, பயணிகளின் வசதிகள், தூய்மை, வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற பல்வேறு அளவீடுகள் இந்தக் கணக்கெடுப்பில் அடங்கும்.

### *சுவாமி விவேகானந்தா விமான நிலையம்*

- சுவாமி விவேகானந்தா விமான நிலையமானது ராய்ப்பூர் மற்றும் நயா ராய்ப்பூர் இடையே மானா எனும் இடத்தில் அமைந்துள்ளது.
- இந்த விமான நிலையமானது இந்தியாவின் பரபரப்பான விமான நிலையங்கள் பட்டியலில் பயணிகள் போக்குவரத்து அளவீட்டின் அடிப்படையில் 28வது இடத்திலும் "விமானங்களின்" இயக்கத்தின் அளவீட்டு அடிப்படையில் 31வது இடத்திலும் உள்ளது.
- சுவாமி விவேகானந்தர் தம்முடைய இளம் வயதின் இரண்டு ஆண்டுகளை ராய்ப்பூரில் கழித்தார். அதன் நினைவாக ராய்ப்பூர் விமான நிலையம் என்ற பெயர் 2012ஆம் ஆண்டு முதல் சுவாமி விவேகானந்தா விமான நிலையம் என்று அழைக்கப்பெறுகிறது.

### தேசியத் திறன் மேம்பாட்டு இயக்கத்தின் இரண்டாம் ஆண்டு விழா

- மத்திய திறன் மேம்பாட்டு அமைச்சகத்தின் (Ministry of Skill Development and Entrepreneurship - MSDE) சார்பில் தேசிய திறன் மேம்பாட்டு இயக்கத்தின் (Skill India Mission) இரண்டாம் ஆண்டு தொடக்க விழாவானது, சர்வதேச இளைஞர் திறன் தினத்தன்று (World Youth Skill Day) கொண்டாடப்பட்டது.
- இந்தியத் திறன் வளர்ச்சி இயக்கம் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் சிந்தையில் உதித்தத் திட்டம் ஆகும். முதல் சர்வதேச இளைஞர் திறன் தினமான 15 ஜூலை 2015 அன்று இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.
- சமீபத்தில் சரக்கு மற்றும் சேவை வரி பயிற்சியாளர்களுக்கு சான்றளிக்கக் கூடிய வகையில் முன்னோடித் திட்டமான பிரதான் மந்திரி கவுஷல் விகாஸ் யோஜனா வின் கீழ் தேசிய அளவிலான பயிற்சித் திட்டம் ஒன்றினை மத்திய திறன் மேம்பாட்டு அமைச்சகம் அறிவித்துள்ளது.

*திறன் இந்தியா (Skill India)*

- தொடங்கப்பட்ட நாள் : 15.07.2015
- குறிக்கோள் : 2022 க்குள் 40 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு திறன் பயிற்சி அளிப்பது.
- உள்ளடங்கும் திட்டங்கள்:
    - தேசிய திறன் மேம்பாட்டு இயக்கம் (National Skill Development Mission)
    - தேசிய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவுக் கொள்கை, 2015 (National Policy for skill development and Entrepreneurship, 2015)
    - பிரதான் மந்திரி கவுஷால் விகாஸ் யோஜனா (Pratan Mantri Kaushal Vikas Yojana, PMKVY)
    - திறன் வளர்ச்சிக்கான கடன் வழங்கும் திட்டம் (Skill Loan Scheme)


### சர்வதேச இளைஞர் திறன் தினம்

- டிசம்பர் 2014இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 15 ஆனது சர்வதேச இளைஞர் திறன் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
- இன்றைய இளைஞர்களுக்கு சிறந்த சமூக - பொருளாதார நிலை அமைய வேண்டும் என்பதும், வேலையின்மை மற்றும் தகுதிக்கு குறைவான வேலை (Under Employment) போன்ற பிரச்சனைகளை போக்குவதும் இந்த தினத்தின் இலக்கு ஆகும்.

### NCAER மாநில முதலீட்டு திறன் குறியீட்டில் தமிழ்நாடு பின்னடைவு (N-SIPI 2017)

- கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு (2017) மாநில முதலீட்டு திறன் குறியீட்டில் (State Investment Potential Index )தமிழ்நாடு மூன்று இடங்கள் சரிந்து ஆறாவது இடத்தை பிடித்துள்ளது.
- முதல் மூன்று இடங்களில் இருந்துவந்த தமிழகம், அந்த அங்கீகாரத்தை இம்முறை இழந்துள்ளது குறிப்பிடத்தக்கது . நில மற்றும் தொழிலாளர் விவகாரம் ; உள்கட்டமைப்பு , பொருளாதாரம் மற்றும் நிர்வாக சிக்கல்களை தாங்கள் பெருமளவு சந்திப்பதாக கணக்கெடுப்பில் பங்குபெற்ற நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.
- செயல்முறை பொருளியல் ஆராய்ச்சிக்கான தேசிய குழுவானது (National Council of Applied Economic Research, NCAER) மாநிலங்களின் தொழில்சார்ந்த போட்டித்திறனை ஆறு காரணிகளை கொண்டு மதிப்பிடும். அவை நிலம் , தொழிலாளர் , உள்கட்டமைப்பு , பொருளாதார சூழ்நிலை , அரசியல் நிலைத்தன்மை மற்றும் அரசாளுமை , மற்றும் வணிகக் கண்ணோட்டம்.

- 2016 இல் தமிழ்நாடு 6 இடங்கள் வீழ்ச்சி அடைந்து 18வது இடத்திற்கு சரிந்துள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டு , தொழில்துறைக் கொள்கை மற்றும் ஊக்குவிப்புத் துறையும் (Department of Industrial Policy and Promotion, DIPP) , உலக வங்கியும் இணைந்து வெளியிட்ட வணிக சீர்திருத்தங்கள் தரவரிசையில் (business reforms rankings ), தமிழ்நாடு 18 ஆவது இடத்தை பிடித்துள்ளது . இது வளர்ச்சியடைந்த மாநிலங்களில் கடைசி இடம் ஆகும் . நாட்டின் அந்நிய நேரடி முதலீட்டில் (Foreign Direct Investment, FDI) தமிழ்நாட்டின் பங்கு 9 சதவீதமாக குறைந்துள்ளது , 2015 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் பங்கு 13.1 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.




- 2016 இல் தமிழ்நாடு 6 இடங்கள் வீழ்ச்சி அடைந்து 18வது இடத்திற்கு சரிந்துள்ளது . கடந்த 2016 ஆம் ஆண்டு ,தொழில்துறைக் கொள்கை மற்றும் ஊக்குவிப்புத் துறையும் )Department of Industrial Policy and Promotion ,DIPP) , உலக வங்கியும் இணைந்து வெளியிட்ட வணிக சீர்திருத்தங்கள் தரவரிசையில் (business reforms rankings ) , தமிழ்நாடு 18 ஆவது இடத்தை பிடித்துள்ளது .
- இது வளர்ச்சியடைந்த மாநிலங்களில் கடைசி இடம் ஆகும் . நாட்டின் அந்நிய நேரடி முதலீட்டில்

(Foreign Direct Investment, FDI) தமிழ்நாட்டின் பங்கு 2.9 சதவீதமாக குறைந்துள்ளது ,2015 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் பங்கு 13.1 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## *தேசிய கவுன்சில் செயல் முறை சார்ந்த பொருளாதார ஆராய்ச்சி )NCAER)*

- NCAER இந்தியாவின் பழமையான மற்றும் மிகப்பெரிய சுயாதீன, இலாப, பொருளாதார கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் ஆகும். இக் குழுவின் தலைவர் நந்தன் நீலேக்கனி ஆவார். டாக்டர் சேகர் ஷா தற்போது NCAER இன் இயக்குநர் ஜெனரலாக உள்ளார்.
- இந்த நிறுவனம் 1956 ஆம் ஆண்டு போர்டு நிறுவனம், நிதி அமைச்சகம் மற்றும் டாடா சன்ஸ் ஆகியவற்றின் பண உதவியுடன் தொடங்கப்பட்டது. பண்டிட் ஜவஹர்லால் நேரு அக்டோபர் 31, 1959 ஆம் ஆண்டு தேசிய கவுன்சில் செயல் முறை சார்ந்த பொருளாதார ஆராய்ச்சி நிறுவனத்தின் அடிக்கல் நாட்டினார்.

## 2017 உலகளாவிய ஓய்வூதிய பாதுகாப்பு தரவரிசை

- சமீபத்தில் நட்டிக்சிஸ் (Natixis Global Asset Management) என்ற பிரெஞ்சு நிறுவனம் உலகளாவிய பணி ஓய்வுக் குறியீட்டை (Global Retirement) வெளியிட்டுள்ளது.
- நிதியளிப்புகள், சுகாதாரப் பராமரிப்பு, மற்றும் வாழ்க்கை தரத்தை விளக்கும் 18 செயல்திறன் குறிகாட்டிகளிலிருந்து, இந்தத் தரவரிசை ஒவ்வொரு நாட்டிற்கும் ஒட்டுமொத்த ஓய்வூதிய பாதுகாப்பு மதிப்பீட்டை வழங்குகிறது.
- இதில் நார்வே முதலிடம் வகிக்கிறது, சுவிட்சர்லாந்து மற்றும் ஐஸ்லாந்து அடுத்தடுத்த இடங்களை பெற்றுள்ளன.
- இந்தியா முந்தைய ஆண்டு தரவரிசையில் இருந்து எந்த மாற்றமும் இல்லாமல் 43 வது இடத்தில் உள்ளது.
- இதில் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரியா ஆகிய நாடுகள் மிகப்பெரிய வருடாந்திர சரிவைக் கண்டுள்ளன.

## ஜூலை 24 - வருமான வரி நாள்

- முதன்முறையாக 1860ல் வருமானவரி விதிக்கப்பட்ட நாளாகவும் அதே நாளில் வருமான வரி ஆணையம் நடைமுறைக்கு வந்தநாளாகவும் இருப்பதால் வருமான வரித்துறை ஜூலை 24ம் தேதியை வருடாந்திர வருமான வரி தினமாக கொண்டாடப்படுகிறது.
- நாடு முழுவதும் 540 இடங்களில் 745 அலுவலகங்களில் 58,000 க்கும் அதிகமான ஊழியர்கள் கொண்ட மத்திய அரசாங்கத்தின் மிகப்பெரிய துறைகளில் ஒன்றாகும்.
- வருமானவரித் துறை சுமார் 3.5 கோடிவரிசெலுத்துவோர்மற்றும் 10 கோடி நிரந்தர கணக்கு எண் (PAN) வைத்திருப்பவர்களை இது வாடிக்கையாளர்களாக கொண்டுள்ளது.

## புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

| S.No | Books | Author |
|---|---|---|
| 1 | India After Gandhi: The History of the World's Largest Democracy (revised and expanded edition of 2007) | Ramachandra Guha |
| 2 | Indira: India’s Most Powerful Prime Minister | Sagarika Ghose |

| | | |
|---|---|---|
| 3 | The Ministry of Utmost Happiness | Arundhati Roy |
| 4 | Lone Fox Dancing: My Autobiography | Ruskin Bond |
| 5 | How to Be a Bawse: A Guide to Conquering Life | Lilly Singh |
| 6 | An Unsuitable Boy | Karan Johar |
| 7 | Advice and Dissent: My Life in Public Service | Y.V. Reddy |
| 8 | Choices: Inside the Making of Indian Foreign Policy | Shiv shankar Menon |

### கார்கில் தினம் : ஜூலை26

- கார்கில் தினம் / கார்கில் விஜய் தீவாஸ்என்பதுஇந்திய ராணுவத்தின் விஜய்நடவடிக்கையின் (Operation Vijay) வெற்றியை பறைசாற்றும் விதமாக கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் (26 ஜூலை 1999 அன்று) பாகிஸ்தான் ஊடுருவாளர்களிடம் இழந்த, உயர்மட்ட புறக்காவல் அரண்களை இந்தியா கைப்பற்றியது .
- கார்கில் போர் 60 நாட்களுக்கு மேல் நீடித்து, 26 ஜூலை அன்று முடிவடைந்தது. இருபுறமும் பெரும் உயிரிழப்புகள் நேர்ந்த இப்போரின் இறுதியில் ,கார்கில் உடைமைகளை இந்தியா மீண்டும் கைப்பற்றியது.
- கார்கில் போர் வீரர்களின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 26 ஆம் தேதியன்று, கார்கில் விஜய் திவாஸ் கொண்டாடப்படுகிறது.
- இந்த நாள் கார்கில் - த்ராஸ் துறை (Kargil - Dras sector),மற்றும் தேசியத் தலைநகரான புது தில்லியில் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும்,"இந்தியா கேட்" பகுதியில் அமைந்துள்ள அமர் ஜவான் ஜோதி நினைவிடத்தில், போரில் மறைந்த வீரர்களுக்கு இந்தியப் பிரதமர் மரியாதை செலுத்துவார்.

### உலக கல்லீரல் அழற்சி தினம் (WORLD HEPATITIS DAY) : ஜூலை 28

- உலக கல்லீரல் அழற்சி தினம் – ஜூலை 28
- உலகளவில் , கல்லீரல் அழற்சி வைரஸ் நுண் உயிரிகளால் ஏற்படும் இழப்புகள் பற்றி விழிப்புணர்வை கொண்டுவரவும் , மாற்றத்தை ஏற்படுத்தவும் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது
- உலக சுகாதார அமைப்பானது (World Health Organization ,WHO),அதிகாரப்பூர்வமாக ஒப்புக் கொண்ட நான்கு நோய்கள் சார்ந்த உலக விழிப்புணர்வு தினங்களில் ஒன்றாகும்.
- கல்லீரல் அழற்சி வைரஸ் தாக்குதலால் உயிரிழப்போரின் எண்ணிக்கை , உலக அளவில் ஆண்டுதோறும் சுமார் 1.34 மில்லியன் ஆகும் . இது HIV / எய்ட்ஸ், காசநோய் அல்லது மலேரியா நோய் தாக்குதல்களால் உயிரிழப்போரின் எண்ணிக்கைக்கு இணையானது ஆகும்.
- ஹெப்படைடிஸ்-B , மற்றும் ஹெப்படைடிஸ்-C வகை வைரஸ்கள், உலகின் சுமார் 80% கல்லீரல் புற்றுநோயினை உண்டாகுகின்றன.
- 2017 கருப்பொருள்: ஹெப்படைடிஸ் ஒழிப்போம்.

### சர்வதேச புலிகள் தினம்: ஜூலை 29

- புலி பாதுகாப்பிற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ஜூலை மாதம் 29 ஆம் தேதி சர்வதேச புலிகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- இது 2010 ஆம் ஆண்டில் , செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் நடைபெற்ற புலிகளுக்கான உச்சி

மாநாட்டில் (Saint Petersburg Tiger Summit ) உருவாக்கப்பட்டது.

- புலிகளின் இயற்கையான வாழ்விடங்களை பாதுகாக்கவும் , உலகளவில் புலிகள் பாதுகாப்பு முறைமையை மேம்படுத்தவும், இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.